# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்








வார இதழ் – இலவசம் | www.arangamnews.com | வெள்ளி, வைகாசி 11, 2018. இதழ் - 12





## முள்ளிவாய்க்கால் நிகழ்வை தாம் நடத்துவதை தடுக்க அரசியல்வாதிகள் முனைவதாக பல்கலை மாணவர்கள் குற்றச்சாட்டு

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் மாணவர்களின் தூர நோக்குடனான செயற்பாடுகளுக்கு சில அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தின் மூலம் தடைபோட நினைப்பதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை கிழக்கு பல்கலைக்கழக மாணவர் அமைப்புடன் இணைந்து தாம் நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ள யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இளைய சமூகம் உணர்வுபூர்வமான விடயங்களில் நுழைந்துவிட்டால் தமது சுயலாப அரசியலுக்கு அது பாதகமாக அமைந்துவிடும் என்ற காரணத்தினாலேயே அரசியல்வாதிகள் இதற்கு தடைபோட முயலுவதாக மாணவர்கள் தமது அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வடக்கு மாகாண சபை இதனை நடத்த முற்பட்டால், முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு களங்கம் கற்பிக்கும் வகையிலான பழைய நிகழ்வுகள் மீண்டும் நடக்கலாம் என்ற அச்சம் தமக்கு இருப்பதாகவும் மாணவர்கள் கூறியுள்ளனர்.

இதனால், தாமே இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளை பொதுமக்களுடன் சேர்ந்து நடத்தப்போவதாக மாணவர்களின் அறிக்கை கூறுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிகராக மக்களை ஒன்றிணைத்து, இந்த நிகழ்வை நடத்த தாம் அருகதை உடையவர்களா என்பதை அரசியல்வாதிகள் ஒவ்வொருவரும் (குறிப்பாக வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள்) தமது மனசாட்சியை கேட்டுப் பார்க்க வேண்டும் என்றும் மாணவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் நிகழ்வை நடத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு செய்தி கூறல், நிகழ்வில் அரசியல் கலப்பதை தடுத்து அதன் புனிதத்தைக் காத்தல், மக்களின் இழப்பில் எவரும் அரசியல் லாபம் காண்பதை தடுத்தல், போன்ற காரணங்களுக்காக தாங்கள் மாணவர்கள் இதனை நடத்த எத்தனிப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

### பல்கலை மாணவர் நிகழ்விலேயே கலந்துகொள்வோம் என்கிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்படும் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளிலேயே தாம் கலந்துகொள்வோம் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறியுள்ளது.

வட மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்படும் முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், பல்கலைக்கழக


தொடர்ச்சி... (பக்கம் -06 )


## பொதுவேட்பாளரை நிறுத்த மீண்டும் முயற்சி

எதிர்வரும் 2020ம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் ஒருமுறை பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவிருந்தது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுகாதார அமைச்சில் இந்த கலந்துரையாடல் நடைபெறவிருந்ததாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

2010ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அப்போது


தொடர்ச்சி... (பக்கம் -19)








## வடமாகாண முதலமைச்சர் கவலை



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாடு மன வருத்தத்தைத் தருகின்றது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் முன்னதாக தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நிகழ்வை ஒன்றிணைந்து முன்னெடுப்பது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நேற்று முந்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடல் பங்கேற்று கருத்துக்களை வழங்குமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு முதலமைச்சர் அழைப்புவிடுத்திருந்தார். எனினும் முதலமைச்சரின் அழைப்பை ஏற்பதில்லை எனவும் கலந்துரையாடலில் பங்கேற்பதில்லை எனவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தீர்மானித்தது.

அவர்களின் இந்தச் செயற்பாடு தொடர்பில் கருத்துவெளியிட்ட போதே வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் துரதிஷ்டவசமாக இன்றைய கலந்துரையாடலுக்கு வராமல்விட்டுவிட்டார்கள். இது எங்களுக்கு மிகவும் மன வருத்தத்தைத் தருகின்றது. மாணவர்கள் எங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. பல்கலைக்கழகத்துக்கு ஊடாக வந்தவர்கள்தான் நாங்களும். ஆகவே அவர்கள் எங்களுக்கு எதிரானவர்கள் அல்ல.

ஏதோ சில பிழையான கருத்துக்கள் அவர்களை ஆட்டிப்படைப்பதாக நான் காண்கின்றேன். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தும் எண்ணம் அவர்களுக்கு இருக்கின்றது என்றால், முதன்முதலில் எம்முடன் வந்து கலந்தாலோசித்திருக்கலாம். 2-3 மாதங்களுக்கு முன்னர் வந்து, "இவ்வாறு நாம் செய்ய இருக்கின்றோம். எங்களுக்கு செய்வதற்கு பிரியமாகவிருக்கின்றது" எனக் கூறியிருக்கலாம். எங்களுடைய உறுப்பினர்களையும் சேர்த்து அவர்களுடன் பேசி, நாங்கள் அதனைக் கொண்டு நடத்தியிருக்கலாம்.

"நாங்கள் செய்யப்போகின்றோம் எல்லோரும் வந்து சேருங்கள்" என்று அவர்கள் கூறியது வருத்தப்படவேண்டிய செயல். ஏனெனில் ஒவ்வொருவரும் வந்து சொல்லலாம், நாங்கள் செய்கின்றோம் - நீங்கள் வந்து சேருங்கள் என்று.

உத்தியோகபூர்வமாகத்தான் நாம் இந்த விடயத்தில் உள்நுழைந்துள்ளோம். 3 வருடங்களாக செய்து வந்துள்ளோம் - அதனை முன்னெடுக்கும் காணி எமது அமைச்சின் கீழ் வருகின்றது. மாகாணத்தின் மக்களுடைய பிரதிநிதிகள் என்ற வகையில் எமக்கு அந்த உரித்து இருக்கின்றது. ஆகவே நாங்கள் உத்தியோகபூர்வமாக எமது கடமைகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். எனவே இதில் ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டுமாயின் பல்கலைக்கழக மாணவர்கள் எம்முடன் வந்து பேசியிருக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாதது எமக்கு மன வருத்தமாக உள்ளது" என்றார்

## அஸாம் அமீனுக்கான அழைப்பு மீளப்பெறப்பட்டது



ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ ட்விட்டர் கணக்கில் பதிவிட்ட டுவிட் தொடர்பாக விசாரணை செய்ய குற்றவியல் புலனாய்வு திணைக்களம் பி.பி.சி செய்தியாளர் அஸாம் அமீனுக்கு விடுத்த அழைப்பை மீளப்பெற்றுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அதிகாரபூர்வ ட்விட்டர் கணக்கில் பதிவிட்ட டுவிட் தொடர்பாக வாக்குமூலம் அளிப்பதற்காக, முன்னிலையாகும்படி, பி.பி.சி செய்தியாளர் அஸ்ஸாம் அமீனுக்கு , குற்றவியல் புலனாய்வு திணைக்களம் முன்னதாக அழைப்பு விடுத்திருந்தது.

ஜனாதிபதியின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கம் ஹக் செய்யப்பட்டதாக நம்பப்படும் நிகழ்வு ஒன்றில், அதில் பதியப்பட்ட புதிய கொள்கை முறைகள் தொடர்பான பதிவிற்கு, "நீங்கள் சிறந்த பேச்சாளர் ஆனால் அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்! செயலில் காட்டுங்கள்" என்று ஜனாதிபதிக்கு அறிவுரை கூறும் விதத்தில் பதிவிட்டிருந்ததை அஸ்ஸாம் மீள டுவிட் பண்ணியதற்காக அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

## மட்டு. மாநகர சபையில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி



மட்டக்களப்பு மாநகர சபை நேற்றைய (வியாழக்கிழமை) அமர்வின் இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவாக மூன்று நிமிட அஞ்சலி செலுத்தியது. மட்டக்களப்பு மாநகர சபையின் 3 வதும் 1 வது விஷேட அமர்வுமாக அமைந்த நேற்றைய அமர்வின் இறுதியில் முள்ளிவாய்க்கால் நினைவாக மூன்று நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

## கடற்கரையோர கட்டிடங்களை அகற்ற நடவடிக்கை

மேற்கு கடற்கரை ஓரமாக அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டிடங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெற்கே மிரிஸ்ஸ மற்றும் மேற்கே தெஹிவளை, கல்கிஸ்ஸை மற்றும் நீர்கொழும்பு கடற்கரைப் பிரதேசங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை இந்த மாதத்திற்குள் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக கடற்கரையோர பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவை சுற்றுலா பயணிகள் அதிகமாக விஜயம் செய்யும் இடங்களாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கடற்கரை பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் ஒத்துழைப்புடன் இந்தப் பணிகளை முன்னெடுப்பதாக அவர் தெரிவித்தார்.

## ஓய்வுபெற்ற சுங்க அதிகாரி கைது

ஒன்றைரைக் கோடி ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களுடன் ஓய்வு பெற்ற சுங்க பரிசோதகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கத்துறை ஊடகப் பேச்சாளர் கூறினார்.

விமான நிலையத்தின் கழிவறைக்கு சென்று தங்க ஆபரணங்களை தனது இடுப்புப் பட்டியில் மறைத்து, விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயன்றவேளையில் 65 வயதான இவர் கைது செய்யப்பட்டதாக அந்த அதிகாரி கூறினார்.

அவரிடம் இருந்து சுமார் இரண்டரைக் கிலோ எடையுடைய தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## சைட்டம் மாணவர் போராட்டம்

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் இணைந்து நடத்திய போராட்டம் காரணமாக வியாழனன்று காலை லோட்டஸ் வீதியை தற்காலிகமாக மூடும் நிலை ஏற்பட்டது.


இதேவிடயம் குறித்து ஆனால், இவர்களுக்கு எதிராக புதனன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடத்திய போராட்டத்தை பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை கொண்டு கலைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சட்டம் பல்கலைக்கழக விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு வழங்கக் கோரியே இன்று போராட்டம் நடந்தது.

இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

## எரிபொருள் விலை அதிகரிப்பு

புதிய விலை லீட்டருக்கு
-----------------------------
பெற்றோல் (Octane 92) – ரூபாய் 137
பெற்றோல் (Octane 95) – ரூபாய் 148
ஓட்டோ டீசல் – ரூபாய் 109
சுப்பர் டீசல் – ரூபாய் 119
மண்ணெண்ணெய் – ரூபாய் 101

## றம்ப் - கிம் சந்திக்கும் இடம்



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் வடகொரிய அதிபர் கிம் இடையேயான வரலாற்று சந்திப்பு சிங்கப்பூரில் நடக்க இருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் ட்ரம்ப் வடகொரிய அதிபருடனான சந்திப்பு குறித்த தகவல் இன்னும் மூன்று தினங்களில் அறிவிக்கிறேன் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் சிஎன்என் உட்பட அமெரிக்க ஊடகங்கள் சில ட்ரம்ப் கிம் இடையேயான சந்திப்பு சிங்கப்பூரில் நடக்க இருப்பதாகவும் சந்திப்பு நடைபெறும் நேரம் குறித்த தகவல் இது உறுதியாக தெரியவில்லை என்று செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா - வடகொரியா இடையே அணு ஆயுத சோதனை தொடர்பாக நடந்த வந்த வார்த்தை போர் தற்போது தணிந்துள்ள நிலையில் அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று சிறை கைதிகளை ட்ரம்பின் வேண்டுகோளை ஏற்று வடகொரியா விடுதலை செய்தது.

இதற்கு நன்றி தெரிவித்த ட்ரம்ப் விரைவில் கிம் உடனான சந்திப்பு நடைபெறும் என்றார்.

## கென்யாவில் அணைக்கட்டு உடைந்து 20 பேர் பலி

கென்யாவில் கடும் மழைகாரணமாக அணைக்கட்டு ஒன்று புதன்கிழமை இரவு வெடித்ததில் 20 பேர் பலியானதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் நைரோபியில் இருந்து 190 கிலோ மீற்றர் வடமேற்கே சோலை என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

40 பேரை மீட்டதாக கென்ய செஞ்சிலுவைச் சங்கம் கூறியுள்ளது.

நூற்றுக்கணக்கானோர் வீடிழந்துள்ளதுடன், இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.



# போர் நினைவுகூரலை ஏற்பாடு செய்வதற்கான அருகதை?



இலங்கைப் போரில் பலியானவர்களை நினைவுகூருவதற்கான காலப்பகுதி நெருங்குகின்றது. தமது உறவினர்களை, நண்பர்களை, முன்னாள் போராளிகளை நினைவுகூருவதற்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இந்தக் காலப் பகுதியை பயன்படுத்துகிறார்கள்.

இறந்தவர்களை, அதுவும் ஒரு குறிப்பிட்ட பெரும் அனர்த்தத்தில் இறந்தவர்களை நினைவுகூருதல் பலவகைகளில் பயந்தரக்கூடிய ஒன்றுதான். முக்கியமாக தமது உறவுகளை இழந்தவர்களுக்கு மன ஆறுதலுக்கு இது பெரிதும் உதவும். அவர்கள் தமது மனவடுக்களை முடிந்தவரை ஆற்றிக்கொள்ள நீத்தாரை நினைவூரல் உதவும்.

இந்த நினைவுகூரலை முன்பு அரசாங்கத்தரப்பு எதிர்த்து வந்தது. ஆனால், ஒப்பீட்டளவில் அது இப்போது குறைந்துவிட்டது.

ஆனால், இப்போது இங்கு தமிழ் மக்கள் மத்தியில் பிரச்சினை, இதனை யார் ஏற்பாடு செய்வது, யார் தலைமை தாங்குவது என்பதில் காணப்படும் இழுபறிகள்.

இந்தப் பிரச்சினை முன்னதாக புலம்பெயர் நாடுகளில் பெரிதாக இருந்துவந்த ஒன்று. யார் நடத்துவது என்ற போட்டிக்கு காரணமாக, விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளாக தம்மைக் காண்பித்துக்கொள்ளல், புலம்பெயர் தமிழர் மத்தியில் தமக்கு ஒரு அங்கீகாரத்தை தேடிக்கொள்ளல், முடிந்தவரை அந்த நிகழ்ச்சி ஏற்பாட்டில் நிதி திரட்டிக்கொள்ளல் என்பதுவரை பல காரணங்கள் அதற்கு அங்கு இருக்கின்றன.

இங்கும் அரசியலில் ஆதாயம் தேடிக்கொள்வதற்காக அரசியல்வாதிகள் அதனை பயன்படுத்த முற்பட, அதனால், மனமுடைந்த, பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கினார்கள். இந்த நிலைமையை இந்திய இராணுவத்துக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அன்னை பூபதி விடயத்திலும் மட்டக்களப்பில் அண்மையில் காணக்கூடியதாக இருந்தது. ஆனாலும் பின்னர் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பாட்டாளர்களுடன் இணக்கம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. நல்ல விடயம்.



ஆனால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் விவகாரம் வேறு பல வடிவங்களை பெற்றிருக்கிறது.

கடந்த வருடங்களில் நடந்த இழுபறிகளை அடுத்து தாமே அதனை முன்னின்று நடத்தப்போவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கூறினார்கள், ஆனால், வடக்கு முதலமைச்சர் மாகாண சபைக்கு இருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் இதனை தாமே ஏற்பாடு செய்யப்போவதாக கூறியிருக்கிறார். இந்த நிலைமையும் பின்னர் ஒருவாறு தீரலாம், அல்லது இருதரப்பும் பிணக்குப்பட்டு, முரண்பாடு தொடரலாம். எது எப்படி இருந்தாலும் இந்த இழுபறிகள் அனைத்தும் தமது உறவுகளை பலிகொடுத்து, கொடும் துயரில் இருக்கும் தமிழ் மக்களுக்கு இனிப்பான நடப்புகளாக இருக்கப்போவதில்லை. தமது உறவுகளை நினைவுகூரும் நிகழ்வு குறைத்து மதிக்கப்படும் ஒரு நிலையாகவே அவர்களால் இது பார்க்கப்படும்.

உண்மையில் பொதுமக்கள் அரசியல் வேறுபாடின்றி இந்த நிகழ்வை



அனுட்டிப்பதற்கு ஏற்பாடு செய்துகொடுப்பதன் மூலமே இந்த விடயத்தில் அவர்களுக்கு ஒரு மன ஆற்றுப்படுத்தலை ஏற்படுத்திக்கொடுக்க முடியும். அதுவே அவர்கள் அழிவுகளில் இருந்து மனதளவிலும், ஏனைய வடிவங்களிலும் வெளிவர உதவும். அதனை விடுத்து இதனை வைத்து இன்னமும் அரசியல் நடத்த யாராவது முயற்சித்தால், அது பாரதூரமான விளைவுகளை குறித்தவர்களுக்கு எதிராகவே ஏற்படுத்திவிடும்.

இதில் இன்னுமொரு விடயமும் எவராலும், குறிப்பாக அரசியல்வாதிகளால் கவனிக்கப்படாமலேயே அல்லது வேண்டும் என்று புறக்கணிக்கப்பட்டே வருகின்றது.

அது, போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நடவடிக்கை. அவர்களுக்கான மீள்குடியேற்றம், மன அமைதியை ஏற்படுத்தல், வாழ்வை மீளக்கட்டியெழுப்பல், போர் அழிவுகளைக் கடந்து அவர்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு போவதற்கான ஏற்பாடுகள்

**பூபாலரட்ணம் சீவகன்**

என்பனவாகும்.

போரில் இறந்தவர்களுக்கான நினைவுகூரலைச் செய்வது எந்த அளவுக்கு முக்கியமோ அதனைவிட முக்கியம், போரில் உயிர் தப்பியவர்களுக்கான, அதனால் காயமடைந்தவர்களுக்கான புனர்வாழ்வு.

அவர்களது வாழ்க்கைக்கான உதவிகள், அவர்களுக்கான ஜீவனோபாய ஏற்பாடுகள், தேவைப்படுபவர்களுக்கு தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சை, மன ஆற்றுப்படுத்தல் என்பன இதில் மிக முக்கியமானவை.

போரில் பலியானவர்களை நினைவுகூர்தலைவிட அதில் தப்பிப் பிழைத்தவர்களை வாழ வைத்தல் மிகவும் முக்கியமான செயற்பாடாகும். போரில் இறந்தவர்களை நினைவுகூர்தல் கூட தப்பிப் பிழைத்தவர்களை ஆற்றுப்படுத்துவதின் ஒரு பகுதியே.

உண்மையில் போரில் தப்பிப் பிழைத்தவர்களின் புனர்வாழ்வுக்கு எவர் உண்மையாக உதவுகிறார்களோ அவர்களே போர் நினைவுகூரலை ஏற்பாடு செய்யவும் அருகதை உடையவர்கள். இது அரசியல்வாதிகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் மிகவும் பொருந்தும். வெறுமனே ஒரு நாள் மாத்திரம் போரில் பலியானவர்களை, போராளிகளை நினைத்துவிட்டு, அதனை முன்னிட்டு அரசியல் உரைகளை நிகழ்த்திவிட்டுப் போவதல்ல நியாயம்.

போரில் இறந்தவர்களின் குடும்பங்களில் வீழ்ந்துகிடக்கும் குடும்பங்கள் எழுந்து நிற்க உதவ வேண்டும், போரில் காயமடைந்த போராளி எழுந்து நடக்க உதவவேண்டும். அதுவே இங்கு முதற்தர்மம்.

முதலில் இந்த விடயங்களில் அரசியல் கட்சிகள், அதுவும் தமிழ் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் தம்மை மீளாய்வு செய்துகொள்ள வேண்டும். வெறுமனே பாராளுமன்றத்திலும், ஏனைய மேடைகளிலும், பொதுமக்களுக்கு புனர்வாழ்வு வேண்டும் என்று உரத்துப் பேசுவதல்ல புனர்வாழ்வு. அது அதற்கும் அப்பாலானது. உங்கள் கட்சி மட்டத்தில் தொடங்கி அது பூரணப்படுத்தப்பட வேண்டும். வருடங்கள் 9 கடந்தோடியும் இன்னமும் போரில் பாதிக்கப்பட்ட மக்கள் வீழ்ந்தே கிடக்கிறார்கள். இந்த அளவுகாலத்தில் அவர்களை தூக்கி நிறுத்தாமல், நீங்கள் அரசாங்கம் செய்யவில்லை, வேறு யாரும் கண்டுகொள்ளவில்லை என்று வெற்றுப் பேச்சு பேசிக்கொண்டிருக்கமுடியாது.

எவரும் செய்யவில்லை என்று உணர்ச்சிப் பேச்சு பேசுவதல்ல அரசியல் கட்சிகளின் கடமை, புனர்வாழ்வை செய்து முடிப்பதே உங்கள் கடமை. கடந்துபோன 9 வருடங்கள் உங்களின் செயற்திறனின்மைக்கு சான்று பகர்கின்றன. இப்படி கூற நேர்ந்ததற்கு மன்னிக்கவும்.

**கிழக்கு மாகாணத்திலும் தலைநகர் கொழும்பிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது எமது அரங்கம் செய்திகள் பத்திரிகை. அனைவருக்கும் வாசிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கிலும், இலங்கையில் இலவச பத்திரிகை விநியோக கலாசாரத்தை ஊக்குவிக்கும் நோக்கிலும் இது மக்கள் கரங்களுக்கு வருகின்றது.**

**நடுநிலையான ஊடகச் செயற்பாடும், நல்லிணக்கமும் எமது குறிக்கோள்.**

**எமக்கு ஆலோசனை கூற, விளம்பரம் உட்பட ஏனைய வழிகளில் உதவ நினைப்பவர்கள் எம்மை தொடர்பு கொள்ள முடியும்**

ஆசிரியர்
பூபாலரட்ணம் சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு
seevagan@hotmail.com
0713999091

அரங்கம் செய்திப் பத்திரிகை ஊடாக தங்களது விளம்பரங்களை விளம்பரப்படுத்த கீழே உள்ள எமது முகவர்களை தொடர்புகொள்ளவும்.
Call us 070 300 900 1

**COLLOMBO**
**ARANGAM ADVERTISEMENT**
arangamads@gmail.com
Call us :- 0703456800, 0713999091

**S.K. RAMESH**
65 Manning place, Wellawatta.
Call us :- 0773900161

**BATTICALOA**
**ST.ANTONY'S JS**
Photocopy Shop
Main Street, Valaichchenai.
Mob:- 0774701373

**DENA ADVERTICING**
No 183/1 , New Kalmunai Road,
Kallady , Batticaloa
Call us: 077 712 0809

**SHALOM DIGITAL STUDIO**
No 63 , St Antanis Lane , Batticaloa
Call us: 077 6321079

**EAST LINK AGENCY POST OFFICE**
No 196 , Trinco Road, Batticaloa
Call us: 077 1801400

# வடக்குக் கிழக்கிற்கு வெளியே வடக்குக் கிழக்குத் தமிழர்கள்

## கங்கையில் குளித்துக்கொண்டு காவிரியில் மனது வைப்பவர்களோ?

### கருணாகரன்



"வடக்குக் கிழக்கிற்கு வெளியே – குறிப்பாக கொழும்பு உள்ளிட்ட தென்பகுதியில் வாழ்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்களின் நிலை என்ன? அவர்களுடைய எதிர்காலம் எப்படி அமையும்?

"அவர்களுடைய அரசியல் தெரிவுகள், விருப்பு வெறுப்புகள், சுயாதீனத்தன்மை, அரசியல் நிலை அல்லது அரசியல் உறுதிப்பாடு போன்றவை எல்லாம் எப்படி வெளிப்படுத்தப்படுகின்றன? அவற்றின் பெறுமானம் என்ன?

"அவர்களின் பண்பாடு, அடையாளம், இருப்பு போன்றன எவ்வாறு பேணப்படுகிறது? எப்படி வளர்த்தெடுக்கப்படுகிறது?

"அவர்களுடைய சமூக, பொருளாதார நிலை என்ன?

இப்படிச் சில கேள்விகளை கொழும்பில் நீண்டகாலமாகவே குடும்பத்துடன் வசித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த அரசியல் ஆய்வாளரிடம் கேட்டேன்.

அவரிடம் தெளிவான பதில் இல்லை. "யோசிக்கத்தான் வேணும்" என்றார்.

சைவத் தமிழ்ப் பாரம்பரியம், இடதுசாரிய ஈடுபாடு, ஆயுதப்போராட்டம், பின்னர் தமிழ்த்தேசிய அரசியல் என்ற வழிகளினூடாகப் பயணித்தவரிடம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் இல்லாமலிருப்பது வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் அடையாளத்தையும் இருப்பையும் குறித்த கேள்விகளை எழுப்புகின்றன.

இவ்வளவுக்கும் நண்பருடைய முழுச்சிந்தனையும் தமிழ் மக்களுடைய அரசியலிலேயே மையமிட்டிருக்கிறது. அதுவும் "தீவிரத் தமிழ்த்தேசிய" அரசியலில். ஆனால், அதை அவர் தான் வாழும் சூழலில் முன்னெடுக்கத் தயாராக இல்லை.

யுத்த காலத்திலும் அப்படித்தான்.

அப்பொழுது அதை அடக்கியே வாசித்தார்.

இதைப்பற்றி யுத்தம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த 2007 இல் ஒருநாள் அவரிடமே தொலைபேசி உரையாடல் ஒன்றின்போது கேட்டேன், "வயதுக்கு வந்த பெண் பிள்ளைகளையும் வைச்சுக் கொண்டு, எப்படி இவ்வளவு தீவிரமாகத் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டோடு பயமில்லாமல் கொழும்பில இருக்கிறீங்கள்? உங்களுடைய தீவிரத் தமிழ்த்தேசிய நிலைப்பாடு சிங்கள இனவாதிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்காதா? அல்லது சிங்கள இனவாதத்தை நீங்கள் ஒரு அச்சுறுத்தலாகக் கருதவில்லையா?... உங்களை "அவர்கள்" எப்படி விட்டு வைத்திருக்கிறார்கள்? உண்மையில் ஒருவரால் ஒருவருக்கு அச்சுறுத்தலும் நெருக்கடியும் என்றால் நீங்கள் வடக்குக் கிழக்கிற்கு அல்லவா சென்றிருக்க வேணும். இல்லையென்றால் நாட்டை விட்டுப்போயிருக்கோணுமே" என்று.

" இதில இதுகளைச் சத்தம் போட்டுக் கதைக்காதையும். நான் நேரில வாறன். அப்ப கதைப்பம்" என்று தொலைபேசி இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டித்தார்.

குரலில் பதற்றமும் தடுமாற்றமும் தெரிந்தது. யோசிக்காமல் அவரை நெருக்கடிக்குள்ளாக்கி விட்டேனோ என்று சில நாட்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனாலும் நண்பருக்கு எந்த விதமான நெருக்கடிகளும் ஏற்படவில்லை. நாங்கள் படாத பாடெல்லாம் பட்டு, முள்ளிவாய்க்கால்வரை சென்று ஏதோ அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பி மீண்டோம்.

யுத்த முடிவுக்குப் பிறகும் நண்பர் சோர்ந்து விடாமல் அதே உற்சாகத்தோடு இயங்குகிறார். "வடக்குக் கிழக்கு இணைந்த தாயகம், தமிழ்த் தேசியம், தனித்தேசம், தனிநாடு..." என்றெல்லாம் தீவிர நிலைப்பாட்டுடன் செயற்படுகிறார்.

சமஸ்டி என்ற பேச்சுக்கே அவரிடம் இடமில்லை. அதைப் பரிசீலிக்கவே அவர் தயாரில்லை. "இதுவரையான இழப்புகளுக்கும் கொடுத்த விலைக்கும் சரியான பெறுமதி கிடைக்க வேணும். அதுதான் தமிழ் மக்களுடைய அரசியல் வெற்றியாகும். இல்லையென்றால் இதுவரை நாங்கள் செய்த தியாகத்துக்கு நாங்களே துரோகம் செய்ததாகி விடும்" என்று அடித்துக் கூறுகிறார்.

ஆனால், அவருடைய அரசியல் செயற்பாடுகள் எல்லாமே வடக்குக் கிழக்கில்தான். கொழும்பிலோ தென்பகுதியில் தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களிலோ அல்ல.

இதைப்பற்றி அவரிடமே ஒரு நாள் கேட்டேன். "எல்லாம் சரி, நீங்கள் கொழும்பிலே யாருக்கு வாக்குப் போடுறீங்கள்? அங்கே யாரை – எந்தத் தரப்பை ஆதரிக்கிறீங்கள்? கொழும்பிலே ஏறக்குறைய மூன்றரை லட்சம்பேருக்கு மேல் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் சரியாகத் தீர்மானித்தால் குறைந்தது மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். இதைவிட மாகாணசபை, மாநகர சபை போன்றவற்றிலும் தங்களுக்குரிய அரசியல் அடையாளத்தோடு உறுப்பினர்களைத் தேர்வு செய்யலாம். தனி அடையாளமாகத் தங்களை உருவாக்கிக் கொள்ளலாம். புலம்பெயர் நாடுகளிலேயே தமிழ் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும்போது கொழும்பிலும் பிற தென்பகுதிகளிலும் ஏன் அப்படி நடப்பதில்லை...?" என்று.



என்னுடைய கேள்விகளுக்கு அவர் எந்தப் பதிலும் சொல்லவில்லை. சில கணங்கள் அவர் பேசவே இல்லை. கனமான அமைதி நிலவியது. அப்போதுதான் இதைப்பற்றி ஆழமாக யோசிக்கிறார் போல என எண்ணிக் கொண்டேன்.

சற்று நேரத்துக்குப் பிறகு தொண்டையைச் செருமிச் சீராக்கிக் கொண்டு சொன்னார், "வடக்குக் கிழக்குக்கு வெளியே உள்ள தமிழர்களுக்குரிய அரசியலையும் அவர்களுடைய அடையாளங்களையும் வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்கள்தான் பேண வேண்டும். இது தவிர்க்க முடியாது. அதுதான் எங்களுடைய (தமிழர்களுடைய) அரசியற் களம். கொழும்பிலோ தென்பகுதியிலோ அதற்கான அவசியமில்லை. அது சாத்தியமும் இல்லை. நாங்கள் வடக்குக் கிழக்கைத்தான் தமிழரின் தாயகம் என்று சொல்கிறோமே தவிர, முழு இலங்கையையும் எங்களுடைய நாடு என்று கொள்ளவில்லை" என்று.

இது ஒன்றும் எளிதாகக் கடந்து சென்று விடக்கூடிய ஒற்றைச் சம்பவமோ இருவருக்கிடையிலான உரையாடலோ அல்ல.

இதுதான் வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்களில் பெரும்பாலானோரின் நிலையும் நிலைப்பாடுமாகும்.

இதனால்தான் அவர்களில் 60 ஆயிரம்பேருக்கும் அதிகமானவரகள் தாங்கள் வாழ்கின்ற (கொழும்பு உள்ளிட்ட) பகுதிகளில் தமது வாக்குரிமையைப் பதிவு செய்யாமலே இருக்கிறார்கள்.

இவர்கள் தேர்தலில் வாக்களிப்பதைப்பற்றிச் சிந்திப்பதேயில்லை. அதாவது, அரசியல் அந்தஸ்தை விரும்பாத, அதைப் பெறாத அல்லது அதைத் தந்திரமாகத் தவிர்ப்போராக உள்ளனர்.

ஒரு சிறிய எண்ணிக்கையினர் மட்டும் வடக்குக் கிழக்கிற்கு மீளச் சென்று தங்களின் பதிவுகளைச் செய்திருக்கிறார்கள். அவர்களும் அங்கே வாழ்வதில்லை. மீள்குடியேற்றம், காணிகளை மீள் நிலைப்படுத்தல் போன்ற தேவைகளுக்காக மட்டுமே இதைச் செய்கின்றனர்.

இதைத் தவிர பதிவு செய்தவர்களும் தமிழ் அரசியல் குறித்துத் தெளிவான நிலைப்பாட்டுடன் இல்லை. தனியான அடையாளத்தை உருவாக்க வேண்டும். அதைப்பேண வேண்டும் என்ற சிரத்தையோடு செயற்படுவதில்லை.

யாராவது தமிழ் வேட்பாளர்கள் தேர்தலில் நின்றால் அவர்களுக்கு ஆதரவளிப்பார்கள். இதில் கட்சி பேதம், அரசியல் நிலைப்பாடு என்று எதுவும் பார்க்கப்படமாட்டாது.

முன்பு மகேஸ்வரன் ஐ.தே.கவில் வெற்றி பெற்றதும் பிறகு குமரகுருபரன் மாகாணசபைத் தேர்தல், மாநகரசபை போன்றவற்றில் வெற்றியீட்டியதும் இவ்வாறே.

தற்போது மனோகணேசனுக்கும் அவருடைய தரப்பினருக்கும் கிடைத்திருக்கும் ஆதரவும் இந்த அடிப்படையிலானதே.

இவ்வளவுக்கும் வடக்குக் கிழக்கிற்கு வெளியே – கொழும்பையும் அதனைச் சுற்றியும் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கை சுமார் நான்கு லட்சம் வரை என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இது யாழ்ப்பாணத்தின் சனத்தொகையைவிட கொஞ்சந்தான் குறைவானது. மட்டக்களப்புக்கு நிகரானது.

(தொடரும்)

## பெரியபுல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா



கிழக்கு மாகாணத்தில் பாரம்பரிய கிறிஸ்தவ தேவாலயங்களில் ஒன்றான மட்டக்களப்பு - பெரியபுல்லுமலை புனித செபமாலை மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருப்பலி ஒப்புக்கொடுத்தலுடன் நிறைவுபெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் வண பென்னையா ஜோசப் தலைமையில் நடைபெற்ற திருப்பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வில் மாவட்ட தேவாலயங்களின் அருட் தந்தையர்கள் அருட் கன்னியர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் ந.வில்வரெட்ணம் மற்றும் இன, மத வேறுபாடுகளின்றி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பொரும் திரளான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.



# கொழும்பு அரசியலில் யாழ்ப்பாணத் தமிழர் அன்றும் இன்றும்

### நி.அமிர்தஸன்



சேர் பொன் இராமநாதனுடன் ஆரம்பித்த கொழும்பு பிரதிநித்துவ அரசியல், இன்று மனோ கணேசனிடம். ஆனாலும் தமிழ் வாக்காளர்கள் மனம் வைத்தால் தமிழர் பிரதிநித்துவத்தை மேலும் அதிகரிக்கலாம்.

**கொழும்புவாழ் யாழ் தமிழர் முழுமையாக வாக்களித்தால் கொழும்பில் குறைந்தபட்ச தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய முடியும்**

கொழும்பு மாவட்டத்திற்கான தமிழ் பிரதிநிதித்துவ தேவை குறித்து சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாசலம், அருணாசலம் மகாதேவா, காலத்தில் பேசப்பட்டு வந்தது. இவர்கள் அன்றைய காலகட்டத்தில் சட்டசபையில் "படித்த இலங்கையரை" பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். இந்த மூன்று பேரும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் கொழும்பை மையப்படுத்தியே தமது அரசியலை செய்தார்கள். இவர்களைத் தொடர்ந்து சரவணமுத்து, நேசம் சரவணமுத்து ஆகியோரும் கொழும்பில் அரசியலில் ஈடுபட்டு சட்டமன்றத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

கொழும்பை மையப்படுத்திய மேல் மாகாணத்திற்கு ஒரு தமிழ் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கோரிக்கைகள் அன்று யாழ்ப்பாண சங்கத்தினால் முன் வைக்கப்பட்டன. இதனால் இலங்கைத் தேசிய சங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது. ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம மற்றும் சேர் பொன் அருணாசலம் ஆகியோர் 07.12.1918 அன்று இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். அப்போது மக்கலம் யாப்பு நடைமுறையில் இருந்தது. இலங்கை தேசிய காங்கிரஸ் (CNC - Ceylon National Congress) முன்னரே கொழும்பில் தமிழ் பிரதிநிதித்துவம் பற்றிய பேச்சுக்கள் இடம்பெற்றன என்பதற்கு இந்த ஒப்பந்தம் உதாரணமாகும்.

ஆனாலும் வடக்குக் கிழக்கை மையப்படுத்தி, அன்று ஏற்பட்ட சிங்கள தமிழ் இன முரண்பாடுகள் காரணமாக கொழும்பில் தமிழர் பிரதிநிதத்துவம் என்ற பேச்சுக்கள் கைவிடப்பட்டன. எப்.ஆர் சேனநாயக்க, டி.எஸ்.சேனநாயக்கா ஆகிய இரு சகோதரர்களுமே இதற்கு காரணமாக இருந்தார்கள்.

இதன் பின்னணியில் தொடர்ச்சியாக எழுந்த செயற்பாடுகள் தமிழ் சிங்கள இன முரண்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. ஆனாலும் 1939இல் இலங்கை இந்திய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டு மலையகத் தமிழர் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களை மையப்படுத்தியதாக அதன் அரசியல் அமைந்திருந்தன. அதன் பின்னரான காலகட்டத்தில், தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் 1972ஆம் ஆண்டு இணைந்து செயற்பட்டன. முதலாம் குடியரசு அரசியல் யாப்பு முற்று முழுதாக தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை புறக்கணித்துள்ளது என்ற அடிப்படையிலும் வடக்குக் கிழக்கு, மலையகம், கொழும்பு ஆகிய பிரதேசங்களில் தமிழர் பிரதிநித்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற சிந்தினையின் அடிப்படையிலும் இந்த மூன்று கட்சிகளும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாகச் செயற்பட்டன.

ஆனாலும் சில காலத்தின் பின்னர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிராஸ், இந்த அணியில் இருந்து விலகியது. இதனால் கொழும்பு தமிழ்ப் பிரதிநித்துவம் பற்றி பேச்சுக்கள் குறைவடைந்தன. ஆனாலும் 1977 ஆண்டு பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் செல்லச்சாமி கொழும்பில் போட்டியிட்டார். ஆனாலும் தோல்வியடைந்தார்.



அதன் பின்னா செல்லச்சாமி 1989இல் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி பட்டியலில் இணைந்து யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆனால் 1994இல் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு படுதோல்வியடைந்தார். பொதுவாக கொழும்பை பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடும் தமிழர்கள்தான் வெற்றிபெற முடியும் என்பது குறித்து இந்த பத்தியில் ஏற்கனவே எழுதியுள்ளோம். இதன் பின்னர் 1999 ஆண்டு மாகாண சபைத் தேர்தலுடன் மனோ கணேசனின் வருகை கொழும்பில் ஆரம்பித்தது. 2000ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தாலும் 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அவர் பெற்றிபெற்றார். அன்றில் இருந்து இன்று வரை மனோ கணேசன் கொழும்பின் தமிழ் பிரதிநித்துவத்தை தக்க வைத்து வருகின்றார். 2003ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கொழும்பில் மனோ கணேசனுடன், தியாகராஜா மகேஸ்வரனும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருந்தார். அந்த வருடம் மாத்திரமே இரண்டு தமிழ் பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் கொழும்பில் மனோ கணேசனை விட 20 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். ஆகவே அதுவரை காலமும் வாக்களிக்காமல் இருந்த வடபகுதி வாக்காளர்கள் மகேஸ்வரன் போட்டியிட்டதால் வாக்களித்துள்ளனர். ஆகவே கொழும்புவாழ் வடபகுதி தமிழர்கள் மனம் வைத்தால் கொழும்பில் தற்போதைய வாக்காளர் பதிவுகளின்படி குறைந்தது மூன்று அல்லது நான்கு பேரை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப முடியும்?

# கிழக்கின் பொன் சமர் 25ஆவது கிரிக்கட் போட்டி



திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



VS மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை

பொன்னுக்கான சமர் என வர்ணிக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலைக்கும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கும் இடையில் வருடா வருடம் நடத்தப்படும் மாபெரும் கிரிக்கட் போட்டியின் 25ஆவது போட்டி இவ்வருடம் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 13ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் கல்லூரிகளான திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மற்றும் மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி ஆகியவற்றுக்கிடையில் கிரிக்கட் போட்டிகள் வருடா வருடம் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் மாறிமாறி நடைபெறுவது வழமையாகும்.

இராமகிருஷ்ண சங்க பாடசாலைகளான இவை இரண்டுக்கும் இடையில் புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் விளையாட்டின் ஊடாக ஏற்படுத்திக் கொள்ளும் முகமாக 15.09.1993 ஆம் வருடம் இப்போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் போட்டி மென்பந்துப் போட்டியாக கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டது. அடுத்த வருடம் வெபர் மைதானத்தில் கடினப்பந்துப் போட்டியாக நடத்தப்பட்டு, 1994ஆம் ஆண்டு முதல் கடினப்பந்துப் போட்டியாக மாற்றப்பட்டது. ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் 13 தடவைகள் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியும் 11 தடவைகள் சிவானந்தா வித்தியாலயமும் வெற்றி பெற்றுள்ளன.

2017ல் மட்டக்களப்பில் நடைபெற்ற 24ஆவது கிரிக்கட் போட்டியில் சிவானந்தா தேசியப்பாடசாலை வெற்றி பெற்றிருந்தது.

இம்முறை, திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் செ.பத்மசீலன், மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரி அதிபர் எஸ்.யசோதரன் ஆகியோர் தலைமையில் பொன்னுக்கான கிரிக்கட் சமர் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கிரிக்கட் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் திருகோணலை நகரசபை முதல்வர் நா.இராசநாயகமும், இறுதி பரிசளிப்பு நிகழ்வில், பெற்றோலிய வள அமைச்சரும் முன்னாள் இலங்கை கிரிக்கட் அணித் தலைவருமான அர்ஜுன ரணதுங்கவும் கலந்து கொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் கானல் நீரா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு பிரதமர் ரணில் வழங்கிய பத்து வாக்குறுதிகளை 'அரங்கம்' பத்திரிகையில் பார்க்கக் கிடைத்தது. அண்மையில் பாராளுமன்றத்தில் பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணை தொடர்பில், கூட்டமைப்பின் 16 பாராளுமன்ற உறுப்பினர்களும் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்காக முன்வைத்த நிபந்தனைகளே இவை. இந்த நிபந்தனைகளை பிரதமர் ஏற்றுக்கொண்டார் என்கிறது கூட்டமைப்பின் ஒரு தரப்பு. இந்தப் பத்து



வாக்குறுதிகளிலும் ; புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் எனும் விடயங்களில் ஒன்றுதானும் உள்ளடங்கியிருக்கவில்லை.
பத்தாவது வாக்குறுதியாக வடக்கு, கிழக்கு அபிவிருத்தி பற்றி மட்டும் கூறப்பட்டுள்ளது.
வடக்கு, கிழக்கில் யுத்தம் ஏற்படுத்திய பிரதான பிரச்சினைகளில் இவை முக்கியமானவை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அனேகம் பேரின் பிரச்சினையும் இவையே. இலகுவில் தீர்க்கமுடியாத, இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இவை. எனினும் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகளில் இவை உள்ளடக்கப்படவில்லை என்பது ஆச்சரியமானதே!

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் என்பவை வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரையில் மிக அவசியமானது

**போரில் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர் மீட்சிக்கு தனியான பொறிமுறைக் கட்டமைப்பு அவசியம்**

**பேரழிவுகளில் இருந்து மீள வழமையான திட்டங்கள் சாத்தியமில்லை**

மட்டுமல்ல சாத்தியமானதும் கூட. எனினும் தமிழ்த் தலைமைகள் இவ்விடயத்தில் சரியான முறையில் நடந்து கொண்டதாகத் தெரியவில்லை.

வடக்கு, கிழக்கில் யுத்தம் முப்பதாண்டுகளாக இடம்பெற்றிருக்கிறது. பேரழிவுகள் இடம்பெற்றிருக்கின்றன. இறுதி இரண்டாண்டுகளில் பெரும் நிலப்பரப்பில், எல்லாவற்றையும் துடைத்தழித்தவாறுதான் யுத்தம் இடம்பெற்றது. பெருமளவான மாற்றுத் திறனாளிகளை, ஆண்தலைமையற்ற குடும்பங்களை, விதவைகளை, கைவிடப்பட்ட குழந்தைகளை உருவாக்கியிருக்கிறது யுத்தம்.

**கிரான் விஜய்**

யுத்தம் முடிவுற்ற பின்னரும் முன்னய அரசாங்கம் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் என்பவற்றில் போதிய அக்கறை காட்டவில்லை. அரசாங்கம் இவற்றை தனது கைகளில் வைத்துக் கொண்டு செயற்பட்டது. தமிழர்கள், தமிழர் அமைப்புக்கள் இவ்விடயங்களில் ஈடுபடுவதையும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடுவதனையும் முன்னய அரசாங்கம் தடுத்தது, கட்டுப்படுத்தியது. பல விடயங்களில் இராணுவத்தினரே ஈடுபடுத்தப்பட்டனர்.

புதிய நல்லாட்சி ஆட்சியிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படவில்லை. அரசாங்கமே எல்லாவற்றையும் கையாளும் நிலை தொடர்கிறது, அமைச்சு – உள்ளூர் நிர்வாகம் என்பவற்றின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்த நிலைமையே பொருத்துவீடு போன்ற பிரச்சினைகளின் உருவாக்கத்திற்கு காரணமாக அமைந்தது. மேலும், அரசாங்கம் கொண்டுவருகிற மீள்குடியேற்றம், புனர்வாழ்வு நடவடிக்கைகளில் பாரிய முன்னேற்றங்கள் எட்டப்படவில்லை. அவை மக்களின் மீண்டெழுகைக்கு உதவவில்லை.

**போர் முடிந்து இத்தனை வருடங்களின் பின்னரும் கூட மீள்கட்டுமானம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வில் அக்கறை காட்டாத தமிழ்த் தலைமைகள்**

மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேறும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

இது புதிய பல பிரச்சினைகளையும் தோற்றுவிக்க காரணமாகியிருக்கிறது. மீள்குடியேற்றம் நடைபெறாமையால் பிற இனக் குடியேற்றங்கள் இலகுவில் நடைபெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்கட்டுமானம் நடைபெறாமை மக்களை வறுமையில் வைத்திருக்கச் செய்திருக்கிறது. இவற்றிலிருந்து சமூக – பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றியிருக்கிறது.
இனப்பிரச்சினைத் தீர்வுக்கே சாதகமான சூழல்கள் தோன்றியிருக்கிறது எனக் கூட்டமைப்பு கூறும் நிலையில், அதற்குச் சாதகமான நல்லாட்சி மற்றும் சர்வதேச அழுத்தங்கள் காணப்படுகின்றன என்று கூறும் நிலையில், இந்த விடயத்தில் சாதகமான தீர்வைப் பெறுவது இலகுவானதே. நல்லாட்சி அரசாங்கமோ, எதிர்க்கட்சிகளோ, பேரினவாதச் சக்திகளோ இலகுவில் எதிர்த்து நிற்கமுடியாத விடயங்கள் இவை. சர்வதேச சமூகம் உதவியும் ஒத்தசையும் புரியக்கூடிய வியடங்கள் இவை.
அவசியமான – சாத்தியமான இத்தகையதொரு விடயத்தினை கணக்கில் எடுக்காமல் விட்டிருக்கின்றன தமிழ்த் தலைமைகள். இதற்கான காரணங்கள் பலவாக இருக்கலாம்.
யுத்த அழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகள், விசேட செயற்றிட்டங்கள் ஒன்றும் புதுமையான விடயமுமல்ல. யுத்த அழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகள் மார்ஷல் திட்டத்திலிருந்து (Marshall Plan - European Recovery Program) ஆரம்பிக்கிறது. இரண்டாம் யுத்த அழிவிலிருந்து ஐரோப்பாவை மீளக்கட்டியெழுப்பவதற்கான அமெரிக்காவின் உதவித் திட்டமே மார்ஷல் திட்டம். இதேபோல ஜப்பானின் யுத்த அழிவிலிருந்து மீண்டெழுவதற்கான திட்டங்கள் எனப் பல உதாரணங்கள் உண்டு. இலங்கையின் சுனாமி மீட்சித் திட்டமும் உண்டு.

பேரழிவுகளிலிருந்து மீட்சி பெறுவதற்கு வழமையான நிர்வாகப் பொறிமுறையும், வழமையான திட்டங்களும் சாத்தியமில்லை என்பதனையே இத்திட்டங்கள் காட்டுகின்றன. இலங்கையின் கடந்த ஒன்பதாண்டு அனுபவங்களும் இதனைத் திட்டவட்டமாக நிருபணம் செய்திருக்கின்றன.

எனவே வடக்கு கிழக்குத் தமிழர்களின் விடிவுக்கு, சுயாதீனமான – சுதந்திரமான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, மீள்கட்டுமானப் பொறிமுறை ஒன்று அவசியம். இது சாத்தியமாகும் போதுதான் பல்வேறு சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். யுத்த அழிவிலிருந்து மக்கள் மீள எழமுடியும்.
இது அவசியமனது மட்டுமல்ல சாத்தியமானதும்கூட.

தொடர்ச்சி

## பல்கலை மாணவர் நிகழ்விலேயே கலந்துகொள்வோம் என்கிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

மாணவர் சமூகத்தினால் நடத்தப்படும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் பிரதான நிகழ்வை தாமே நடத்த வேண்டும் என்று வட மாகாண சபையும் பல்கலைக்கழக சமூகத்தினரும் பரஸ்பரம் உரிமைகோரிவரும் நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் இந்தத் தகவலைத் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை தமிழ் இனத்தின் ஒற்றுமையை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடனேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ள யாழ் பல்கலைக்கழ மாணவர்கள், அரசியல்வாதிகள் தமது அரசியல் அதிகாரத்தை வைத்துக்கொண்டு மாணவர்களின் தூரநோக்குடனான செயற்பாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்த முனையக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்)

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்**

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என்போர் யார்?



இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1947ஆகஸ்ட்/செப்டம்பரில் நடைபெற்றது. சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய பாராளுமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1946இல் இலங்கை 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் 89 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இத்தேர்தல் தொகுதிகளின் அடிப்படையிலேயே இலங்கையின் முதலாவது பாரளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அப்போது அம்பாறை மாவட்டம் உருவாகி இருக்கவில்லை. தற்போதைய அம்பாறை மாவட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அடங்கியிருந்தது. அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பட்டு 1962 இல் "அம்பாறை" என்றொரு புதிய மாவட்டம் தனியான நிருவாக மாவட்டமாக உருவாக்கப்படும் வரை தற்போதைய அம்பாறை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் இணைந்த நிலப்பரப்பே முன்னைய "மட்டக்களப்பு" நிருவாக மாவட்டமாக இருந்தது. இதன் எல்லைகள் வடக்கே வெருகல் ஆறு, தெற்கே குமுக்கன் ஆறு, கிழக்கே வங்காளவிரிகுடாக்கடல், மேற்கே வடமத்திய மற்றும் மத்திய ஊவா மாகாண எல்லைக்கோடுகள் ஆகும். மேற்கெல்லையைப் பொதுவாக ஊவாமலைக்குன்றுகள் எனவும் கூறலாம்.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது 1947 இல் நடந்த இலங்கையின் பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போது கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. அப்போது அம்பாறை என்றொரு தேர்தல் தொகுதி கூட இருக்கவில்லை.

1947க்கு முன்னர் சட்டசபைக்காலத்தில் (1931-1947) பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய முழு நிலப்பரப்பும் "மட்டக்களப்பு தெற்கு" என அழைக்கப்பெற்ற தனித் தேர்தல் தொகுதியாக இருந்தது. சட்டசபைக் காலத்தில் மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதியை முறையே ஜனாப் எச்.எம்.எம்.மாக்கான் மாக்கார்(1931), எஸ்.ஒ.கனகரட்ணம்(1936), எஸ். தர்மரட்ணம்(1938), வி.என்.நல்லையா(1943) ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர். சட்டசபைக் காலத்தில் "மட்டக்களப்பு வடக்கு" என அழைக்கப்பெற்ற தேர்தல் தொகுதி கல்லடிப்பாலத்திற்கு வடக்கே வெருகல் ஆற்றையும் தாண்டி திருகோணமலை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது என்பதையும் கிழக்கு மாகாணம் என்பது அப்போது திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையே கொண்டிருந்தது என்பதும் முழுக்கிழக்குமாகாணமும் மட்டக்களப்பு வடக்கு மற்றும் மட்டக்களப்பு தெற்கு எனும் இரு தேர்தல் தொகுதிகளையே கொண்டிருந்தது என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இந்தப் பின்னணியில் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்கோடியில் வாழ்ந்த தமிழ் மக்களே தற்போதைய "அம்பாறை மாவட்டத் தமிழர்கள்" ஆவர். இவர்கள் அப்போதைய பட்டிருப்புத் தொகுதியின் தெற்கு எல்லைகளிலும் அப்போதைய கல்முனை மற்றும் பொத்துவில் தொகுதிகளிலும் வாழ்ந்தவர்கள். அப்போதைய பட்டிருப்புத் தொகுதி (1947-1959) பின்னாளில் 1959 இல் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயம் வரை தற்போதைய கல்முனைத் தொகுதியில் உள்ளடங்கியுள்ள பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற கிராமங்களையும் உள்ளடக்கியிருந்தது. அதாவது அப்போதைய பட்டிருப்புத் தொகுதி (1974-1959) யின் தெற்கு எல்லை, கல்முனை, தாளவெட்டுவான் சந்திவரை வியாபித்திருந்தது. அதேபோல் தற்போது (1976ல் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் பின்பு) சம்மாந்துறைத் தொகுதியின் கீழ் இருப்பதும் 1959 இலிருந்து 1976 வரை பழைய பொத்துவில் தொகுதியின் கீழ் இருந்ததுமான சவளக்கடை, சொறிக்கல்முனை, அன்னமலை, நாவிதன்வெளி, 6ம் கொலனி போன்ற தமிழ்க் கிராமங்களும் 1974 இலிருந்து 1959 வரை பழைய பட்டிருப்புத் தொகுதியிலேயே அடங்கியிருந்தன. 1959 வரை பட்டிருப்புத் தொகுதி என அழைக்கப்பெற்ற தேர்தல் தொகுதியின் எல்லை கல்முனை தானவெட்டுவான் சந்தியிலிருந்து கிட்டங்கித்துறையில் ஊடறுத்து அம்பாறைக்குச் செல்லும் பிரதான வீதிவரை பரந்திருக்கும்.

எனவே அம்பாறைமாவட்டத்தமிழர்கள் என்று இன்று குறிக்கப்படுவோர் அன்று அதாவது 1947 இலிருந்து 1959 வரை மட்டக்ளப்பு மாவட்டத்தில் அமுலிலிருந்த பட்டிருப்புத் தொகுதியின் தெற்கு எல்லைகளிலும் மற்றும் கல்முனை, பொத்துவில்

| தேர்தல் ஆண்டு | கல்முனைத் தொகுதி | பொத்துவில் தொகுதி |
|---|---|---|
| 1947 | எம்.எஸ்.காரியப்பர் (ஐ.தே.க) | எம்.எம்.இப்றாகிம் ஹாஜியார் (சுயேச்சை) |
| 1952 | ஏ.எம்.மேர்சா (சுயேச்சை) | எம்.எம்.இப்றாகிம் ஹாஜியார் (சுயேச்சை) |
| 1956 | எம்.எஸ்.காரியப்பர் (தமிழரசுக்கட்சி) | எம்.எம்.முஸ்தபா (தமிழரசுக்கட்சி) |

தொகுதிகளிலும் வாழ்ந்தவர்கள். 1962 இல் அம்பாறை மாவட்ட உருவாக்கத்தின் பின்பு அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்படும் இவர்கள் இன்று அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளில் வடக்கே பெரிய நீலாவணையிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறு வரை (உகந்தை வரை) பிரதான முஸ்லிம்களுடன் கலந்தும் செறிந்தும் அம்பாறைத் தேர்தல் தொகுதியிலே சிங்களவர்களிடையே மிகமிக ஐதாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

1947,1952,1956ஆம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்கள் 1946 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீழ் நிர்ணயத்தின் படி உருவாக்கப்பெற்ற தேர்தல் தொகுதியின் அடிப்படையிலேயே நடைபெற்றன. அதன்படி இன்று அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்பெறுவோர் அன்று கூடுதலாக வாழ்ந்த அன்றைய(1947-1959)



கல்முனை, பொத்துவில் ஆகிய இரு தொகுதியும் பாராளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்களே பிரதிநிதித்துவப்படுத்தினர்.

## அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என்போர் யார்?

இலங்கையின் சோல்பரி அரசியலமைப்பின் கீழான முதலாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் 1947 ஆகஸ்ட் ∴ செப்டம்பரில் நடைபெற்றது. சோல்பரி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய பாராளுமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக 1946இல் இலங்கை 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் 89 தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இத்தேர்தல் தொகுதிகளின் அடிப்படையிலேயே இலங்கையின் முதலாவது பாரளுமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அப்போது அம்பாறை மாவட்டம் உருவாகி இருக்கவில்லை. தற்போதைய அம்பாறை மாவட்டம் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தினுள் அடங்கியிருந்தது. அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்பகுதி துண்டாடப்பட்டு 1962 இல் "அம்பாறை" என்றொரு புதிய மாவட்டம் தனியான நிருவாக மாவட்டமாக உருவாக்கப்படும் வரை தற்போதைய அம்பாறை மாவட்டமும் மட்டக்களப்பு மாவட்டமும் இணைந்த நிலப்பரப்பே முன்னைய "மட்டக்களப்பு" நிருவாக மாவட்டமாக இருந்தது. இதன் எல்லைகள் வடக்கே வெருகல் ஆறு, தெற்கே குமுக்கன் ஆறு, கிழக்கே வங்காளவிரிகுடாக்கடல், மேற்கே வடமத்திய மற்றும் மத்திய ஊவா மாகாண எல்லைக்கோடுகள் ஆகும். மேற்கெல்லையைப் பொதுவாக ஊவாமலைக்குன்றுகள் எனவும் கூறலாம்.

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டமானது 1947 இல் நடந்த இலங்கையின் பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் போது கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் ஆகிய ஐந்து தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கியிருந்தது. அப்போது அம்பாறை என்றொரு தேர்தல் தொகுதி கூட இருக்கவில்லை.

1947க்கு முன்னர் சட்டசபைக்காலத்தில் (1931-1947) பட்டிருப்பு, கல்முனை, பொத்துவில் தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கிய முழு நிலப்பரப்பும் "மட்டக்களப்பு தெற்கு" என அழைக்கப்பெற்ற தனித் தேர்தல் தொகுதியாக இருந்தது. சட்டசபைக் காலத்தில் மட்டக்களப்பு தெற்கு தேர்தல் தொகுதியை முறையே ஜனாப் எச். எம்.எம்.மாக்கான் மாக்கார்(1931), எஸ்.ஒ.கனகரட்ணம்(1936), எஸ். தர்மரட்ணம்(1938), வி.என்.நல்லையா(1943) ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தினர். சட்டசபைக் காலத்தில் "மட்டக்களப்பு வடக்கு" என அழைக்கப்பெற்ற தேர்தல் தொகுதி கல்லடிப்பாலத்திற்கு வடக்கே வெருகல் ஆற்றையும் தாண்டி திருகோணமலை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது என்பதையும் கிழக்கு மாகாணம் என்பது அப்போது திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களையே கொண்டிருந்தது என்பதும் முழுக்கிழக்குமாகாணமும் மட்டக்களப்பு வடக்கு மற்றும் மட்டக்களப்பு தெற்கு எனும் இரு தேர்தல் தொகுதிகளையே கொண்டிருந்தது என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

இந்தப் பின்னணியில் அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென்கோடியில் வாழ்ந்த தமிழ் மக்களே தற்போதைய "அம்பாறை மாவட்டத் தமிழர்கள்" ஆவர். இவர்கள் அப்போதைய பட்டிருப்புத் தொகுதியின் தெற்கு எல்லைகளிலும் அப்போதைய கல்முனை மற்றும் பொத்துவில் தொகுதிகளிலும் வாழ்ந்தவர்கள். அப்போதைய பட்டிருப்புத் தொகுதி (1947-1959) பின்னாளில் 1959 இல் நடைபெற்ற தேர்தல்

தொடர்ச்சி பக்கம் -23

# நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 02

## ‘ஹாரலக்ஷ’ திரைப்படமும் ’கௌனி பாலம்’ நாடகமும்



**களனி பாலம்**

சுதந்திரசதுக்கத்திற்கு அருகில் அமைந்துள்ள குதிரைபந்தயத்திடல் இன்றும் அதன் சுவடுகளுடன்தான் காட்சியளிக்கிறது. 1965 காலப்பகுதியில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக பதவியிலிருந்தபோது இந்தத்திடலில்தான் அனைத்துலக கைத்தொழில் பொருட்காட்சி பல வாரங்கள் நடைபெற்றது.

இலங்கையில் நீளத்தின் அடிப்படையில் நான்காவது பெரிய நதி களனி கங்கை. வருடாந்தம் 8658 கனமீட்டர் மழை இந்த கங்கையை தழுவிக்கொள்வதனால் மழைக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து, மக்கள் சொல்லொணா துன்பங்களையும் அனுபவித்து வருகிறார்கள். இவ்வாறு பெய்யும் மழைநீரில் 64 வீதம் கடலில் சங்கமிக்கிறது என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**கொள்ளையடிக்கப்பட்ட பணம் களனி பாலத்தின் ஊடாகக் கடத்தப்பட்டு, கொலையில் முடிந்தது**


மழைக்காலத்தில் களனி கங்கை பெருக்கெடுத்துப்பாயும் காட்சிகளையும் வீதிகளை வந்தடையும் கங்கையினால் வாகனம் செல்லும் வீதிகளில் படகுகள் பவனிவருவதையும் பார்த்திருப்பீர்கள். கங்கையில்தான் அவ்வாறு நீர்மட்டம் பெருகிவருகிறது என்பது மாத்திரம் அதிசயமல்ல, களனிகங்கையின் மேலாக பேலியாகொடையில் அமைந்துள்ள பழைய இரும்புப்பாலத்திலும் அதன்பின்னர் பலவருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட கொங்கிரீட் பாலத்திலும் தினம் தினம் வாகன நெரிசலையும் பார்த்திருப்பீர்கள்.

இந்தக்களனி பாலத்தின் பின்னணியில் முக்கியமான சில சம்பவங்கள் நடந்துள்ளன. அவற்றில் 1949 ஆம் நடந்த பிரபல்யமான கொள்ளையும் ஒன்று. அக்காலத்தில் கொழும்பில் சுதந்திர சதுக்கத்திற்கு சமீபமாக குதிரைப்பந்தயத்திடல் இருந்தது. ஆங்கிலேயர்கள் இலங்கையை தமது அதிகாரத்தின் கீழே வைத்திருந்த காலத்தில் அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட குதிரைப்பந்தயம் காலியிலும் நுவரேலியாவிலும் விஸ்தரிக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்றபின்னரும், இங்கு குதிரைப்பந்தயங்கள் நடந்தன. பணக்காரர்களின் பொழுதுபோக்காக விளங்கிய குதிரைப்பந்தயம் ஒருவகையில் சூதாட்டம்தான்.

அந்தச்சூதாட்டம் சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டது ஒரு காலத்தில். 1949 ஆம் ஆண்டு குதிரைப்பந்தயப்பணம் நான்கு இலட்சம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது. கொழும்பை திகிலடையச் செய்த அச்சம்பவத்தை பின்னணியாகக் கொண்டு “ஹாரலக்ஷய” என்ற திரைப்படத்தை 1979 ஆம் ஆண்டு பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் டைட்டஸ் தொட்டவத்த இயக்கி வெளியிட்டார்.

1929 இல் பிறந்த அவருக்கு தமது 20 வயதில் நடந்த நாட்டையே உலுக்கிய சம்பவம், மறக்க முடியாததாக இருந்திருக்கவேண்டும். உண்மைச்சம்பவங்களின் பின்னணியில் கதைகள், திரைப்படங்கள், நாடகங்கள் வெளிவருவதை அவதானித்திருப்பீர்கள்.



*இயக்குநர் டைட்டஸ்தொட்டவத்த*

இற்றைக்கு 69 வருடங்களுக்கு முன்னர் நடந்த அச்சம்பவத்தில் கொள்ளையிடப்பட்ட நான்கு இலட்சம் ரூபாவும் களனி பாலத்தின் ஊடாகத்தான் எடுத்துச்செல்லப்பட்டு, புத்தளம் - அநுராதபுரம் வீதியில் வனப்பிரதேசத்தில் நடந்த ஒரு கொலைச்சம்பவத்துடன் அதிர்ச்சியான செய்திகளை கசியவிட்டது.

அச்சம்பவத்தில் தொடர்புகொண்டிருந்த நான்கு நபர்களுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. விசாரணைக்காக புத்தளத்தில் இருந்து வருகை தரும் சில முக்கிய சாட்சிகள் நீர்கொழும்பில் எங்கள் வீட்டில் தங்கிச்சென்றிருப்பதும் எனக்கு கனவுபோல் நினைவில் தங்கியிருக்கிறது. எனது அப்பா 1940 இற்குப் பின்னர் புத்தளம் கச்சேரிக்கு முன்பாக அமைந்திருந்த ஒரு சைவஹோட்டலில் கஷியராக பணியாற்றியவர். அதனால் அவருக்கு அறிமுகமான சில சாட்சிகள் எங்கள் வீட்டுக்கு முதல் நாள் வந்து கொழும்பில் நடந்த நீதிமன்ற விசாரணைகளுக்கு செல்வார்கள்.

**ரஸஞானி**

அந்தக் கொள்ளைப்பணம் கடத்தப்பட்டதும் அந்த களனி பாலத்தின் ஊடாகத்தான். விசாரணைகளுக்கு சாட்சிகள் வந்து திரும்பியதும்



அந்தப்பாலத்தின் ஊடாகத்தான்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பல வருடங்கள் கழித்து கொங்கிரீட்டில் அமைக்கப்பட்ட புதிய பாலத்தில் மற்றும் ஒரு கொள்ளைச்சம்பவம் நடந்தது. வங்கியிலிருந்து எடுத்துவரப்பட்ட பதினொரு இலட்சம் ரூபா ஆயுதமுனையில் கொள்ளையிடப்பட்டது. இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிகளும் தண்டனை அனுபவித்தார்கள்.

அக்காலத்தில் இலங்கை பொலிஸார் மிகுந்த கடமையுணர்வுடன் செயற்பட்டதனால் உடனுக்குடன் குற்றவாளிகள் கைதானார்கள். நீதி விசாரணையும் துரிதமாக நடந்திருக்கின்றன.

இக்காலத்தைப்போன்று அரசியல் தலையீடுகள் அக்காலத்தில் இல்லை. அதனால், குற்றவாளிகள் தண்டனை பெற்றார்கள். தற்காலத்தில் யார் அதிகம் குற்றச்செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதையும் பாதாள உலக கும்பல்களின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதையும் இங்கு சொல்லவேண்டிய அவசியம் இல்லை!
களனி பாலத்திற்கு கீழே ஓடிக்கொண்டிருக்கும் களனி கங்கைக்கரையில் குடிசைகள் அமைத்துவாழும் மக்களின் கதையை நாடகமாக்கியவர் பிரபல சிங்கள நாடக நெறியாளர் ஆர். ஆர். சமரக்கோன்.

“கௌனி பாலம்” என்ற குறிப்பிட்ட நாடகம் இலங்கையில் தென்பகுதியில் பல மேடையேற்றங்களைக் கண்டிருக்கிறது. இந்நாடகம் வெளிநாடுகளிலும் பல மேடையேற்றங்களை கண்டுள்ளது.

மேடையில் ஒரே காட்சி அமைப்பில் பல பாத்திரங்கள் பங்குபற்றும் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டிய நாடகம்தான் கௌனி பாலம.

ஒரு பாலமும் அதன்மீது ஒரு தெரு மின்விளக்கும் இரண்டு முனைகளிலும் இரண்டு குடிசைகளும்தான் அந்த நாடகத்தின் அரங்கம். அந்த செட்டுடன்தான் நாட்டின் பலபாகங்களிலும் “கௌனி பாலம” மேடையேறியது. அரசியல் நையாண்டி நாடகமாகவும் மக்கள் மத்தியில் பேசப்பட்டது. பதவிக்கு வரும் ஒவ்வொரு அரசின் தலைவர்களிடமும் தங்கள் குறைகளை அந்தப்பாலத்தை அண்டி வாழும் அன்றாடம் காய்ச்சிகள் சொல்வார்கள்.

தேர்தல் காலங்களில் அவர்களிடம் வாக்கு கேட்டுவரும் தலைவர்கள் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு செல்வார்கள். அதன் பின்னர் அந்தப்பக்கம் வரமாட்டார்கள்.

அரசுக்கும் அந்தப்பாலத்தின் அருகில் குடிசை அமைத்து வாழும் மக்களுக்கும் இடையில் நடக்கும் அன்றாடப்போராட்டத்தை “கௌனி பாலம” மிகவும் யதார்த்தபூர்வமாக சித்திரித்தது. உண்மைச்சம்பவங்கள் என்றுமே மக்களின் மனதில் நிலைத்திருக்கும். அந்த வகையில் ஹாரலக்ஷ திரைப்படமும், கௌனி பாலம திரைப்படமும் இன்றும் எனது நினைவுகளில் கலந்திருக்கின்றன. களனி கங்கை ஓடும் கரையில் அமைந்திருக்கும் களனி ரஜமஹாவிகாரை அமைந்திருக்கும் இடத்திற்கு கௌதம புத்தர் வருகை தந்திருப்பதாக மஹாவம்சம் என்ற புனித நூல் தெரிவிக்கிறது.

**புத்த பகவான் தரிசித்த இடமாகவும் களனி கங்கை கூறப்படுகின்றது**

களனி கங்கையினால், அந்தப்பிரதேசம் களனியாக அழைக்கப்பட்டு, வரலாற்றிலும் இலங்கை அரசியலிலும் பெரிய அதிர்வுகளையும் மாற்றங்களையும் உருவாக்கியிருக்கிறது. அந்தக்கதைகளுடன் அடுத்தவாரம் சந்திப்போம்.



# உண்மையிலேயே பிச்சை எடுப்பது சிலருக்கு ஒரு தொழில்

## தலைநகரின் பிச்சைக்காரர்களின் மறுபக்கம்



வீதியில் ஒரு பிச்சைக்காரனை ஒரு புகைப்படம் எடுக்க முயற்சித்த போது, அவரது கையில் கிடத்த ஏதோ ஒரு பொருள் என்னை நோக்கி பறந்து வந்தது. நானும் அந்த இடத்தில் இருந்து சிட்டாய் பறந்துவிட்டேன். அவர் உண்மையில் இயலாமையினால் பிச்சை எடுக்கவில்லை என்பதே இதற்குக் காரணம் என்பதை இப்போது புரிந்துகொண்டேன்.

பாத்திரம் அறிந்து பிச்சை போடு என்று சொல்வார்கள். இதனை எத்தனைப் பேர் செய்கிறோம் என்று தெரியவில்லை. கொழும்பில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையில் குறைவு இருந்தாலும், வீதிகளில் இன்றும் சிலரைக் காண முடிகிறது. பிச்சை என்பது பெரும்பாலானவர்களுக்கு மூலதனமே இல்லாத மிகப் பெரிய வருமானம் தரும் தொழிலாக இருக்கிறது.



மூலதனமே இல்லாமல் நாளைக்கு சராசரியாக 10 முதல் 15 ஆயிரம் ரூபா வருமானம் கிடைக்கிறது.
பிற்றகோட்டே என்ற பிரதேசத்தில் ஒரு பிரதான வீதியில் காலை, மாலை வேளைகளில் இந்த பெண்ணைக் காண முடியும். ஒரு காலை இழந்த இந்தப் பெண், வாகனங்களில் வருபவர்களிடம் கையை ஏந்துவார். இவரது தட்டை நிரப்பும் ஒரு கூட்டமே இருக்கிறது. கொழும்பில் பிச்சைக்காரரை அப்புறப்படுத்தும் செயல்திட்டத்தில் இந்தப் பெண்ணையும் பொலிசார் அள்ளிச் சென்றனர். அதன்பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்தப் பெண் பல உண்மைகளை வெளியிட்டுள்ளார். கொழும்பிலுள்ள பிச்சைக்காரர்கள் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கேட்டபோது மேல்மாகாண அபிவிருத்தி, மெகா பொலிஸ் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்தத் தகவலை எம்முடன் பகிர்ந்துகொண்டார். இப்படி இன்னும் பல



கதைகள் இருப்பதாகக் கூறினார்.

குறித்த பெண் விசாரிக்கப்பட்ட போது,

““எனக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றன. அவர்கள் தற்போது மேற்படிப்பு படிக்கின்றனர். அவர்களுக்கு நிறையவே செலவாகிறது. எனக்கு ஒரு கால் இல்லை என்பதால், அனுதாபத்தை எனது மூலதனமாக இட்டுள்ளேன்.““ என்று கூறியுள்ளார்.

இவ்வாறு பொலிசாரினால் அள்ளிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டவர்களில் இன்னுமொரு நபர்,

““எனது மகன் வாங்கியுள்ள காரின் மாதாந்த கொடுப்பனவைச் செலுத்த பிச்சை எடுக்கிறேன். எனது மகன் சொகுசு வாகனம் ஒன்றை வாங்கியுள்ளார். அவருக்கு மாதாந்தம் 90 ஆயிரம் ரூபா வரை செலுத்த வேண்டும். பிச்சை எடுப்பதால் அது மிகப்பெரிய சுமையாக தெரியவில்லை. என்று கூறியுள்ளார்.

பிச்சைக்காரர் குறித்து அண்மைக்காலமாக தேடி வந்தபோது பல அதிர்ச்சியான, சுவாரஸ்யமான, கவலையான செய்திகளும், தகவல்களும் கிடைத்தன. குறிப்பாக பிரதான வீதிகளின் சமிக்ஞை விளக்குகள் இருக்கும் இடங்களில் தான், அதிக வருமானத்தை இவர்கள் பெறுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஒரு தகவலைக் கூறினார். இவர்களில் பெரும்பாலானவர்கள் இயலாமையினால் பிச்சை எடுப்பதில்லை எனவும், இவர்கள் இதனை தொழிலாகவே செய்கின்றனர் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க எம்மிடம் கூறினார்.

இது குறித்து கடந்த சில நாட்களாகவே நாம் சற்று தேட ஆரம்பித்தோம். உண்மைதான். ஒரு சிலரைப் பார்க்கும் போது ஏமாற்று பேர்வழிகளாக இருக்கின்றனர். அவர்கள் பிச்சை எடுப்பதைத் தொழிலாக செய்கின்றனர். கொழும்பின் வர்த்தக மையமாக விளங்கும் புறக்கோட்டை, செட்டித்தெரு, மெயின்வீதி, குறுக்குத் தெருக்கள் ஆகிய இடங்களில் உள்ள கடைகளுக்கு வெள்ளி தோறும் பிச்சைக்காரர்கள் படையெடுப்பர். ஒரு கடைக்கு சாதாரணமாக 400 முதல் 500 பிச்சைக்காரர் வரையும் வருவதுண்டு. வெள்ளிக்கிழமைகளில் காலை முதல் மாலை வரை இவர்களின் வருகையில் குறைவிருக்காது. அனைத்துக் கடைகளிலும் இல்லையெனக் கூறாது இவர்களின் தட்டுகளில் சில்லறைகள் விழுவதுண்டு. இதற்காகவே சில்லறைகளை மாற்றி வெள்ளிக்கிழமைகளில் கடைகளில் வைத்திருப்பார்கள். மூலதனமில்லாத, அதிக வருமானம் கிடைக்கும் தொழிலாக அவர்களுக்கு இது இருக்கிறது. எனினும், உண்மையிலேயே கையறு நிலையில் வீதிகளில் இருப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

காலி பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த போது ஒரு தனியார் வங்கி வாசலில் காலில் காயங்களுடன் ஒரு தாத்தா பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் 20 ரூபா நோட்டு ஒன்றை நீடியபடியே, ஒரு படம் பிடித்துக் கொள்ளவா என்று கேட்டேன். அவரும் தேவையான மாதிரி பிடித்துக் கொள்ளுங்கள் என்று பேச ஆரம்பித்தார். இப்படி வீதியில் இருப்பது பொலிசாரினால் பிரச்சனை ஏதும் ஏற்படாதா என்று கேட்டோம்.

““முன்னர் பிரச்சினை இருந்துச்சு. ஆனால் இப்போ இல்ல. கொழும்பில் ஏதாவது சர்வதேச மாநாடு நடக்கும் போது எங்கள வந்து பிடிச்சிட்டுப் போவாங்க..

**ஹரேந்திரன் கிருஷ்ணசாமி**

அப்புறம் மாநாடு முடிஞ்சவுடன் நாங்க திரும்ப வந்துறலாம். வெளிநாட்டில இருந்து வரும் வெள்ளக்காரங்களுக்கு கொழும்பில பிச்சைக்காரங்க இருக்கிறது தெரியக்கூடாது என்பதற்காக இதை செய்யறாங்க. என்று கூறினார்.

உங்களை எங்க கூட்டிக்கிட்டுப் போவாங்க என்று கேட்டோம்.

ரிதீகம என்ற இடத்தில ஒரு இடம் இருக்குதாம். நான் போனதில்ல. போயிட்டு வந்த ஒருவர் சொன்னாரு. அங்க எந்த வசதியும் இல்லையாம். நோயாளிகளுக்கு சரியாக கவனிப்பு கூட இல்லையாம். நிறைய பேரு இறந்துட்டதாக சொன்னாங்க..““

உங்க ஊரு எது? உங்களுக்கு வேற யாரும் இல்லையா? என்று கேட்டோம்.

என் ஊரு காலி. எனக்கு யாரும் இல்ல. கல்யாணமும் கட்ட இல்ல.. அப்படியே ரோட்டுக்கு வந்துட்டேன். இப்போ இந்த ஏரியாவில தான் இருக்கிறேன்.

அப்போ உங்களுக்குனு ஒரு இடம் இல்லையா? என்று கேட்டோம்.““இல்ல. இங்கே தான் இருக்கிறேன். பக்கத்தில பன்சல ஒன்னு இருக்கு. அதில குளிச்சுக்குவேன். இரண்டு உடுப்பு மட்டும் இருக்கு. இப்படித்தான் வாழ்க்கை போகுது. சிறிமா காலத்தில, 71ஆம்



ஆண்டில இலங்கையில ஒரு மாநாடு நடந்துச்சாம். அதில கலந்துகொண்ட இளம் தலைவர் ஒருவரும் கடைசியல பிச்சை எடுக்கிற நிலைமைக்கு வந்துட்டாராம். பார்த்தீங்களா வாழ்க்கைய என்று கூறிக் கொண்டே வீதியில் நடந்து கொண்டிருந்தவர்களை நோக்கி அவரது கை நீண்டது.

சரி தம்பி நீங்க கிளம்புங்க. அந்தி நேரம் என்பதால இப்போ தான் எனக்கு எதாவது கிடைக்கும். என்று சிரித்த முகத்துடன் சொன்னார்.

அப்படியே வந்துகொண்டிருக்கும் போது ஒரு மயானத்தின் பிரதான வாயிலுக்கு அருகில் ஒரு சக்கர நாற்காலியில் ஒருவர் இருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு காலை இழந்திருந்தார். வாகனத்தை நிறுத்திவிட்டு, அவரிடம் சென்று ஒரு நோட்டை நீட்ட அதனை வாங்கிக் கொண்டார். அப்படியே ஒரு படம் எடுத்துக்கவா என்று கேட்க, சரி என்று தலையசைத்தார்.



அவரின் படங்களை எடுத்துக் கொண்டு அவருடனும் சிறிது நேரம் பேச ஆரம்பித்தோம். நாம் கேள்விகளைக் கேட்க, அவரும் பதில் சொல்லிக் கொண்டே போனார்.

““என்ற பெயர் ருவான். இங்க பக்கத்தில தான் இருக்கிறேன். என்னை ஒரு நண்பர்தான் இங்க தள்ளிக்கிட்டு வருவார். தள்ளிக்கிட்டு வர யாரும் இல்லனா வரக்கிடைக்காது. நான் முன்னாடி நகர சபையில குப்பை அள்ளுற வேலை பார்த்துக்கிட்டு இருந்தேன். ஒருநாள் பஸ்சுக்கு நிற்கும்போது, வேகமாக வந்த பஸ், என் காலை எடுத்துறுச்சு. என்றார்.

சற்று பதற்றத்துடன், எப்போ இது நடந்துச்சு, ஏதாவது நட்டஈடு கொடுத்தாங்களா என்று கேட்டோம்.

ஒருவித சலிப்புடன், கொடுத்தாங்க. 1500 ரூபா கொடுத்தாங்க.. இது நடந்து இப்போ 15 வருசம் ஆகுது. கால் போனவுடன் எல்லாம் போச்சு. எனக்கு கல்யாணம் ஆகி இரண்டு பிள்ளைகள் இருக்கிறாங்க. மனைவி இல்ல. பிள்ளைகளும் என்னைப் பார்க்கிறது இல்ல. என்னை ஒதுக்கியே வைச்சிட்டாங்க.. என்று கூறிக்கொண்டே, எனக்கு ஒரு உதவி செய்வீங்களா என்றார்.

என்ன என்று கேட்க, ““என்னை ஒரு முதியோர் இல்லத்தில சேர்த்துவிட முடியுமா? என்று பரிதாபமாகக் கேட்டார். நிச்சயமாக ஒரு இடத்தைத் தேடித் தர முயற்சிக்கிறோம். என்று கூறி அவரை மீண்டும் எவ்வாறு தொடர்புகொள்வது என்ற விபரங்களைக் கேட்டுக்கொண்டு விடைபெற்றோம். அப்போது அவர், நீங்க என்னோட கதைச்சது ரொம்ப சந்தோசமா இருக்கு.. ரொம்ப நன்றி. எனக்கூறி வழியனுப்பிவைத்தார்.

வீதிகளில் காணும் மனிதர்கள் எத்தனை வகைகளில் இருக்கிறார்கள் என்ற சிந்தனையுடன், அவருக்கு ஒரு முதியோர் இல்லத்தை தேடிக்கொடுக்க வேண்டும் என்ற நினைப்புடன், கனத்த உணர்வுடனும் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து வந்தோம்.



# முத்தமிழ் வித்தகருக்கு ஆயிரம் மாணவர்களின் நாட்டியாஞ்சலி

"மட்டுநகர் அழகான மேடையம்மா.. இங்கு எட்டுதிசையும் கலையின் வாடையம்மா....." என்பது காசியானந்தனின் வரிகள், யாராவது இவ்வரிகளை கவிஞனின் கற்பனை கிறுக்கு என புரிந்துகொண்டிருந்தால்
அப்புரிதலை புடம் போடும் நிகழ்வு ஒன்று கடந்த 03.05.2018 அன்று 4.00 மணிக்கு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

1000 க்கு மேற்பட்ட மாணவர்கள் தங்களது நாட்டிய சமர்ப்பணத்ததை சுவாமி விபுலானந்தர் அவர்களுக்கு
சமர்பித்ததிந்த வரலாற்று நிகழ்வு அது.
சர்வதேச நாடக தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு வலயகல்வி பணிப்பாளர் திரு. கே.பாஸ்கரன் அவர்களின் முயற்சியினால் காலாவித்தகர் மலர்விழி சிவஞானசோதிகுரு அவர்களின் நெறியாக்கையில்
இடம்பெற்றது இவ் நாட்டியாஞ்சலி.

சுவாமி விபுலாந்தரின் உருவப்படத்திற்கு



மாலைசமர்பணம் செய்து ஆரம்பமான இந்த நிகழ்வு, மைதானத்தின் நடுவே மேடையும், அதனை சூழ 1000 மாணவர்களும் வரிசையாவும் கணபதி வணக்கத்துடன் ஆரம்பமாகி, வித்தகரின் "வெள்ளை நிற மல்லிகையே..."
பாடல் என தொடர்ந்தது.
பரதம் மட்டும்தானா என ஏங்கி பார்துக்கொண்டிருந்த உள்ளங்களுக்கு காசிஆனந்தனின் வரிகளில் "மீன்மகள் பாடுகின்றாள்..." பாடலுக்கான நடனம் அழகாக ஆற்றுகை செய்யப்பட்ட அவ்பாடல் வரிகளில் குறித்து காட்டப்படும் மட்டக்களப்பு நாட்டார் கலைகளை ஆற்றுகைகளாக புகுத்தி மட்டக்களப்பு நாட்டார் கலைகளின் வடிவங்களை மிகவும் அழகாக காட்சிப்படுத்தியிருந்தனர்.

வலய கல்விப்பணிப்பாளர் திரு. கே.பாஸ்கரன் அவர்களின் தலைமையில், மட்டக்களப்பு மாநகர முதவ்வர் கௌரவ. தி.சரவணபவான் பிரதம அதீதியாகவும், பரீட்சை திணைக்கள பிரதிப்பணிப்பாள் திருமதி. ஜீவராணி புனிதா அவர்களும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் .கே. குணநாதன் அவர்களும் சிறப்பு அதீதிகளாக

## பிரசாத் சொக்கலிங்கம்

கலந்து கொண்ட இந்த நிகழ்வில் சகல பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் பெரும் தொகையான பொதுமக்கள் என மைதானம் நிறைந்து காணப்பட்டதுடன் இறுதியாக இச் சாதனைக்கு காரணகர்த்தாவான
காலாவித்தகர் மலர்விழி சிவஞானசோதிகுரு அவர்களுக்கு பொன்னாடை கௌரவம் வழங்கப்பட்டது.


பல்துறை ஆளுமைகொண்ட புரட்சியாளன் சுவாமி விபுலானந்தரை விளங்கி கொள்வதற்கு கூட நாம் வளரவில்லை எனினும் அவரின் 126 ஆவது பிறந்த தினத்தை 1000 மாணவகளின் ஆற்றுகையால் அஞ்சலித்தோம் என்பது வரலாற்றில் பதியப்பட வேண்டிய விடயம்தான.


# ஜனரஞ்சக எழுத்தாளர் மறைந்த "ஆரையம்பதி நவம்"

நாட்டுக் கூத்து, நாட்டார் பாடல் போன்றவற்றிக்கு மாத்திரம் புகழ்பெற்றதல்ல மட்டக்களப்பு, யாழ்பாணத்தில் எப்படி ஒரு புலவர் பாரம்பரியமும் அதன் பின் ஜனரஞ்சக படைப்புப் பாரம்பரியமும் இருந்ததோ அவ்வாறே மட்டக்களப்பிலும்

ஓர் புலவர் பாரம்பரியமும் அதனை தொடர்ந்து ஜனரஞ்சக இலக்கிய பாரம்பரியமும் இருந்திருக்கின்றது, இருந்து கொண்டிருக்கின்றது. இதனூடாக ஜனரஞ்சகத் தன்மை கொண்ட படைப்பாளியாக நவம் அவர்கள் முதன்மைபெறுகின்றார், என்றார் பேராசிரியர் மௌனகுரு.

"கா" கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில், ஈழத்தின் மூத்த படைப்பாளி "ஆரையம்பதி நவம்" அவர்களின் முதலாம் ஆண்டு நினைவையொட்டி "நவம் அவர்களை நீள நினைதலும், நினைவு மலர் வெளியீடும்" மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கடந்த





06.05.2018 அன்று 10.00 மணிக்கு "கா" எழுத்தாளர் ச.மணிசேகரம் அவர்களின் தலைமையில் நடந்தது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மௌனகுரு பிரதம அதீதி உரையை நிகழ்த்துகையில் இவ்வாறு குறித்துக்காட்டினார். அத்தடன் நவத்தின் படைப்புலம் பற்றிய ஓர் பார்வையை மைக்கல் கொலின் அவர்களும், "ஆகமம் சாரா வழிபாட்டு முறை" என்ற தொனிப்பொருளில் கலாநிதி.குணபாலசிங்கம் அவர்களும் உரையாற்றிய இவ் நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு இலக்கிய பாரம்பரியத்தில் ஆரையம்பதி தவிர்க்கமுடியாத இடத்தை பெறுகின்றது. இதனுடே "நாடகத்தார் கத்தறை" என பெயர் கொண்ட குடும்பம் ஒன்று ஆரையம்பதில் உருவாகின்றது. அக்குடும்பத்தில் தனது 15 ஆவது வயதில் "காணாமல் போன கணபதி" என்ற ஓர் சிறுகதையை சுதந்திரனில் எழுதியன் மூலம் வெளிவருகின்றார் "ஆரையம்பதி நவம்" என அறியப்பட்ட சீனித்தம்பி ஆறுமுகம் அவர்கள்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை காலங்களில் "பாரதி" என்ற கையெழுத்து சஞ்சிகையை தனது நண்பன் அன்புமணியோடு வெளியிட்டது தொடக்கம் ஓர் பாத்திரிகையாளனாக பயணப்பட்டு பத்திரிகைகளில் தொடர்கதைகள் எழுதத்தொடங்கி, பின்னர் அவர் பயணக்கட்டுரைகள் என்ற பக்கம் திரும்பிய போது, பலரை திரும்பிப் பார்க்க வைத்தார்.

1960 ல் கல்கி நடாத்திய போட்டியில் "நந்தாவதி" என்ற சிறுகதை பெற்ற வெற்றியினால் மட்டக்களப்பு நவீன

## பிரசாத் சொக்கலிங்கம்

இலக்கியத்தை தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்த பெருமையும் நவம் அவர்களையே சாரும். நாட்டு சூழல்களால் தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்தபோது இவர் தமிழ்நாட்டு சினிமாவுக்குள் நுழைகின்றார். ஜுலிகணபதி என்ற படத்தில் சிறுபாத்திரத்தில் நடித்தது, புத்தரின் பெயரால் என்ற திரைப்படத்திற்கு ஈழத்தமிழ் கதை வசனம் எழுதியது என அவரது சினிமா அனுபவங்கள் விரிந்தன. கவிப்பேரசு வைரமுத்து, பாலு மகேந்திரா போன்றவர்களின் நெருங்கிய நட்பு இவரது சினிமா பயணத்தில் உறுதுணையாக இருந்தது.

தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் மேஜர் சுந்தரராஜனோடு இணைந்து தனது "நந்தாவதி " கதையை படமாக்க முயன்று கைகூடாததை நினைத்த அடிக்கடி பேசும் இவர். தனது இறுதிக்காலத்தில் தனது சொந்த மண்ணில் வாழ்ந்து அங்கேயே காலமாகியிருந்தார்.

## அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு புதிய அதிபராக களுதாவளையைச் சேர்ந்த சதாசிவம் தியாகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிக்கு உப அதிபராக இருந்து அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரிக்கு பிரதி அதிபராக பொதுச் சேவை ஆணைக்குழுவால் இவ்வருடம் முதல் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது புதிய அதிபராக திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் களுதாவளை மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று. முகாமைத்துவ பட்டத்தினை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும், கல்வியியல் பட்டமேற்படிப்பினை திறந்த பல்கலைக்கழகத்திலும், முகாமைத்துவத்தில் பட்டமேற்படிப்பினையும், முகாமைத்துவத்தில் முதுமானியினை ரஜரட்ட பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றி, இலங்கை உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனத்தில் ஆறு வருட காலம் கல்வி இணைப்பாளராக கடமையாற்றி ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர் தேசிய டிப்ளோமாதாரிகளை உருவாக்கியவர்.



# "வியாளை அரசியின் மட்டக்களப்பு மருமகன்"

## கோயம்பராவின் குறிப்புகளிலிருந்து



கதிர்காமம் நடந்து போகும் எல்லாருக்கும் "வியாளை" என்பது நன்கு அறிமுகமான பெயர். குமுக்கனாற்றுக்கும் கதிர்காமத்துக்கும் இடையில் பரந்திருக்கும் அடர்ந்த காட்டுப்பகுதி அது. சிங்களத்தில் அதை "யால" என்று சொல்லுவார்கள். கதிர்காம யாத்திரை செல்கின்ற பலர், வியாளையில் "கொள்ளி" பொறுக்கவோ "கடன்" கழிக்கவோ அந்தப்பக்கம் இந்தப்பக்கம் செல்லும் போது, அங்கு கட்டிட இடிபாடுகளையும் சிதைந்த தொல்பொருள் எச்சங்களையும் காண்பது வழக்கம். ஏனென்றால் பழங்காலத்தில் மக்கள் செறிந்து வாழ்ந்த குடியிருப்புகளில் ஒன்றாகத் திகழ்ந்த இடம், வியாளை.

சிங்கள வரலாற்று நூல்கள் சொல்லும் உரோகண நாடு, தென்கிழக்கிலங்கையில் அமைந்திருந்ததாகவும், அதன் தலைநகர் மாகாமம் (இன்றைய திஸ்ஸமகாராமை □ கிரிந்த பகுதி) என்றும் சொல்லுவார்கள். அந்த நாட்டின் வட எல்லை, இன்றைய அம்பாறை மாவட்டம்வரை விரிந்திருந்தது என்று கொள்வதற்கு பல சான்றுகள் உள்ளன. மாணிக்ககங்கைக்கு வடக்கே, மட்டக்களப்பின் தென்பகுதியில்



அமைந்திருந்த "உன்னரசுகிரி" என்னும் இராசதானி பற்றி "மட்டக்களப்புப் பூர்வசரித்திரம்" நேரடியாகவும் "கோணேசர் கல்வெட்டு" நூல் மறைமுகமாகவும் விரிவாகச் சொல்கின்றன. ஒல்லாந்தர், தங்கள் இலங்கை வரைபடங்களில் மட்டக்களப்பின் தென்புற எல்லையாக அக்கரைப்பற்றின் தென் அந்தமாக விளங்கிய சங்கமன்கண்டியையே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். சங்கமன் கண்டிக்குத் தெற்கே அமைந்திருந்த பாணமைப்பற்று (இன்றைய லகுகலை, பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவுகள்) மாத்திரம், மட்டக்களப்புத் தேசத்தின் ஏனைய பற்றுக்கள் போலன்றி, சிங்கள வன்னிமையால் பரிபாலிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்

போது, உன்னரசுகிரி அல்லது உரோகண நாட்டின் ஒரு அரசிருக்கை, கதிர்காமத்துக்கும் சங்கமன்கண்டிக்கும் இடையே, வியாளை மற்றும் பாணமைப்பகுதியை உள்ளடக்கிய பகுதியில் இருந்திருக்கிறது என்ற முடிவுக்கே வந்துசேர முடிகின்றது.

அது இருக்கட்டும். இன்னும் தலைப்புக்கே வந்து சேரவில்லையே? யார் அந்த வியாளை அரசியின் மருமகன் என்று கேட்கிறீர்களா?

பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையில் தங்கியிருந்த போர்த்துக்கேய பாதிரியாரில் குறிப்பிடத்தக்க ஒருவர் சைமாவோ டீ கோயம்பரா. மட்டக்களப்பு பற்றிக் குறிப்பிடுகின்ற மிகப்பழைய ஆவணங்களில் ஒன்று, இவரால் போர்த்துக்கேய மன்னனுக்கு அனுப்பப்பட்ட கடிதம். அதில் தான் வியாளை அரசியின் மருமகன் பற்றிக் குறிப்பிடுகிறார் கோயம்பரா.

அந்த மடல், 1546ஆம் ஆண்டு போர்த்துக்கேய மன்னனான மூன்றாம் ஜோனுக்கு எழுதப்பட்டது. தான் இந்தியா செல்லும் போது மட்டக்களப்பு மன்னனைச் சந்தித்ததாகவும், அவன் எழுபது வயது தொண்டுக்கிழவன் என்றும் கோயம்பரா எழுதுகிறார். "மட்டக்களப்பு மன்னன் கிறிஸ்தவத்தைத் தழுவ பெரும் ஆர்வமாக இருக்கும் போதும், அவனது மாமியின் எதிர்ப்பால் அதைச் செய்யாமல் இருந்தான்", கோயம்பரா தொடர்ந்தும் சொல்கிறார், "ஆனால், அவனது பன்னிரண்டு வயது மகன் "தொம் லூயிஸ்" என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்றுவிட்டான். இந்த மன்னன், நமக்கு உதவவும், கண்டி இளவரசனோடு சேர்ந்து ஞானஸ்நானம் பெறவும், தயாராக இருக்கிறான். மேலும் மட்டக்களப்புத் துறைமுகங்களை நாம் பயன்படுத்துவதற்கான அனுமதியையும் அவன் வழங்கி இருக்கிறான்".
கோயம்பரா எழுதும் இந்தக் கடிதத்தில், போர்த்துக்கேய அரசனுக்கு வழங்குமாறு கூறி மட்டக்களப்பு மன்னன் தந்ததாகச் சொல்லப்படும் ஒரு கடிதப்பிரதியும் இணைக்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் மேல், கோயம்பராவின் கடிதத்தில் வருகின்ற, "வியாளை நாடு ஒருபுறம் மாயாதுன்னையின் சீதாவாக்கை நாட்டாலும், மறுபுறம் மட்டக்களப்பு நாட்டாலும் சூழப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு மன்னன் வியாளை அரசியின் மருமகன் என்பதால், அவனே தற்போது வியாளையையும் ஆண்டு வருகிறான்" என்பதே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பு. இதிலிருந்து பல வரலாற்றுத் தகவல்களை நம்மால் பெறமுடிகின்றது.



ஒன்று, வியாளை என்பது தனித்த அரசொன்றால் ஆளப்பட்ட பகுதி. உன்னரசுகிரி என்று மட்டக்களப்புப்

## மைங்கணான் மகிழறிவன்

பூர்வ சரித்திரம் சொல்வது, வெறும் கட்டுக்கதை அல்ல; வியாளைப் பகுதியில் உண்மையில் இருந்த ஒரு சுயாட்சி அரசு தான் என்பது கோயம்பராவின் குறிப்புகள் மூலம் உறுதியாகின்றது.



பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்தே, வியாளை ஒரு தனி அரசு என்பதும், அதன் பின்னர் ஏற்பட்ட தொற்றுநோயொன்று காரணமாக அங்கு மெல்ல மெல்ல குடித்தொகை எண்ணிக்கை குறையத்தொடங்கியது என்பதும், இன்னொரு போர்த்துக்கேயக் குறிப்பில் காணக்கிடைக்கின்றன்.

அடுத்தது, கோயம்பரா சொல்லும் மட்டக்களப்பு மன்னனுக்கு முன்பு, இந்த வியாளையை ஆண்டவள் ஒரு அரசி. ஒரு பெண். அவளது மகளை மணந்தே மட்டக்களப்பு மன்னன் இந்த அரசுரிமையைப் பெற்றிருக்கலாம் என்பதும், எனவே வியாளைக்கும் மட்டக்களப்புக்குமான மணத்தொடர்பும் மிகப்பழங்காலத்தொட்டே இயல்பாக இருந்திருக்கிறது என்பதும், ஊகிப்பதற்கு அத்தனை கடினமானதல்ல.

"மட்டக்களப்பு மன்னனின் அன்ரி" தூண்டிவிட்ட கலகத்துக்கு அஞ்சியே அவன் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறவில்லை என்று தான் கோயம்பரா சொல்கிறார்.

## அனைத்து எல்லை அழுத்தங்களையும் தாக்குப் பிடித்த பெண்ணரசி

அவர் வியாளை அரசி பற்றி முன்பே குறிப்பிட்டிருப்பதால், அந்த "அன்ரி", அத்தையாக - வியாளை அரசியாக இருக்கவே வாய்ப்புகள் அதிகம். அவனுக்கு இப்போது எழுபது வயதாகிவிட்டது என்பதும், இப்போது மதம் மாறுவதற்கு அவன் துணிவுடன் ஒத்துக்கொள்கிறான் என்பதும் இப்போது அந்த வியாளை அரசி உயிரோடு இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்கின்றன.

கோயம்பராவின் காலம், போர்த்துக்கேயர் இலங்கைக்குள் ஊடுருவி விட்ட காலம். ஒருபுறம் சீதாவாக்கை, கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்னும் நான்கு அரசுகள் அதிகாரத்துக்காகப் போட்டியிட்டுக்கொண்டிருந்த காலம். அப்போது வியாளை என்னும் சின்னஞ்சிறு பகுதியொன்றை பெண்ணொருத்தி ஆண்டு வந்திருக்கிறாள். இராஜதந்திரமாக செயற்பட்டு மட்டக்களப்பு மன்னனையும் கூட்டுச் சேர்ந்திருக்கிறாள். அவன் ஆட்சியைத் தக்க வைப்பதற்காக மதம் மாற முயன்றபோது சீறியெழுந்து அவனைக் கண்டித்திருக்கிறாள். அவள் எதிர்கொண்டிருக்கக்கூடிய சவால்களை எண்ணிப் பார்க்கும் போது, சாகசக் கதையொன்றுக்குள் உலவுவது போன்ற உணர்வு ஏற்படுகின்றது.

ஏனோ மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் பெரும் வீராங்கனையாக வர்ணிக்கப்படும் உன்னரசுகிரியின் பேரரசி "ஆடக சௌந்தரி" நினைவில் மின்னி மறைகிறாள். கூடவே உலகநாச்சி, தம்பதி நல்லாள், சீர்பாததேவி, முதலான கிழக்கிலங்கைத் தொன்மங்களின் நாயகியரும் எண்ணத்தில் தோன்றி புன்னகைக்கிறார்கள். அவர்களெல்லாம் கதைகளா, கற்பனைகளா என்பதற்கெல்லாம் மேல், அந்தக் குணாதிசயங்களுடன் இரத்தமும் சதையுமாய் வாழ்ந்த எத்தனையோ பெண்களை இந்த மண் கண்டிருக்கிறது; அந்த மண்ணின் மீது தான் நாம் வாழ்ந்து வருகிறோம் என்ற எண்ணமே சிலிர்ப்பை ஏற்படுத்துகிறது.

## ஆடக சௌந்தரி, உலக நாச்சியார், தம்பதி நல்லாள், சீரபாததேவி முதல் வியாளை வரை வீரப்பெண்களால் ஆளப்பட்ட பகுதி கிழக்கு மண்

வெள்ளி, வைகாசி 11, 2018.
இதழ் – 12

# குமரிக் கண்டம் (லெமூரியா) என்பது பொய்யா?

## சங்கம் வளர்த்த பழைய மதுரை கடலில் மூழ்கவில்லை

**தமிழர்** தோன்றியது எங்கே? என்று யாரிடமாவது கேட்டால், மிகப்பெரும்பாலானோரின் பதில் குமரிக்கண்டம் என்பதாகவே அமையும். குமரிக்கண்டத்திற்கான மறுப்பு அறிவியல் விளக்கங்கள் பல வெளிவந்துள்ளபோதிலும், பாமர மக்கள் மட்டுமன்றி அறிஞர்கள் பலர்கூடக் குமரிக்கண்டத்தை நம்பியே வருகின்றனர்.


அண்மையில் தமிழாற்றுப்படுகை எனும் தொடர்சொற்பொளிவு நிகழ்வில் மறைமலை அடிகளார் பற்றிய உரையில் கவிப்பேரரசு வைரமுத்துவே தமிழர்



தோன்றியது லெமோரியக்கண்டத்தில் எனக்குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று ஒரிசா பாலு எனும் ஆழ்கடலாய்வு நிபுணரும் இன்றும் குமரிக்கண்டத்தை வலியுறுத்தியே வருகின்றார். இவர்கள் இருவரும் தமது துறைகளில் வல்லுனர்கள் என்பதுடன் தமிழிற்கும் மிகப்பெரிய பங்களிப்பினை நல்கியவர்கள் என்பதில் ஐயமில்லை, எனினும் இவர்களது குமரிக்கண்டம் பற்றிய கருத்துத் தவறானது. இவ்வாறு பாமரர் முதல் படித்தவர்களில் பலரிடம் வரை பரவலடைந்துள்ள விடயமான குமரிக்கண்டம் பற்றிய ஒரு சிறு ஆய்வாகவே இக்கட்டுரை அமைகின்றது.

### குமரிக்கண்ட கருதுகோளின் தொடக்கம்:

குமரிக்கண்டம் பற்றிய கோட்பாடு தோன்றுவதற்கு முன்னரே, தமிழர்களின்



தோற்றத்தினை மையப்படுத்தி அவ்வாறான ஒரு தேடல் தமிழர்களிடம் ஏற்கனவேயிருந்தே வந்தது. இவ்வாறான தேடலிற்கு அடிப்படையாகப் பின்வரும் காரணிகள் காணப்பட்டன.

சங்க இலக்கியங்களானது அக் காலத்தில் செழிப்புற்றிருந்த நகரங்கள் பற்றிப் பேசியபோதும், அத்தகைய நகரங்களின் எச்சங்கள் எதுவும் தமிழகத்தில் 20ம் நூற்றாண்டுவரை கண்டுபிடிக்கப்படாமை. (முன்னைய அகழ்வாய்வுகளில் ஈமத்தாழிகளே பெருமளவிற்கு கிடைத்திருந்தன)

சங்க காலத்திலேயே தமிழர்கள் எழுத்தறிவு பெற்றிருந்தபோதும், அண்மைக்காலத் தொல்பொருளாய்வுகள் வரை எந்தவித எழுத்து மூலமான சான்றுகளும் இல்லாமை. (முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் மிகப்பெரும்பாலானவை பொது ஆண்டு பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்வையாகவே காணப்பட்டன)

சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரையின் அமைவிடமானது தற்போதைய மதுரையின் அமைவிடத்திலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டமையால் பழைய மதுரை பற்றிய தேடல். (பத்துப்பாட்டு ஆராய்ச்சி எனும் நூலில் இராசமாணிக்கர் மதுரையின் அமைவிடம் பற்றி விளக்கமாக் கூறியுள்ளார்)

சங்ககால இலக்கியங்கள் மணி மாலை போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளையும், அதனையொட்டிய துறைமுகங்கள் பலவற்றையும் குறிப்பிட்டுள்ளபோதும், அதற்கான தொல்பொருட் சான்றுகள் கிடைக்காமை.

இவ்வாறான காரணங்களால் தமிழரின் தோன்றிய இடம் பற்றிய தேடல்களில் ஈடுபட்டிருந்த தமிழர்களைத் தென்பகுதி நோக்கித் தள்ளுவதாக ஒரு காரணி அமைந்தது. அது தமிழ் மொழியானது தெற்கேயிருந்து வடக்கே செல்லச் செல்ல சிதைவடைந்து சென்றமையாகும். இதுவே தமிழர் தோன்றிய இடத்தினை தெற்கு நோக்கிக் காட்டிற்று.

இறையனார் அகப்பொருள் உரையில் பாண்டியப் பேரரசு கடற்கோளால் அழிந்தது பற்றிய விளக்கமான குறிப்புகள் காணப்படுகின்றமை. ஏற்கனவே தெற்கு நோக்கித் திரும்பியிருந்த பார்வை, இறையனாரின் இந்த பாண்டியநாடு கடற்கோளால் மூழ்கியது என்ற கருத்தால் கடலை நோக்கித் திரும்பியது.

மேற்கூறிய காரணிகளே குமரிக்கண்டம் பற்றிய கருதுகோளிற்கு அடிப்படையாக அமைந்தன. முதன்முதலில் 1903 இல் பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூர்யநாராயண சாசுதிரி) தமிழ் மொழியின் வரலாறு என்ற தன்னுடைய நூலில் குமரிநாடு என்ற சொல்லைப் பயன்படுத்தினார். பின்பு குமரிக்கண்டம் என்ற சொல்லை ஈழத்தமிழறிஞரான ப.கனகசபையை "1800 ஆண்டுகளிற்கு முன்னர் தமிழர்கள்" என்ற நூலில் பயன்படுத்தியதுடன், மறைந்த நிலப்பகுதியே குமரிக்கண்டம் என்றும் கூறியிருந்தார். இவர்களைத் தொடர்ந்து பாவாணர், அப்பாத்துரையார் போன்றோர் குமரிக்கண்டம் பற்றிய கருதுகோளினைப் பெரிதும் பரவலடையச் செய்திருந்தனர்.


### இலெமூரியா :

இவ்வாறு தமிழர்களின் தேடல் கடலை நோக்கித் திரும்பியிருந்தவேளையில் மேற்கத்திய அறிஞர்களால் லெமோரியாக் கண்டம் பற்றிய கருதுகோள் ஒன்று முன்வைக்கப்பட்டது. 1864 இல் லெமூர் என்ற விலங்கானது மடகாசுடரிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் (லெமூர் ஆபிரிக்காவில் காணப்படாமல்) காணப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு பிலிப் ஸ்க்லேட்டெர் என்னும் ஆராய்ச்சியாளரால் ஒரு ஆக்கம் முன்வைக்கப்பட்டது. இதுவே லெமோரியாக் கண்டம் பற்றிய கருதுகோள் தோன்றிய அடிப்படையாகும். இந்த லெமோரியக் கண்டம்தான் குமரிக்கண்டம் என 1906ம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளிவந்த சித்தாந்த தீபிகை என்ற இதழில் நல்லசிவம்பிள்ளை என்பவர் முதன்முதலில் எழுதினார்.

பின்னர் குமரிக்கண்டமானது லெமோரியக்கண்டம், நாவலந்தீவு எனப் பல பெயர்களில் தமிழர்களால் அழைக்கப்பட்டது. லெமோரியக்கண்டம் பற்றிய கருதுகோளானது நீண்டகாலத்திற்குத் தாக்குப்பிடிக்கவில்லை. அதாவது லெமூர் என்ற விலங்கானது மடகாசிடரிற்கும் இந்தியாவிற்குமிடையே பரந்திருப்பதற்கு டார்வினின் பரிணாமக்கோட்பாட்டின்படி தகுந்த விளக்கம் கொடுக்கப்பட்டவுடன், லெமோரியாக் கோட்பாட்டின் அடிப்படை தகர்ந்துபோயிற்று. லெமோரியாக் கண்டம் பொய்ப்பிக்கப்பட்டவுடன் சிலர் கன்யாகுமரிக்குத் தெற்கே இருந்ததுதான் குமரிக்கண்டம் என்று வேறு ஒரு புது விளக்கம் கொடுத்தனர்.

அறிவியல் ரீதியில் குமரிக்கண்டத்தின் பொருத்தப்பாடு:

கண்ட நகர்வுகள், புவித்தகடு அசைவுகள் பற்றிய தெளிவான விளக்கங்கள் குமரிக்கண்டக்கோட்பாட்டினை முற்றாகவே மறுத்துவிட்டன. இதனைச் சுருக்கமாகப்பார்த்தால், புவித்தகடுகளின் அசைவினால் ஒரே நிலத்தொகுதியாகவிருந்த பெருநிலப்பரப்பானது பல்வேறு கண்டங்களாகப் பிரிந்தது பல மில்லியன் ஆண்டுகளிற்கு முன்னரே இடம்பெற்ற ஒரு நிகழ்வு, அப்போது மனிதர்களே தோன்றவில்லை, எனவே குமரிக்கண்டத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது வெறும்




கற்பனையேயாகும். புவித்தகடு அசைவு, கண்ட நகர்வுகள் என்பன ஒரே நாளில் திடீரென இடம்பெற்று மக்களையும், நகரங்களையும் ஒரேயடியாக அழிப்பனவல்ல. மாறாக அவை ஒரு நீண்டகால தொடர் செயல்முறையாகும். இன்றும்கூட ஆபிரிக்கக்கண்டத்தை இரண்டாகப் பிளக்கும்வகையில் ஒரு நிலப்பிளவானது (நுபியன் தட்டு நகர்வு) கடந்த மார்ச் 19ல் கென்யாவில் வெளித்தெரியுமாறு இடம்பெற்றதாக புவியிலாளர் கருதுகிறார்கள். இந்த நகர்வானது 30 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்கி, ஆண்டுக்கு 2.5செமீ என்ற அளவில் நகர்ந்து, இன்னமும் பத்து மில்லியன் ஆண்டுகளிற்குப்பின் ஆபிரிக்காவினை இரண்டாகப் பிளக்கும் என அறிஞர்கள் கருதுகிறார்கள். எனவே இத்தகைய படிப்படியான கண்டநகர்வுகளில் தமிழரின் நாகரிகம் அழிந்துபோனதாகக்கூறுவது வெறும் கற்பனையே.

இப்போது உங்களிற்கு "அண்மைக்காலத்தில் நிலப்பகுதியானது கடலிலிற்குள் போவதேயில்லையா?" என ஒரு கேள்வி எழலாம். கடல்அரிப்பு, தீவுகளின் அமிழ்தல் போன்ற மெதுவான செயற்பாடுகளால் நிலப்பகுதி படிப்படியாக கடலிற்குள் போகலாம். இந்த அடிப்படையிலேயே துவாரகை,பூம்புகார் போன்ற கடலடி ஆய்வுகளை நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். திடீரென ஏற்படுத்தும் சுனாமி, புயல் போன்றவை வேண்டுமானால் பேரழிவினை ஏற்படுத்தக்கூடியவையென்றாலும், அவை முடிவடைந்த பின் நிலப்பகுதி அவ்வாறேயிருக்கும். எனவே மேற்கூறிய நிகழ்வுகள் எதுவும் குமரிக்கண்டத்தினை நியாயப்படுத்தாது. எனவேதான் குமரிக்கண்டக் கருதுகோளானது அறிவியல் ரீதியில் பொருத்தமற்றது என உறுதியாகக்கூறலாம்.



### தெளிவுறுத்தும் அண்மைக்கால அகழ்வாய்வுகள்:

மேலே நாம் அறிவியல்ரீதியில் குமரிக்கண்டத்தினை மறுத்து நிறுவியபோதும், இலக்கியச்சான்றுகள் என்னாயிற்று? குமரிக்கண்டத் தேடலிற்கான காரணங்கள் (மேலே இலக்கமிடப்பட்டுப் பார்க்கப்பட்டவை) என்னாயிற்று என்பன போன்ற கேள்விகள் எழலாம். இவற்றுக்கான பதில்களையும் நாம் அண்மைக்கால அகழ்வாய்வுகளைக் கவனமாகப் பார்ப்பதன்மூலம் அறிந்துகொள்ளலாம். இங்கு அண்மைக்கால ஆய்வுகள் என நான் குறிப்பிடுவது இரண்டாயிரமாவது ஆண்டிற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கீழடி, ஆதிச்சநல்லூர்,அழகன்குளம் போன்ற அகழ்வாய்வுகளையே குறிக்கின்றது. இதனை நாம் முதலில் குமரிக்கண்டத் தேடலிற்கெனப் பார்த்த காரணங்களிற்கான அதே ஒழுங்கில் பார்ப்போம்.

சங்க இலக்கியங்கள் பெருமையாகப் பேசும் நகர நாகரிகங்களிற்கான எச்சங்கள் எதுவும் கீழடி ஆய்வுவரைக் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனாலேயே முன்னர் சங்க இலக்கியங்களின் நம்பகத்தன்மையினைப் பிறர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனாலேயே சிலர் சங்க காலத்தை வெகுவாக பின்நோக்கி நகர்த்தியும் வந்தனர். இத்தகைய பின்புலத்திலேயே சான்றுகள் நிலத்தில் காணப்படாமையால் கடலை நோக்கிக் கவனம் முன்பு திரும்பியது. கீழடியில் முழுமையான ஒரு நகர நாகரிகம் கண்டுபிடிக்கப்பட்டதும், அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் கரிமச்சோதனையில் சங்க காலத்துடன் ஒத்துப்போனமையும் இந்த காரணத்திற்கான தேடலிற்கான பதிலைத் தருகின்றது.

பழனிக்கருகிலுள்ள பொருந்துதல் என்ற இடத்தில் க.ராஜன் என்ற தொல்லியல் ஆய்வாளரால் 2011 இல் கண்டுபிடிக்கப்பட்ட மண்கலத்திலிருந்த "வைரமணி" (தமிழ் வடிவில்) என்ற தமிழ் எழுத்துக்கள் பொது ஆண்டிற்கு முந்திய 490 ம் ஆண்டைச் சேர்ந்தது என அமெரிக்க ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டது. அதே போன்று கொடுமணல் அகழ்வாய்வில் மட்டுமே 204 தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மண்பானை ஓடுகள் கிடைத்தன. இவையும் பொ.ஆ. மு 400 இனைச் சேர்ந்தது என்கிறார் கா.ராஜன் (தொல்லியல் நோக்கில் சங்ககாலம்). இவை அசோகரின் பிராமி எழுத்துக்களிற்கும் முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கவை. கீழடியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சிகப்பு-கறுப்பு நிற மட்பாண்டங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. எனவே சங்ககால எழுத்துக்களிற்கான சான்றுகளும் நிலப்பரப்பிலேயே கிடைக்கப்பெற்றுவிட்டன.

மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் என்பன குறிப்பிடும் மதுரையானது தற்போதைய மதுரையின் அமைவிடத்துடன் பொருந்தாமையால், பழைய மதுரை கடல்கொள்ளப்பட்டிருக்கலாம் என முன்பு உய்த்துணரப்பட்டது. கீழடி ஆய்வானது பழைய மதுரை என்பது கீழடிதான் என உணர்த்தியுள்ளது. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் மதுரையானது திருப்பரங்குன்றத்திற்கு நேர் கிழக்கே காணப்பட, இன்றைய மதுரையானது வடகிழக்குத் திசையில் காணப்படுகிறது. கீழடியும் சரியாக திருப்பங்குன்றத்திற்கு நேர் கிழக்கேயே (இலக்கியங்கள் குறிப்பிடுவதுபோல) காணப்படுகிறது. அத்துடன் சிலப்பதிகாரத்தில் கோவலனும், கண்ணகியும் கவுந்தி அடிகளுடன் பூம்புகாரிலிருந்து மதுரை நோக்கிச்சென்ற பாதையும் சரியாகக் கீழடிக்குச் செல்லும் பாதையுடன் பொருந்திப்போகின்றது. மேலும் தற்போதைய மதுரையில் 10ம் நூற்றாண்டிலிருந்தே கல்வெட்டுச்சான்றுகள் கிடைக்க, பழைய மதுரையாக இப்போது கருதப்படுகின்ற கீழடியில் 10ம் நூற்றாண்டிற்கு முன்னரான சான்றுகள் சங்ககாலம் வரைக் காணப்படுகிறது. எனவே 10ம் நூற்றாண்டளவில் மதுரை கீழடியிலிருந்து தற்போதைய மதுரைக்கு இடம்பெயர்ந்திருக்கலாம் என உய்த்துணர முடிகிறது. (இங்கே கடம்பவனத்தை அழித்து பாண்டியன் மதுரையினை உருவாக்கிய கதையினையும் நினைவிற்கொள்ளலாம்)

**வி.இ.குகநாதன்**

சங்க காலத்தில் யவனர்களுடன் வாணிபம் செய்த குறிப்புக்களுடன் அழகன்குளம்




துறைமுக ஆய்வுகள் ஒத்துப்போகின்றது. இங்கு கிரேக்கக் கப்பல் வடிவம் பொறிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் கிடைக்கப்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இந்த அழகன்குளம் முன்னர் அருகன்குளம் (சமணக்கடவுள்-அருகன்) என அழைக்கப்பட, அதுவே தொலமியின் குறிப்புக்களில் அருகுறுகுளம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

**பழைய மதுரை கீழடிதான்,**
**அங்குதான் தமிழர் தொன்மையைத் தேடவேண்டும்**

தமிழ் தெற்கே செம்மையாகவும், வடக்கே செல்லச்செல்ல திரிந்தும் காணப்படுவதற்கு நாம் வேறு ஒரு கோணத்தில் வடக்கேயிருந்து வந்த வடமொழி ஆக்கிரமிப்பே காரணம் எனக்கொள்ளலாம்.

மேலே சங்ககாலத்தில் கூறப்பட்ட பல்வேறு விடயங்களுக்கும் தமிழக நிலப்பரப்பிலேயே சான்றுகள் காணப்படுவதையும், பழைய மதுரையானது கடலில் மூழ்கியது என்பது தவறு என்பதையும் பார்த்தோம். இப்போது எஞ்சியிருப்பது இறையனாரின் அகப்பொருளுரையில் பாண்டியநாடு கடற்கோளில் மூழ்கியதாகக் கூறியிருப்பதேயாகும். இதனைச் சற்று விரிவாகப்பார்ப்போம்.

### இறையனார் அகப்பொருளுரையின் முரண்கள்:

களப்பிரர் ஆட்சிக்காலத்தின்போது (இதனை இலங்கையிலுள்ள மகாவம்சம், சூலவம்சம் ஆகிய நூல்களினடிப்படையில் பொ.ஆ 5ம், 6ம் நூற்றாண்டளவில் எனக்கொள்ளலாம்) இறையனார் அகப்பொருளும், அதற்கான உரையும் எழுதப்பட்டது. (இந்த உரை எழுதிய நக்கீரர் வேறு, கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த சங்ககாலப்புலவர் நக்கீரர் வேறு). களப்பிரர் காலத்தில் சமணமும், பௌத்தமும் மேன்மைபெற்றிருந்த பின்புலத்தில் சைவரும், வைணவரும் புதிய பக்தி இயக்கத்தை உருவாக்கி அகப்பொருளிற்குப் புதிய கருத்தாக தலைவன்-தலைவி உறவுமுறையினை கடவுள்-பக்தர்களிற்கிடையேயிருந்த உறவுமுறையாகக் கூறினர். ஏற்கனவே தொல்காப்பியம் கூறிய அகப்பொருளிற்கு (மனிதக் காதல்) முரணாக இப் புதிய விளக்கமிருந்தமையால், புதிய விளக்கத்திற்குத் தமிழ்ப்புலர்கள் மத்தியிலிருந்து எதிர்ப்புக்கள் தோன்றியது. இந்த எதிர்ப்புக்களை மழுங்கடிப்பதற்காகவே "இறையனார் அகப்பொருள்" எனும் நூலை உருவாக்கி அதற்குத் தெய்வத்தன்மை கற்பித்து இறைவனே இந்த நூலை இயற்றியதாகக்கூறினார்கள். இறைவனே எழுதியமையால் இது முதல்நூல் என்றும் கூறினர், ஆனால் உண்மையில் இது தொல்காப்பியத்தின் வழிநூலேயாகும். இதனை அடிப்படையாகக்கொண்டே முதல்சங்கத்தில் சிவனே வந்து உட்கார்ந்ததாகக் கதை தோன்றியது. இந்த நூலில் பேரின்பக் காதலைப்பற்றி நேரடியாகக்கூறவில்லை என்றும், உரையாசிரியர்களே சான்று காட்டினர் எனவும் விளக்குகிறார் மயிலை சீனி. வேங்கடசாமி (களப்பிரர் ஆட்சியில் தமிழகம்). அந்த உரையும் ஏட்டில் எழுதப்படாமல் பத்துத் தலைமுறைகள் வரையில் வேதங்கள் போலச் செவி வழியாகவே கடத்தப்பட்டுவந்து சம்மந்தர் காலத்திலேயே ஏட்டில் எழுதப்பட்டது. இவ்வாறு வாய்வழியாகவே பல நூற்றாண்டுகளாகக் காவி வரப்படும்போது உரைகள் எவ்வாறு திரிந்து செல்லும் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை. இதனாலேயே அகப்பொருளுரையில் கூறப்படும் பாண்டியநாடு கடலில் மூழ்கியதாகக் கூறப்படுவதனை நாம் பெரிதுபடுத்தவேண்டியதில்லை.

சங்கவிலக்கியப் பாடல்களில் நேரடியாகக் கூறப்படும் கடற்கோள்கள் பற்றிய தகவல்கள் வெறும் உயர்வுநவிற்சியாகவோ அல்லது தொகுப்பின்போது ஏற்பட்ட பிரச்சனைகளாகவோ இருக்கலாம். இது பற்றிய மேலும் பல தெளிவுகள் எதிர்கால ஆய்வுகளில் கிடைக்கக்கூடும். இறுதியாக தமிழரின் தொன்மையினை நாம் தேடவேண்டியது கடலில் குமரிக்கண்டத்திலல்ல, மாறாக கீழடி போன்ற வைகை நதிக் கரைகளை அடுத்துள்ள நிலப்பரப்புக்களிலேயே என உறுதியாகக்கூறலாம்.

-----நன்றி: இனியொரு----

# படுவான்கரை மாணவர்களது தேசிய மட்டச் சாதனை

## சமூக விஞ்ஞானத்தில் சாதனை நிலைநாட்டிய இளம் விஞ்ஞானிகள்

கல்விக்காக நேரமின்றி ஓடும் நகர்புற மாணவர்கள் மத்தியில், பாடசாலையினை மட்டும் நம்பி சாதிக்கும் படுவான்கரை மாணவர்கள் வாழ்த்தப்பட, பாராட்டப்பட வேண்டியவர்கள்.

என்றுமில்லாதவாறு வெப்பமும் அதிகமாக இருக்க, காலபோட்டமடு செல்வதற்காக வருகைதந்த கணேசன், களைப்பினால் காஞ்சிரங்குடா வீதியில் நிற்கின்ற புளியமரமோரம் அமர்ந்து கொண்டான். கணபதிப்பிள்ளையும் அங்கே நின்றுகொண்டிருந்தான். என்ன கணேசா,



எறிக்கிற, எறியப்பாத்தா! உச்சிமண்டை வெடிக்கும் போல இருக்கு. முகமெல்லாம் எரியுது. இப்படி நாலு நாளைக்கு எறிச்சா! நம்மட கதையெல்லாம் சரிபோல இருக்குது. அதுதான் நானும் ஏலாமல் மரத்திற்கு கீழ் குந்திக் கொண்டிருக்கின்றேன். நம்மடவண்ட வேலைகளால்தான் வெயிலும் கூட எறிக்குது. காட்டை அழிக்காதங்கடா, அழிக்காதங்கடா எண்ட கேட்டானுகளா? இப்ப பாருங்கோ! என்ன நடக்குதெண்டு.

### வசதிகள், வளம் இன்றி சாதித்துக் காட்டிய வீரர்கள்

இவ்வாறு கணபதிபிள்ளையும் கணேசனும் பேசிக்கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியால் சென்று கொண்டிருந்தது. அப்போது கணேசன் அதனை கண்ணுற்றுவிட்டான். மோட்டார் சைக்கிளில் செல்வது இராஜகுலசேகரம் தானே என்று கணபதிப்பிள்ளையிடம் கேட்டான். கணபதிப்பிள்ளையும் ஆம் என்று பதிலளிக்க கணேசனும் தொடங்கினான் நீண்ட புதுக்கதையொன்றை. கணேசனும் கிராமசேவை உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வுபெற்ற ஒருவர், எப்போதும் கிராமத்தினை பற்றியும் மக்களைப் பற்றியும் ஆர்வம் கொண்டவன். பாடசாலைக்கு பிள்ளை செல்லாவிட்டால் உடனே அவர்களை அழைத்துக்கொண்டு பாடசாலையில் விட்டுவிட்டுதான் வருவான். கல்விக்காக மாணவர்களுக்கு உதவிகளை பெற்றுக்கொடுப்பதில் அக்கறையானவன், கிராமங்கள் தோறும் பட்டதாரிகளை உருவாக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவன். யாரும் சாதித்துவிட்டால் அவர்களைச் சென்று வாழ்த்தி, உதவிகளையும் பெற்றுக்கொடுப்பவன். இவ்வாறு பல நல்ல பண்புகளை கணேசனைப்பற்றி சொல்லிக்கொண்டு போகலாம்.

அதைவிடுத்து, கணேசன் என்ன புதிய விடயத்தினை கூறினான் என்பதை



பார்ப்போம்.
மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தினைச்சேர்ந்த காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயமும், கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயமும், மகிழவெட்டுவான் மகா வித்தியாலயமும் 2017ம் ஆண்டிற்கான சமூக விஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் சாதித்த கதைதான் கணேசன் சொன்னது.

காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்தான் வைரமுத்து இராஜகுலசேகரம், இவர் வீதியில் செல்லும் போதுதான் சமூகவிஞ்ஞானப்போட்டியில் காஞ்சிரங்குடா பாடசாலையும் சாதித்த விடயம் கணேசனுக்கு அவ்விடத்தில் ஞாபகம் வந்தது. குறித்த போட்டிக்காக இராஜகுலசேகரம்தான் இம்மாணவர்களை தயார்படுத்தியிருந்தார். சாதிப்பதென்பது இலகல்ல, கடினந்தான். ஆனாலும் நகர்புறங்களில் உள்ளவர்கள்தான் கெட்டிக்காரர்கள், கிராமப்புறங்களில் உள்ளவர்கள் கெட்டிக்காரர்கள் அல்ல என்று மட்டந்தட்டுகின்ற கீழ்தரமான சிந்தனைகொண்டவர்களும் வாழ்கின்றனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தினைப்



பொறுத்தவரை நகர்புறங்களில் கற்று சாதிப்பவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களே. இதனை பெறுபேறுகளும், போட்டிமுடிவுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதற்கு இன்னும் வலுச்சேர்க்கும் வகையில்தான் சமூகவிஞ்ஞானப்போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட மேற்கூறிய மூன்று பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களும் தேசிய ரீதியில் வெற்றியீட்டியுள்ளனர்.

காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயத்தில் தரம் - 7வகுப்பு பிரிவில் பங்கேற்ற அமிர்தலிங்கம் அஜந்தா என்ற மாணவி முதலிடத்தினையும், ஜடேஸ்வரன் உதேசினி என்ற மாணவி இரண்டாம்

**படுவான் பாலகன்**

இடத்தினையும் தேசிய ரீதியில் பெற்று சாதித்துள்ளனர்.
அதிகஸ்ட பிரதேச பாடசாலையான



இப்பாடசாலையினை சுற்றி வேளாண்மை செய்யும் வயல்களே காணப்படுகின்றன. அதேவேளை ஆங்காங்கு குடியிருப்புக்களும் அமைந்துள்ளன. இங்குள்ள மக்கள் அன்றாடம் கூலிவேலை செய்தே வாழ்க்கையினை கொண்டுசெல்கின்றனர். ஆனாலும் பிள்ளைகளை கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் இங்குள்ள மக்களுக்குள்ளது. பாடசாலைக்கோ சுற்றுமதில்கள், ஒன்றுகூடல் மண்டபங்கள் எதுவும் கிடையாது.
சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துவதற்கெதிரான போட்டி, அதிபர் அலுவலக முகாமைத்துவப்போட்டி, டெங்குஒழிப்பு மாதிரி பாடசாலை, சுகாதாரத்தை பேணல், கணிதபாட அடைவு மட்டத்தில் 2017ம் ஆண்டு வலயத்தில் முதலிடம் போன்ற பல்வேறு மட்டங்களில் வெற்றிபெற்ற பாடசாலையாக இது விளங்குகின்றது. 16வருடங்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு கடந்துள்ள நிலையில் வித்தியாலயத்தின் தற்போதைய அதிபராக சோமசுந்தரம் சுந்தரமோகன் கடமைபுரிகின்றார்.
காஞ்சிரங்குடா பாடசாலையிலிருந்து சற்று தொலைவில் உள்ள பாடசாலைதான் கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயம். இப்பாடசாலையினை சுற்றி வயல்வெளிகளும் ஆங்காங்கு வீடுகளும் அமைந்துள்ளன. இப்பாடசாலையில் 185பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இப்பிள்ளைகளும் மூன்று, நான்கு கிலோ மீற்றர் தொலைவில் இருந்துதான் பாடசாலைக்கு வருகிறார்கள். முக்கிய பாடங்களுக்கான ஆசிரியப்பற்றாக்குறை, ஒன்றுகூடல் மண்டம் இன்மை போன்ற பல பிரச்சினைகளுடன் விளங்குகின்ற இப்பாடசாலையில் உள்ள மாணவர்களும் கபடி, சமூக விஞ்ஞானம் மற்றும் பல போட்டிகளிலும் தேசிய ரீதியாக சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இந்நிலையில்தான்

இப்பாடசாலையில் கல்வி கற்கும் பு. ரிசாந்தன் என்ற மாணவன் தரம் - 7 ரீதியான சமூகவிஞ்ஞானப் போட்டியில் தேசியரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றுசாதித்துள்ளான். இவரின் வெற்றிக்காக த.தேவநாதன், க. ரவிசங்கர் போன்ற ஆசிரியர்கள் செயற்பட்டிருந்தமையும் எடுத்துக்காட்டத்தக்கது. இவ்வித்தியாலயத்தின் அதிபராக சா. விக்னேஸ்வரன் கடமையாற்றுகின்றார்.
மகிழவெட்டுவான் மகா வித்தியாலயத்தினைச் சேர்ந்த மாணவி ஒருவரும் தரம் - 8 ரீதியான சமூகவிஞ்ஞானப் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.
இப்பாடசாலை மாணவர்களும் வசதி வாய்ப்புக்களை பெற்றவர்களல்ல. வசதிவாய்ப்புக்களுக்காக ஏங்கிக்கொண்டிருப்பவர்கள். குறித்த பாடசாலையில் கல்வி பயில்கின்ற க. நிலாஜினி என்ற மாணவி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளார். குறித்த மாணவியின் வெற்றிக்கு வழிகாட்டியாக ந. நவநீதன் ஆசிரியர் செயற்பட்டிருந்ததுடன், வித்தியாலயத்தின் அதிபராக ம. கருணாகரன் செயற்படுகின்றார்.
சாதனையை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆதங்கத்தில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மாணவர்கள் துடித்துக்கொண்டிருக்கின்ற நிலையிலும், இன்னமும் பலவசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுவும் கணேசனதும், கணபதிபிள்ளையினதும் அவர்களைப் போன்ற பலரதும் எதிர்ப்பார்ப்பும் ஆகும். இவ்வாறு இருவரும் கதைத்துவிட்டு எழுகின்ற நேரம் பொழுதும் சாய்ந்து கொண்டது வீட்டை நோக்கி புறப்பட்டனர்.

**சிறுநீரகம் தேவை**


மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 36 வயதுடைய பெண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ( O ) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு : 077-9912867



# பல்கலை வித்தகர் சேனையூர் வில்லுப்பாட்டு வீரசிங்கம்

## மந்திரம், வைத்தியத்திலும் தேர்ச்சி பெற்ற ஒரு பல்துறைக் கலைஞர்



செந்தமிழ் செழிக்கும் சேனையூர் கிராமத்தில் 1939ஆம் ஆண்டு காளியப்பு, தங்கம்மா தம்பதியினரின் இளைய மகனாகப் பிறந்தவர். கற்பகம், விஜயசிங்கம், யோகாம்பிகை, பாலசிங்கம், கமலாம்பிகை, சிவலிங்கநாயகி ஆகியோர் இவரது உடன் பிறப்புகள்.
இளமையில் துடிப்பும் நடிப்பும் மிக்க சிறுவனாய் எதையும் கூர்ந்து அவதானித்து, அவற்றில் எதையாவது செய்ய வேணும் என்ற ஆர்வத்துடன் ஈடுபட்டு குழப்படிகாரன் என்ற பெயர் பெற்றவர். இவருடைய தகப்பனார் விஜயசிங்கம் காளியப்பு ஒரு புலமைப் பாரம்பரியத்தின் வாரிசு; வைத்தியம் மந்திரம் ஆகியவற்றில் கை தேர்ந்த நிபுணர். சேனையூர் மெதடிஸ்த மிசன் பாடசாலையில் (இன்றைய கட்டைபறிச்சான் விபுலாநந்த வித்தியாலயம்)ஐந்தாம் வகுப்பு வரை படித்து தன் பாடசாலை கல்வியை இடைநிறுத்தினாலும் தன் தகப்பனாரிடமும் அண்ணன் விஜயசிங்கத்திடம் மரபு வழிக் கல்வியை முறையாக கற்றவர். இதனால் மந்திரம் வைத்தியம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார்.
தன் நாப்பத்தைந்தாவது வயதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்.
வைத்தியத்தில், முறிவு வைத்தியத்தில் இவருக்கு சிறப்பு தேர்ச்சியுண்டு. தன் சுய முயற்சியினாலேயே எல்லாவற்றையும் கற்று அவற்றில் தேர்ந்த கலைஞனாய் முதன்மை பெற்று, தான் பிறந்த மண்ணுக்கு பெருமை சேர்க்கும் மா கலைஞன் இவர்.

சேனையூர் கும்பவிழாவுக்கு பேர் போன ஊர். சேனையூர்க் கும்பத்தின் பிதாமகராய் கருதப்படும் தகப்பனார் காளியப்புவிடம் மந்திரக் கலையை சிறப்புற கற்ற இவர், ஏனைய பூசாரிகளிடமிருந்து வேறுபட்டு மந்திரத்தை உச்சரிப்பதில் தனக்கான ஒரு பாணியை உருவாக்கியவர் எனலாம். வாலிப நாட்களில் இவரது மந்திரத்துக்கு கட்டுப்படாத கும்ப ஆட்டக்காரர்களே இல்லை எனலாம். மறிப்பு, கட்டு என்பவற்றை சுக்கு நூறாக்கும் தந்திரம் தெரிந்த மந்திரமொழி இவரது.
மருத நகரில் புவனேஸ்வரி புவன கணபதி ஆலையங்களையும் கும்ப நிகழ்வுகளையும் அறிமுகப்படுத்தி, சமயப் பண்பாட்டு புரட்சிக்கு வித்திட்டவர் என்று சொன்னால் மிகையில்லை.
இவர் போல் கோடியில் ஒருவர்தான் பிறக்க முடியும்.
பூசாரி, மந்திரன், வைத்தியர், ஓடாவி, சிற்பி, புலவர், மேசன், நடிகன், நாடக எழுத்தாளன், ஆடல் வல்லான், மிகச் சிறந்த பாடகர், நாடக எழுத்தாளர், ஒப்பனையாளர், வில்லுப்பாட்டுக் கலைஞர், நாதஸ்வர வித்துவான், சாத்துப்படி கலைஞர், இசையமைப்பாளன் என ஒரு மனிதன் இத்தனை அவதாரங்கள் எடுக்க முடியுமா என்ற கேள்விக்கு பதிலானது இவரது கலை வாழ்க்கை.

பாடசாலை நாட்களில் பாடி ஆசிரியர்களின் பாராட்டை பெற்று தன் இசையால் எல்லோரையும் வசீகரிக்கும் ஆற்றல் பெற்றவர். இசை ஞானத்தை இயற்கையாகவே தன் பரம்பரை வழியாக பெற்றுக் கொண்ட இவர், திருகோணமலை மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களில்



இசையாற்றலால் அறியப்பட்டவர். சௌந்தரராஜனின் குரலை ஒத்ததாய் அமைந்த இவரை ஈழத்து சௌந்தரராஜன் என அழைப்பதுண்டு. முருகன் மீது கொண்ட பக்தியால் "குகா" என்ற பெயர் இவரது பட்டப்பெயரானது. சங்கீதத்தை முறையாக படிக்காவிட்டாலும் கர்நாடக சங்கீத பாடல்களை கடல்மடை திறந்தாற்போல் பாடும் வல்லமை பெற்றவர். கட்டைபறிச்சான் கலைவாணி இசைக் கழகத்தின் பிரதான பாடகராக பல மேடைகளில் தன் இசையால் நிறைத்தவர். பாடல் எழுதி இசையமைத்து பாடும் திறன் பெற்றவரும் கூட.
வில்லுப் பாட்டு மன்னன் மாஸ்ரர் சிவலிங்கத்தை தன் மானசீக குருவாக கொண்டு கொட்டியாரத்தில் இக்கலையை அறிமுகப் படுத்தியவர் இவரே. இலங்கை வானொலியில் இவரது வில்லுப்பாட்டு எழுபதுகளில் ஒலிபரப்பாகி அகில இலங்கையும் அறிந்த ஒரு கலைஞராக கிராமிய சஞ்சிகை நிகழ்ச்சியில் வலம் வந்தவர். இவர் பாடிய முதல் வில்லுப் பாட்டு "எங்கேயடா கம்பா சிலம்பு" என்ற இலக்கியநயம் மிக்க ஆக்கமாகும். இது பண்டிதர்களது பாராட்டுப் பெற்றதாகும். திருகோணமலை மாவட்டத்தின் இவர் வில்லுப்பாட்டு ஒலிக்காத இடம் இல்லை எனலாம். பல இடங்களுக்கு



நானும் பக்கப்பாட்டு கலைஞனாய் சென்றமையயை பெருமையாகக் கருதுகிறேன்.

கவியரங்குகளில் தன் கவிதைகளால் பார்வையாளர்களை கட்டிப் போடும் ஆற்றல் மிக்கவர். எடுத்தவுடன் கவி சொல்லும் திறன் இவரது சிறப்புகளில் ஒன்று.
பல நூற்றுக் கணக்கான நாடகங்களில் நடித்திருக்கிறார் முதன் முதல் இவர் எழுதி தயாரித்து நெறியாள்கை செய்த நாடகம் "தபோ பலம்" என்பதாகும். என்னை பொது மேடையில் நாடகத்தில் அறிமுகப் படுத்தியவரும் இவரே. எல்லா வகையான பாத்திரங்களும் இவருக்கு கை வந்த கலை. நடிப்பில் சிவாஜியின் மறு உருவாக்கம் என்று கூடச் சொல்லலாம். சிவனாக, எமனாக, அரிச்சந்திரனாக, கர்ணனாக, வீரபாண்டிய கட்டப் பொம்மனாக, விவசாயியாக, புலவராக ஏற்ற பாத்திரங்களில் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தியவர்.
தா.ஜெயவீரசிங்கம் ஆசிரியர் எழுதி தயாரித்து நெறிப்படுத்திய "இவளும் ஒரு தாய்" கர்ணனின் கதையை அடிப்படையாகக் கொண்டது. அதில் கர்ணனாக தோன்றி சிவாஜியின் நடிப்புக்கு சவால் விட்டவர் என்று சொல்லலாம். அவ்வளவு அற்புதமாக நடித்திருப்பார் அதில். பார்த்தோர் எல்லாம் கண்கலங்கி அழுத அந்த காட்சிகள் இப்போதும்

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

நெஞ்சில் நிழலாடுகின்றன.
மூதூரில் வேதனாயகம் வைத்தியரால் தயாரிக்கப்பட "தென்றலும் புயலும்" நாடகத்தில் விசித்திரமான நகைச்சுவை பாத்திரம் ஏற்று கலக்கியவர் என்று சொல்லலாம். இரண்டரை மணித்தியாலம் கொண்ட முழு நீள நாடகம். அதுவே பின்னர் "தென்றலும் புயலும்" எனும் திரைப்படமாகியது. இவரே திரைப்படத்திலும் நடிப்பதாக பேசப் பட்டது, ஆனால் திரைப்படமாகும் போது இவர் கழற்றி விடப்பட்டார்.

புரட்சிகரமான சிந்தனைகள் கொண்டவர் எந்த விடயத்தையும் மற்றவர்கள் பார்ப்பது போலப் பார்க்கமாட்டார். ஒரு மாறுபட்ட தர்க்க நியாயங்கள் உள்ளதாக, யாரும் எலிதில் நிராகரித்து சென்று விடாதபடி அவர் கருத்துக்கள் இருக்கும். மரபு வழிப்பட்ட கல்வியில் வந்திருந்தாலும் அந்த மரபையும் உடைத்துப் பார்க்கும் திறன் அவருக்கு இளமையிலேயே இருந்துள்ளது. பல விடயங்களில் தன் தகப்பனாருடனேயே கருத்துத் தர்க்கம் செய்து அவரது கோபத்துக்கு ஆளாகியதும் உண்டு.
சமூக அவலங்களையும் சமூக பிரச்சினைகளையும் தன் படைப்புகளில் வெளிக் கொணர்ந்தவர் அதோடு அகட விகடமாக பேசும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவர். வெங்காயத் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரம் இவர் பாடிய வெங்காயம் தேடி ஊரெல்லாம் போனேன் என்ற பாடல் கொட்டியாரப் பகுதியில் மக்கள் மத்தியில் மிகப் பிரபல்யமானது.
சமூக விழிப்புணர்வு மிக்க பல அரங்க நிகழ்வுகளை கடந்த பல ஆண்டுகளில் தயாரித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் செய்து காட்டியவர். கும்மி, கோலாட்டம், கரகாட்டம், காவடியாட்டம் என கிராமிய ஆடல் வடிவங்களை பழக்கி, பல போட்டிகளில் பரிசுகளை வென்றவர் என்பதும் இவருக்கான சிறப்புக்களாகும். சேனையூர் மத்திய கல்லூரியின் அறுபது வருச வரலாற்றில் இவர் ஒரு ஆசிரியர் போலவே, பாடசாலையோடு இணைந்து செயற்பட்டு, பாடசாலையின் கலை நிகழ்வுகளில் முக்கிய பங்காளனாய் இருந்தவர். மாணவர்களுக்கான நடிப்புப் பயிற்சி, இசைப் பயிற்சி, ஆடல் பயிற்சி, ஒப்பனை என எல்லாவற்றிலும் தடம் பத்தித்தவர்.
பல்கலை வித்தகர் என்ற சொல்லுக்கு இவரே உதாரணம். மூதூர் பிரதேசத்தில் முதன் முதல் கலாபூசணம் பட்டம் பெற்று சேனையூருக்கு பெருமை சேர்த்தவர். அத்தோடு கிழக்கு மாகாண அரசு 2008 ஆம் ஆண்டு கலை இலக்கியத்துக்கான விருதை வழங்கி மதிப்பளித்தது. பல விருதுகளையும் பெற்று கலை வாழ்வுக்கு பெருமை சேர்த்தவர்.
தன் இருபத்தியேழாவது வயதில் கமலாதேவியை மணந்து கலைச் செல்வி, ரஜானந்தி, கார்த்திகா, காயஸ்திரி ஆகிய நான்கு பிள்ளைகளுக்கு தந்தையாகி அவர்களையும் தன் கலை வாரிசுகளாக உருவாக்கினார். பல கலை விழாக்களில் அவர்களது கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றமையும் தன் அரங்கச் செயற்பாடுகளில் அவர்களையும் ஈடுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

தன் வாழ்வை கலைப் பணிக்காக அர்பணித்த இந்த மா கலைஞன் தன் எழுபத்தொன்பதாவது வயதில் சேனையூரில் வாழ்ந்து வருகிறார். இத்தகைய கலைஞர்களுக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கி கௌரவிக்க வேண்டியது அரசின் கடமையாகும். வயது முதிர்ந்த சிங்கள கலைஞர்களுக்கு அரசு மாதாந்த உதவி வழங்கி அவர்கள் கலை வாழ்வுக்கு மதிப்பளிப்பது போல, இவர் போன்ற தமிழ் கலைஞர்களையும் கௌரவிக்க வேண்டும். கிழக்கு மாகாண கலாசார திணைக்களம் இதை கவனத்தில் கொண்டு செயற்படவேண்டும். வாழும் போதே கலைஞர்களை போற்றுவோம்.

### கவிதை




தமிழனாய் பிறந்தோரில் பலர்
தாய்த் தமிழை மறந்தின்று உமியுள
அரிசிபோலத் தமிழை உரக்கவே
சொல்கின்றார் அடச்சீ! சோவெனப்
பெய்யும் மழைபோல "சோ"வும் "பட்"டும்
வந்தாச்சு நோவினை யேயுளமெங்கு
மிதனால் நோயுளோர்
பற்றிஏதுசொல்வேன் சீ!

இதமான தமிழ்பேசு வோரை இகழ்ந்
தேதள்ளுவர் இன்று விதவித மாய்த்தமிழ்
பேசியே விந்தைதான் செய்கின்றார்
அடச்சீ! தமிழனுக் கழகாய்ப்பாரில்
பெயர் தந்தது எதுவோ நற்றிமிழே
உமிநீக்கி யுணும் அரிசிபோல் உயர்ந்த
நற்றமிழை உன்னுநீ! பிறமொழி விரும்பிடு
பிழையிலை பிதற்றா ததிலேநீயூறி
மகிழாதே நிறமொழி ஒன்றாய்
எண்ணு நிலத்தில் தமிழையே ஏத்து!
நாலுமிரண்டும் அணிகல னைந்தும்
நல்லிலக் கணநூல்பல தந்ததேது?
நீளுமுன்புகழ் நீட்டிடுவதேது? நிலத்தில்
நற்றமிழை உன்னுநீ! -கலைமகன்
பைரூஸ் 05.05.2018

# மட்/ ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரி அதிபர், அதிபர் தரம் – 1க்கு பதவி உயர்வு




மட்/ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார் இலங்கை அதிபர் சேவை தரம் 1 க்கு 2015 ஆம் ஆண்டு முதல் தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான பதவி உயர்வுக் கடிதம் கடந்த மாதம் 23 ஆந் தேதியன்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவம்சம் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மட். வீச்சுக்கல்முனை றோமன் கத்தாலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து, தொடர்ந்து மட். வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையில் இடைநிலை வரை கல்வியைப் பெற்று, உயர் தரத்தினை மட். கோட்டமுனை மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப் பிரிவிலும் பயின்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் மட். அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விசேட பயிற்சி விஞ்ஞானத்தினையும், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்புளோமாவினையும் பூர்த்தி செய்தார்.


1988 முதல் ஆசிரியர் நியமனம் பெற்று மட். புல்லுமலை றோமன் கத்தோலிக்க பாடசாலை முதல் மட். சிவானந்தா தேசிய பாடசாலை வரை இருபத்தொரு வருடங்கள் ஆசிரிய சேசையைப் பூர்த்தி செய்து, அதிபர் தரம் - 2 க்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 2009 முதல் அதிபர் சேவையினுள் நுழைந்தார்.

இவர் மட். விவேகாநந்தா பெண்கள் கல்லூரி மற்றும் மட். மகாஜனக் கல்லூரி ஆகியவற்றில் பிரதி அதிபராகவும் கடமையாற்றி, 2013 முதல் மட். ஆனைப்பந்தி இந்து மகளிர் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

இவர் பாடசாலையை கையேற்ற காலம் முதல் பாடசாலையானது பௌதிக வளத்திலும், கல்வி பெறுபேறுகளிலும் வளர்ச்சி கண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# கிரான்குளத்தில் சுவாமி விவேகானந்தர் பூங்கா!

காரைதீவு நிருபர் சகா



கல்முனை மட்டக்களப்பு பிரதானவீதியில் கிரான்குளத்தில் மூன்றரை ஏக்கர் காணியில் சுவாமி விவேகானந்தர் பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை புதுக்குடியிருப்பு சமுக நலன்புரி அமைப்பின் மாவட்டக்காரியாலயம் முன்னெடுத்துள்ளதாக அமைப்பின் ஸ்தாபகர் கந்தப்பன் சற்குணேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கான உதவிகளை பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள் இவ்வமைப்பினர்.

குறித்த அமைப்பு கடந்த 20வருட காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு மனிதாபிமான உதவிகளையும் பல்வேறு சமுகப் பணிகளையும் ஆற்றிவருகின்றது. இந்நிறுவனம் கிரான்குளத்தில் மூன்றரை ஏக்கர் காணியை அண்மையில் கொள்வனவு செய்துள்ளது.

இப்பூங்கா மூலம் பெறும் வருவாய்கள் அனைத்தும் இந்நிறுவனம் பழுகாமத்தில் நடாத்திவரும் திலகவதியார் மகளிர் இல்லத்திற்கும் புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் விவேகானந்த தொழினுட்பவியல் கல்லூரி மாணவர்க்கு இலவசமாக பயிற்சிகள் வழங்குவதற்கும் பயன்படப்போகிறது என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.



# திருச்செந்தூர் முதியோர் சங்கத்தின் விழா



கல்லடி திருச்செந்தூர் முதியோர் சங்கத்தின் 11ம் ஆண்டு விழா தலைவர் க. பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையின் கீழ் கடந்த மாதம் 27ம் திகதி (27/04/2018) காலை இடம்பெற்றது. இவ் விழாவில் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். அவற்றிலிருந்து சில படங்கள்.

# வித்தகர் கலாபூசணம் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியீடு

காரைதீவு நிருபர் சகா

கல்முனை தமிழ் பிரதேச செயலக கலாசார பேரவையின் ஏற்பாட்டில் கல்முனைப் பிரதேச மூத்த எழுத்தாளர்கள் வரிசையில் தனக்கென தனி இடம்பிடித்தவரான வித்தகர்



கலாபூசணம் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா கடந்த மூன்றாம் திகதி கல்முனை தமிழ் பிரதேச



செயலக கேட்போர் கூடத்தில் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் எஸ். கே. லவநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முகில் வண்ணன் அவர்களுடைய சிறுவர் நூல் - இளவரசன், நாவல் - இராசாத்தி, சிறுகதை நூல் - மனுஷ்யா ஆகிய மூன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் முதற் கட்டமாக பிரதேச செயலாளர் திரு. எஸ். கே.லவநாதன் அவர்கள் தனது தலைமையுரையுடன் கூடிய வரவேற்பு உரையினை நிகழ்த்தினார். தொடர்ச்சியாக நூல்களிற்கு அணிந்துரை வழங்கிய விபுலமாமணி தேசமான்ய வி.ரி.சகாதேவராஜா மற்றும் பைந்தமிழ் குமரன் ஜெயக்கொடி டேவிட் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இதனை தொடர்ந்து வித்தகர் கலாபூஷணம் மு.சடாட்சரன் அவர்களும் கலாநிதி பரதன் கந்தசாமி அவர்களும் நூல் வெளியீட்டு உரைகளை நிகழ்த்த தொடர்ச்சியாக முகில்வண்ணன் அவர்களின் நூல்கள் வெளியிடப்பட்டன. மூன்று நூல்களின் முதற் பிரதியினையும் பிரதேச செயலாளர் பெற்றுக்கொண்டார்.



# கா நிகழ்வு



குணா கவியழகனின் நான்கு புத்தகங்களின் அறிமுக நிகழ்வு கடந்த வாரம் 28.04.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மட்/பொதுநூலக கேட்போர் கூடத்தில் "கா" இலக்கிய வட்டத்தால் "பார்வையும் பதிவும்" என சிறப்பாக ஒருங்கிணைத்து



நடாத்தப்பட்டது.

மேலும் பெரியார் வாசகர் வட்டத்தினால் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

"கா" குழு உறுப்பினர் பவித்திரனால் வரவேற்கப்பட்டு, மணிசேகரன் அவர்களால் அறிமுகவுரை நிகழ்த்தப்பட்டு, மேலும் கர்ப்பநிலம்- கவிஞர் மேரா , விடமேறிய கனவு - க. டனிஸ்கரன், அப்பால் ஒரு நிலவு - ர. சிவதர்சினி, நஞ்சுண்ட காடு - வி.கௌரிபாலன் ஆகியோரால் உற்று நோக்கப்பட்டது.

மற்றும் பேராசிரியர் யோகராசா அவர்களினால் நான்கு புத்தகங்களும் ஒரே பார்வையில் வினவப்பட்டது.

இதனிடையே மூத்த எழுத்தாளர் கே.ஸ். சிவக்குமரன் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக கர்ப்பநிலம் புத்தகம் அவரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிறப்புரையாக பேராசிரியர் மௌனகுரு அவர்களின் உரை அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக நிகழ்சிகளை தொகுத்து வழங்கிய ரகுதாஸ் அவர்களின் நன்றியுரையோடு நிறைவடைந்தது. இதில் முக்கிய விடயமாக இளைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம் வழங்கப்பட்ட விடயம் பலராலும் பாராட்டப்பட்டது.



# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப் பட வேண்டிய பக்கம்-1

**(மட்டக்களப்பின் இந்துத் தெய்வங்களையும் வழிபாட்டினையும் மையப் படுத்திய சில சிந்தனைகள்)**




சிறப்பாக கிழக்கு மாகாணத்து இந்துத் தமிழர் மத்தியிலேயும்,குறிப்பாக மட்டக்களப்பு இந்துத் தமிழர் மத்தியிலேயும் சிறு



தெய்வ வணக்க முறையே பிரசித்தி பெற்றுக் காணப்படுவதாக ஆய்வாளர் கூறுவர்.

தெய்வங்களைச் சிறு தெய்வங்கள் பெருந் தெய்வங்கள் என்று பிரிக்கலாமா? தெய்வங்கள் என்றால் அனைத்தும் தெய்வங்கள்தானே; என்ற வினாக்களை உண்மையான தெய்வ பக்தர்களும் உலகப்பற்றை விட்ட ஞானிகளும் எழுப்புவர். அவர்களின் கருத்துகளும் நியாயமானவையே. எனினும் சமயத்தின் தோற்றம் வளர்ச்சி என்பனவும்,வழிபாட்டு முறைகளும் சரித்திர ஓட்டத்தோடும்,சமூக அமைப்புக்களோடும் தொடர்டையவை எனக் கருதும் ஆய்வறிவாளர்கள் பெரும் தெய்வம் சிறு தெய்வம் என்ற பாகுபாடுகளை சரித்திரவியல்,சமூகவியல்,மானிடவியல் , நாட்டுப்புறவியல்,தொன்மவியல் ஆகிய ஆய்வு நெறிகளின் பின்னணியில் விளக்குவதற்கு முயல்வர்

முதலில் நாம் சிறு தெய்வம் என்ற சொற்றொடரின் தோற்றத்தை நோக்கவேண்டும். இச்சொல் கி.பி.7ஆம்நூற்றாண்டில் பாடப்பெற்ற திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத்தில் வருகிறது. "சேன்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்" என்கிறார் நாவுக்கரசர். அவருக்கு முந்தி வாழ்ந்தவராகக் கருதப்படும் பறையர் குலத்திற் பிறந்த திருநாளைப்போவார் எனப் பெரிய புராணம் அழைக்கும் நாயனாரான நந்தனார் சிறு தெய்வங்களான காடன்,மாடன் ஆகியவற்றை வணங்கிப் பின்னால் பெரும் தெய்வமான சிவனைத் தேடிச் சிதம்பரம் புறப்பட்டவராவார்.

"பெரும் தெய்வம்" என்ற சொற்றொடர்; கி.பி 2ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட புறநானூற்றில் வருகிறது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாகக் கண்ட புறநானூற்றுப் புலவர் "இரு பெரும் தெய்வமும் உடன் நின்றார்" என பலராமனையும் திருமாலையும் இரண்டு வேந்தருக்கும் உவமிக்கின்றார்.

இப்படிப் பார்க்கும் போது சமூகத்தின் அடித்தள மக்கள் வழிபடும் தெய்வங்களை சிறுதெய்வங்கள் எனவும் மேல் தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களை பெரும் தெய்வங்கள் எனவும் அழைக்கும் வழக்கம் இருந்திருப்பதாகத் தெரிகின்றது.

சிறுதெய்வ வழிபாடுகளின் முதற் பண்பும் முக்கிய பண்பும் அவை பிராமணரால் பூசை பண்ணப்படாதவை என்பதாகும். வேத, ஆகம நெறி முறைகளுக்கு அமைந்த பூசை சிறுதெய்வங்களுக்கு



இல்லை. தேவார, திருவாசகங்கள் பாடி அவை பூசிக்கப்படுவதுமில்லை. சிறு தெய்வங்களுக்குரிய கிரியை முறைகள் வேறு. நாள்தோறும் ஆறு காலப் பூசை அவற்றிற்கு நடைபெறாது. அவற்றிற்க்குரிய விழாக்களும் பூசை முறைகளும் பெருந்தெய்வ முறைகளிலிருந்தும் வேறானவை.

ஓரிரு நாட்கள் வழிபாடு நடத்தும் முறையைச் சிறு தெய்வ வணங்க முறையிலேதான் காண முடியும். சிறுதெய்வக் கோயில்கள் வித்தியாசமானவை. பெருந்தெய்வக் கோயில்களிற் காணப்படும் விமானம்,கோபுரம்,உள்மண்டபம்,வெளிமணடபம் போன்றவை அங்கு இல்லை. கோயில்களும் அளவில் மிகச்சிறியவை. சில கோயில்கள் கட்டிடமில்லாமற்கூட இருக்கும். வருடாவருடம் குறிப்பிட்ட இடத்தில் (அது ஒரு மரமாக அல்லது பந்தலாக இருக்கும்) மக்கள் கூடி மரங்களும், புதர்களும், சூலம் முதலிய குறியீட்டுப் பொருட்களும் கூட தெய்வமாக எண்ணப்பட்டு வணங்கப்படும். ஒரு சிறு தெய்வக் கோயிலில் பலதெய்வங்களுக்குரிய பந்தல்கள் அமைக்கப்பட்டு பல சிறுதெய்வங்களையும் வணங்கும் பண்பு சிறுதெய்வ வழிபாடிற்குரியது.

பெரும் தெய்வங்களின் பெயரில் இருந்து சிறுதெய்வங்களின் பெயர்கள் வேறுபட்டிருக்கம். முருகன், சிவன், பிள்ளையார், திருமால், சக்தி என்பன பெரும் தெய்வங்களாம். வைரவர், காளி, மாரி, கண்ணகி என்பன சிறு தெய்வங்களாகும். தமிழகத்தில் ஆண் தெய்வங்களின் பெயர்கள் அய்யா, அப்பன், சாமி, (கருப்பையா, இருளப்பன், கருப்புச்சாமி) என்ற நாச்சி விகுதிகளோடும், பெண் தெய்வங்களின் பெயர்கள் அம்மன், நாச்சி(முத்தாலம்மன் பெரிய) என்ற விகுதிகளோடும் அமைந்திருக்கும் என்பர். ஈழத்தில் தமிழரிடையே கண்ணகியம்மன், மாரியம்மன், காளியம்மன் கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன், பேய்ச்சியம்மன் என்ற சிறு தெய்வவழிபாட்டு முறைகளுண்டு.

இச்சிறு தெய்வ உருவங்கள் பெரும் தெய்வ உருவங்களிலிருந்து சற்று வேறுபட்டவை. உருவம் இல்லாத சிறு தெய்வங்களே அதிகம். இச்சிறு தெய்வங்களுக்குப் பூசை செய்வோர் குருக்கள் என்று அழைக்கப்படுவதில்லை. பூசாரியர் அல்லது கட்டாடியார் என்றே அழைக்கப்படுவர். (பூசை செய்கின்றபடியினால் பூசாரி எனவும் கட்டுக்களைச் சொல்லிக் கொண்டு ஆடுகின்றபடியால் கட்டாடியார்) எனவும் அழைக்கப்படுகின்றார். இப்பூசாரிமார் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஒவ்வொரு சாதியிலிமிருந்து வந்தவராயிருப்பார். பூசாரித் தொழில் பிராமணர், வேளாளர் மத்தியில் பூசாரிமார் மரபு இல்லை.

பொதுவாக பிராமணரல்லாத எல்லாச் சாதியினரும் சிறுதெய்வ வழிபாடு செய்வர். பிராமணர் அல்லாத சாதியினரிடமே சிறுதெய்வ வழிபாடு அதிகமுண்டு. புலாலுண்ணாத வேளாளரிடத்திலும் சிறுதெய்வ வழிபாடு குறைவாகக் காணப்படுகிறது.

இச்சிறு தெய்வக் கோயில்களில் சாமியாட்டம் எனப்படும் பேயாட்டம் அல்லது தெய்வமேறி ஆடும் ஆட்டம் இடம்பெறும். ஒருவர் மீது தெய்வத்தினை (மாரி அம்மனோ, காளியம்மனோ, வைரவரோ) பூசாரி தன் மந்திரத்தினால் வரவழைக்க அக்குறிப்பிட்ட நபர் தன்னை அத்தெய்வமாக நினைத்து அத்தெய்வம் போல் அபிநயித்து ஆடுவார். பூசாரியின் உடுக்கடியும், பறையொலியும் அவர் ஆடலுக்கு உதவும். முன் கையிலே சிலம்பணிந்து, கையிலே வேப்பிலை தாங்கி உடுக்கொலிக்கும், பறையொலிக்கும் ஏற்ப அவர் தலை சுற்றி ஆடுவார். மக்கள் அவரைச் சாமி எனவும் தாயே எனவும் அழைத்து தம் குறை கூறி அத்தெய்வத்திடம் வாக்குக் கேட்டு ஆறுதல் பெறுவர். இத்தகைய ஆட்ட முறையும் தெய்வத்துடன் நேரடியாக நெருக்கமாக உரையாடும் முறையும் பெரும் தெய்வ வழிபாட்டில் இல்லை.

சிறுதெய்வ வழிபாடு வருடாவருடம் நடைபெறும். ஒரு குறிப்பிட்ட தினத்தில் கூடி கோயிற்கதவு திறந்து சில நாட்கள் விழா நடத்துவர். இச்சிறு தெய்வ வணக்கத்தின் இறுதி நாளானது ஏதோ ஒரு விழாவும், இரத்தப் பலியும் இடம்பெறும். இறுதி விழாவில் தாம் உண்ணும் உணவுவகைகளையே பொதுமக்கள் முன் வைத்து வணங்குவர். இதனைப் படையல் என அழைப்பர்.

பிராமணர், சைவ வேளாளர் தவிர்ந்த எல்லாச் சாதியினரும் ஏதோ ஒரு சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையவர்களே. எனவே சிறு தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய அனைவரும் புலாலுண்ணும் சாதியினரே. இரத்தப்பலி இக்கோயில்களில் இடம்பெறுவதும் இதனாலேயே.

(தொடரும்)

# சிவாநந்தா பழைய மாணவர் சங்கத்தின் வைர விழா மலருக்கான ஆக்கங்கள் கோரல்

மட்டக்களப்பு சிவாநந்தா தேசிய பாடசாலையின் அறுபதாவது அகவையை முன்னிட்டு நடக்கவிருக்கும் வைரவிழாவின் மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

வைரவிழா மலரின் தரம் மற்றும் ஆக்கங்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துகின்ற செயற்பாடுகளுக்காக வைர விழா மலர் பதிப்பாக்கக் குழுவினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் படைப்பாளிகளால் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

ஆவணப்படுத்தலின் முக்கியத்துவம் கருதி சுகவீனமுற்றவர்களும் வயது முதிர்வின் காரணமாக ஆக்கங்களை எழுத முடியாதுள்ளவர்களும் நேர்காணல் மூலமாக தங்கள் கருத்துக்களை ஆவணப்படுத்த விரும்பினால் பதிப்பாசிரியர் குழு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதனையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

ஆக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டோ அல்லது கையெழுத்துப் பிரதியாகவோ அமைந்திருக்கலாம். தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் ஆக்கங்கள் அமையலாம்.

படைப்புக்களின் வகைப்பாடு மற்றும் உள்ளடக்களின் தன்மைகளைப் பொறுத்து சான்றாதாரங்கள் மற்றும் உசாத்துணைகள் ஆக்கங்களில் உள்ளடக்கப்படுவது அத்தியாவசியமானது.

ஆக்கங்களின் தரமேம்பாட்டை உறுதிப்படுத்துகின்ற கடப்பாடு பதிப்பாக்கக்குழுவின் தலையாய கடமையாதலால், இலக்கண இலக்கிய வழுக்கள் ஆக்கங்களில் அவதானிக்கப்படுமிடத்து அவைகளை சீர்செய்யும் உரிமை பதிப்பாக்கக்குழுவிற்கு உண்டு.

ஆக்கங்கள் அனைத்தும் ஜுன் மாதம் 15ம் திகதியன்றோ அதற்கு முன்பதாகவோ கிடைக்கப்பெறல் வேண்டும்.

படைப்புக்களின் வகைப்பாடு: கட்டுரை, கவிதை, செய்தி, கதை, ஓவியம்,கேலிச்சித்திரம், மொழிபெயர்ப்பு, உரையாடல்கள், புகைப்படங்கள், ஆய்வுகள் மற்றும் பொருத்தமான படைப்புவகைகள்.

ஆக்கங்கள் அனுப்பப்பட வேண்டிய அஞ்சல் முகவரி: (பதிவுத் தபால் விரும்பத் தக்கது) மு.முருகவேல், இல. 17. கங்காணிப் பிள்ளையார் கோயில் வீதி, நாவற்குடா, மட்டக்களப்பு.

ஆக்கங்களை அனுப்புவதற்கான மின்னஞ்சல் முகவரிகள்: அரசரதயஉளைஹபஅயடை.உழஅ, ிசயவாநநிய012345ளுாபஅயடை.உழஅ.

மேலதிக தொடர்புகளுக்கு, மு.முருகவேல் 0777353437, காசுபதி நடராஜா 0773247132, கலாநிதி து. பிரதீபன் 0778436572, கி.கிரீசன் 0754324559.

# நாமறியாமல் எத்தனை பரிமாணங்கள் ஒழிந்திருக்கின்றன?

## ஆய்வுகள் மேலும் துல்லியமாக்கப்பட்டால் நாம் அறியாத பல பரிமாணங்களை அறிய முடியும்



நமது பிரபஞ்சத்தில் நாமறிந்து மூன்று இடம் சார்ந்த பரிமாணங்கள் உண்டு – நீளம், அகலம், உயரம் என்று எம்மால் ஒரு இடத்தில் இருந்துகொண்டு அவதானிக்கலாம் இல்லையா?

அடுத்ததாக நேரத்தையும் ஒரு பரிமாணமாக இயற்பியல் கருதுகிறது. எனவே எமது பிரபஞ்சத்தில் நான்கு பரிமாணங்கள் உண்டு; அல்லது நாமறிந்து நான்கு பரிமாணங்கள் உண்டு என்று சொல்லலாம். இதற்குக் காரணம் சில இயற்பியல் கோட்பாடுகள் எமது பிரபஞ்சத்தில் மூன்றுக்கும் அதிகமான இடம்சார்ந்த பரிமாணங்கள் இருக்கலாம் என்று கூறுகின்றன! அப்படியென்றால் அவை எங்கே?

மேலதிக பரிமாணங்களைப் பற்றிக் கூறும் கோட்பாடுகள் இந்தப் பரிமாணங்கள் மிக மிகச் சிறிய, அதாவது குவாண்டம் அளவில் இருக்கலாம் என்று கூறுகின்றன.

தற்போது இதனைப் பரிசோதனை செய்து பார்க்க ஜப்பான் ஆய்வாளர்கள் ஆய்வுகளை நடத்தியுள்ளனர். நானோ மீட்டார் அளவில் இந்த பரிமாணங்கள் இருக்கலாமா என்று நியுட்ரோன் கதிரைப் பயன்படுத்தி ஈர்ப்புவிசையை அது எப்படி நானோ மீட்டார் அளவில் பாதிக்கிறது என்று இவர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

அதற்கு முதல் ஏன் ஈர்ப்புவிசை என்று பார்த்துவிடுவோம்.

Standard Model எனப்படும் துகள் இயற்பியலின் அடிப்படையில் இந்தப் பிரபஞ்சம் நான்கு அடிப்படை விசைகளால் ஆளப்படுகிறது. வலிகுறை இடைவினை (weak interaction / weak nuclear force), வலிய இடைவினை (strong interaction / force), மின்காந்த விசை, ஈர்ப்புவிசை என்பவை தான் அந்த நான்கும்.

இவற்றில் வலிகுறை இடைவினை, வலிய இடைவினை மற்றும் மின்காந்த விசை என்பன குவாண்டம் அளவிலும், அதனைவிடப் பெரிய அளவிலும் எப்படி தொழிற்படுகின்றன என்று எம்மால் விளக்கும் படியாக கோட்பாடுகளை உருவாக்ககூடியதாக இருந்தது. ஆனால் இந்த ஈர்ப்புவிசை பெரும் தொலைவுகளில் எப்படி தொழிற்படுகிறது என்று நியுட்டன் அதன் பின்னர் ஐன்ஸ்டீன் ஆகியோர் விளக்கினாலும், மிக மிகச் சிறிய குவாண்டம் அளவில் அது எப்படி தொழிற்படுகிறது என்று எம்மால் இன்னும் சரியாக விளக்கும் அளவிற்கு சமன்பாடுகளை உருவாக்க முடியவில்லை.

நியுட்டனின் ஈர்ப்புவிசைக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு பார்த்தால், இரண்டு பொருட்களின் திணிவு அதிகரிக்க அதிகரிக்க அவற்றுக்கு இடையிலான ஈர்ப்புவிசையின் அளவும் அதிகரிக்கும்,

**கொஞ்சம் கஸ்டமான விஞ்ஞானந்தான் கொஞ்சம் முயன்றால் இதுவும் விளங்கும்**

அதேபோல இரண்டு பொருட்களுக்கு இடையிலான தூரம் அதிகரிக்க அவற்றுக்கிடையிலான ஈர்ப்புவிசையின் அளவும் குறைவடையும். மிகச்சிறிய அளவில் இதனைப் பரிசோதனை ரீதியாக மில்லிமீட்டர் அளவில் தான் அளந்து நிருபித்துள்ளனர் – குவாண்டம் அளவுடன் ஒப்பிடும் போது மில்லிமீட்டர் அளவு என்பதே மிகப் பெரியதுதான். சில குவாண்டம் ஈர்ப்புக் கோட்பாடுகள் இதனைவிடச் சிறிய குவாண்டம் அளவிற்கு செல்லும் போது நியுட்டனின் ஈர்ப்புவிசைக் கோட்பாடு முறிவடைந்துவிடும் என்று கணிக்கின்றன.

நான்கு அடிப்படை விசைகளில் ஈர்ப்புவிசையே மிகவும் பலவீனமான விசையாகும். இதற்குக்காரணம், ஈர்ப்புவிசைக்கு காரணமான துகள்களான gravitons (Standard Model அடிப்படையில்) ஏனைய பரிமாணங்களுக்குள் தப்பிச்சென்றுவிடுவதால் ஆகும் என சில இயற்பியலாளர்கள் கருதுகின்றனர். இப்படியான ஏனைய பரிமாணங்களுக்கு இதுவரை எந்தவிதமான பரிசோதனை ரீதியான ஆதாரங்களும் இல்லை. எனினும், M-Theory எனும் ஒன்றிணைக்கும் கோட்பாடு, அதாவது இந்த அடிப்படை விசைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒரே கோட்பாட்டில் விளக்கும் முறை (இதனை theory of everything அல்லது Grand Unified Theory என்றும் அழைக்கின்றனர்.) நமது பிரபஞ்சம் 11 பரிமாணங்களால் ஆக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது!

இப்படியான குழப்பம் நிறைந்த பரிமாணங்களை இலகுவாக விளங்கிக்கொள்ள பேராசிரியர் Matt Strassler பின்வரும் விளக்கத்தைக் தருகிறார்.


ஒரு பெரிய நீர்க் கால்வாயை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இருக்கும் நீர் மூழ்கிக்கப்பல் நீரில் மேலே, கீழே, முன்னே மற்றும் பின்னே என்று மூன்று பரிமாணங்களில் செல்லமுடியும் இல்லையா? அதுவே சிறிய படகு ஒன்றை எடுத்துக்கொண்டால், அது நீரின் மேலே முன்னுக்கும் பின்னுக்கும் செல்லலாம், அல்லது கால்வாயின் ஒரு பக்க கரையில் இருந்து அடுத்த பக்க கரைக்கு செல்லலாம். எனவே சிறிய படகு இரண்டு பரிமாணங்களில் பயணிக்கலாம் என்று நாம் சொல்லலாம். அதேவேளை பெரிய கப்பல் ஒன்றை எடுத்துக்கொண்டால், அது சரியாக கால்வாயின் ஊடாக ஒரு வழியில் மட்டுமே செல்லமுடியும். இதனை நாம் ஒரு பரிமாணம் என்று எடுத்துக்கொள்ளலாம். மனிதர்களாகிய நாமும் இந்தக் கப்பலைப் போன்று பெரியவர்களே. அதானால் எம்மால் பார்க்கக் கூடிய பரிமாணத்தின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. எம்மைவிடச் சிறிய அளவில் செல்லும் போது, அதாவது குவாண்டம் அளவில் செல்லும் போது எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருக்கும் பரிமாணங்களை விடவும் ஏனைய பரிமாணங்கள் அங்கே இருப்பதை நாம் உணரலாம்.

எனவே, இப்படியான ஏனைய பரிமாணங்கள் மிகச்சிறிய அளவில், குறிப்பாக நானோமீட்டர் அளவில் ஒழிந்திருக்கிறதா என்று அறிந்துகொள்ள ஜப்பானைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இதற்கு இவர்கள் உலகிலேயே மிகச்சக்திவாய்ந்த நியுட்ரோன் கதிரை உருவாகும் ஜப்பான் ப்ரோடான் துகள்முடுக்கி ஆய்வகத்தைப் பயன்படுத்தியுள்ளனர் (Japan Proton Accelerator Research Complex / J-PARC).

இந்தப் பரிசோதனையின் போது, நியுட்ரோன் கதிர்த் துடிப்புகளை எக்ஸான் அல்லது ஹீலியம் போன்ற சடத்துவ வாயு நிரம்பிய அறை ஒன்றினுள் செலுத்திவிட்டு அந்த அறையை தாண்ட குறித்த நியுட்ரோன் கதிர்த் துடிப்புக்கு எவ்வளவு

**சிறிசரவணா**

நேரமாகிறது என்றும் அந்தக் கதிர்த் துடிப்புகள் சிதறும் கோணங்களையும் அவதானிக்கின்றனர். நியுட்ரோன் ஏற்றமற்ற துணிக்கை என்பதால் மின்காந்தப் புலமோ அல்லது அது சார்ந்த பண்புகளோ இந்தப் பரிசோதனையைப் பாதிக்காது.




இந்தப் பரிசோதனையின் முடிவில் தெரியவந்தது என்னவென்றால், சப்நானோமீட்டர் அளவிலும், அதாவது 0.1 நானோமீட்டர் அளவைவிடச் சிறிய அளவிலும் நியுட்டனின் ஈர்ப்புவிசைக்கான விதி எந்தவொரு இடரும் இன்றி சரியாக தொழிற்படுகிறது என்பதே! அப்படியென்றால் இந்த சப்நானோமீட்டர் அளவில் கூட ஏனைய பரிமாணங்கள் இந்தப் பரிசோதனையை பாதிக்கவில்லை.

இதனால் ஏனைய பரிமாணங்கள் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிடமுடியாது. வேறு மாதிரி சிந்தித்துப் பார்த்தால், ஏனைய பரிமாணங்கள் நானோமீட்டர் அளவைவிடச் சிறியதாக இருக்கலாம் இல்லையா? எனவே மேற்குறிப்பிட்ட பரிசோதனையைச் செய்த விஞ்ஞானிகள், குறித்த பரிசோதனைக் கருவிகளின் துல்லியத்தன்மையை அதிகரித்து மீண்டும் இந்தப் பரிசோதனையைச் செய்துபார்க்க திட்டமிட்டுள்ளனர்.

மூலம்: Osaka University மற்றும் APS Physics

## கடுகுக்கதை

### ஆயத்தமாய் இருப்பது ஆபத்தைத் தடுக்கும்



தன் கொம்பை மரத்தில் தேய்த்து, கூர்மைப்படுத்தியது காட்டெருமை. இந்தச் சந்தர்ப்பத்தில் உனக்கு எதிரிகள் எவருமில்லை, பின் எதற்காக இப்போது கொம்பை கஸ்டப்பட்டு தீட்டிக் கூர்மைப்படுத்துகிறாய் என அவ்வழியாய் போன கீரிப்பிள்ளை கேட்டு வைத்தது. இப்போது இல்லை என்பது சரிதான் அதனால் ஆபத்து வரும்போது கொம்பை தீட்டிக் கொண்டு இருக்க முடியுமா? காட்டெருமை



கேட்டு வைத்தது. இவ்வருவரின் சம்பாஷனையை கேட்டுக் கொண்டிருந்த கிளிப்பிள்ளை இப்படிச் சொன்னது.



**ஏற்பாடு இல்லாமல் வாழ்பவன் சுவ்பாடு போடுவான் – முன் ஏற்பாட்டோடு வாழ்பவன் – வரும் வாகையோடு பாடுவான்.**

**கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா**



# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 12

தொட்டிலுப்பிள்ளை எப்பவும் தொட்டிலுக்கை கிடக்கிறதில்லை. அது இயண்ட அளவுக்கு வளருது. நாலு பக்கம் போகுது. ஏப்பிடியெண்டாலும் தன்னையும் முடிஞ்சா மற்றவையளையும் தக்கவைக்கப்பாடுபடுது.

உப்பிடித்தான் வின்சனும் ஒரு கட்டத்தில சுரேசப் பிரிய வேண்டியதாப்போச்சு. அவயளப்போலவே மட்டக்களப்பு பிள்ளையொண்டு இங்கனக்க வேலை செய்தது; அவளோட எப்பிடியோ பழக்கம்பிடிச்சு அவயட வீடுவாசல் எண்டு போகவர இருந்த சுரேஸ், அந்தப்பிள்ளையின்ர தங்கைக்காறிய விரும்பி கலியாணம் முடிச்சிட்டான். நான்தான் விசரி மாதிரி அவனைக் குழந்தையெண்டு நினைச்சிட்டன்.

இதுக்குள்ள வின்சனும் பிள்ளையொண்டுக்கு தகப்பனாயிட்டான். அவன்ர மனிசிக்காறி அவனை நல்ல கவனமாத் தாங்கு தாங்கெண்டுதான் தாங்கினாள். தாங்கிறதெண்டா அவன்ர நோய் சன்னதம் பத்தி வெளியால வந்து அவனைப் படுக்கயில வருத்தின போதும் அவள் கொஞ்சமும் அசராமல் கவனமாப்பாத்தாள். என்னவோ இயக்க வாழ்க்கைய என்னண்டு சொல்லுறது. உயிரும் நிரந்தரமில்ல. வாழுற இடமும் நிரந்தரமில்ல இயக்கம் அலுக்குளைஞசதோட வின்சன் எங்க போனான் எண்டது தெரியேல்ல. எப்பிடியோ கவிண்ட படகில பயணம் போன மாதிரி நாங்கள் ஆளுக்கொரு திசையாப் பிரிஞ்சிட்டம்.

வடக்கும் கிழக்கும் பிரிஞ்சு ரத்தக்களரியாப்போச்சு. எங்களுக்கா ஆரோட கதைக்கிறது ஆரோட கதைக்கக் கூடாதெண்டதில எந்த விவரமும் இல்லை. ஏராளமான பெடி பெட்டையள் இஞ்சதான் நிக்குது. எண்டாலும், பாம்பெண்டு தாண்டவும் முடியேல்ல, பழுதையெண்டு மிதிக்கவும் முடியேல்ல. நம்மோட நிக்கிறவன் நம்மட ஆள்தான் எண்டொரு அசுமாத்தம் காணுமளவும் நாங்கள் கவனமாத்தான் இருந்தம்.

ஆனா இயக்கத்தில முக்கிய பொறுப்பில இருந்த சிலர் பதவிமாறிட்டினம். மாறிட்டினமில்ல. மாத்திட்டாங்கள். நீங்கள் இதைப்போய் வெளியால கதைச்சுப் போடாதையுங்கோ. பின்ன உயிரைக்கையில பிடிச்சுக்கொண்டு ஓடிவந்தும்,

2 சிலருக்கு பழைய பதவி இல்லாமப்போச்சு. ஆரெண்டு கேளாதையுங்கோ ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது. இப்ப வின்சன் எங்க இருப்பான் எண்டது தெரியேல்ல ஆனா வின்சன் ஏத்தி வைச்ச கொடி உலகம் தெரியப்பறக்குது. நன்றி பொடியா நான் என்னத்தான் சொல்லுறன். வின்சனுக்கு அடுத்ததா என்னோட நெருங்கிப்பழகினது ரங்கன்தான.

இவனப்பத்தி விலாவாரியாப் பேச வேணும். ஆள் ஆரம்பகாலத்தில கருணாம்மான்ர டீமில வேவுக்காரனா நிண்டவனாம். அம்மானப்பத்தி கதைக்கயுக்க அவன்ர கண்ணில ஒரு மினுக்கமிருக்கும்.

“அம்மான் இண்டு சென்னா பெழை. அம்மாதான் அவரப்போல ஒருத்தர ஆராலயும் உருவாக்கிக்க ஏலாது அன்ரி“ என்பான் பரவசமாக, எங்க எவரோட நிண்டாலும் தப்புக்கண்டா தட்டிக்கேக்காம விடான்.

“எட உனக்கேன்ராப்பா சம்பளமில்லாத வேலை“ எண்டு எத்தினதரம் சொல்லியிருப்பன். எவ்வளவுதான் சொல்லு எருமைமாட்டில மழை பெஞ்சதுக்கு சமம். எவன்ர பெண்டில் எவனோட போனா எனக்கென்ன நம்மட பெண்டில் நாலு போரோட போனாத்தான்டா எனக்கு மதிப்பு எண்டிருக்கோணும். எட தப்பாச் சொல்லிட்டனோ நாலுபேரைப்போல எண்டு மாத்திவிளங்கிக் கொள்ளுங்க. ஆனா அவன் கேக்க வேணுமே நல்ல தொழில் நுட்பம் தெரிஞ்சவன் ரீவீயா டெக்கா...இல்ல வேறதான் எலக்ரோனிக்கு சாமானுகளா கெட்டுப்போனா அவன்தான் பெரிய டொக்டர்...அது என்ன பிழையா

**தமிழ்க்கவி**

இருக்கட்டன். ஓப்பிரேசன் செய்திண்டாலும் சுகப்படுத்திப்போடுறதில வலு விண்ணன்.

ஆனா என்ன அந்த முகாமுக்கும் இந்த முகாமுக்குமா பந்தெறிஞ்ச கணக்கில வீசிக் கொண்டிருந்தாங்கள். சும்மாதான் முகாம்வழிய நிக்கிறான் எண்டு நினையாதையுங்கோ. இவனைச் சுத்தி ஒரு கூட்டமே நிக்கும். ஆள் ஒரு விகடகவி. சும்மா நசுக்கிடாமல் விடுவான்ட ஒவ்வொரு ஜோக்கும் பெறுமதிதான் அதுக்கிள்ள வந்து விழும் பாருங்க அம்பாப்பாட்டு, தெம்மாங்கு, சந்தைப்பாட்டு எண்டு சொல்லி வேலையில்லை இடைக்கிடை மட்டக்களப்பான் கூத்துப்பாட்டுகளும்தான்.

3 எப்ப பார்த்தாலும் எதெண்டாலும் திண்டு கொண்டே இருக்கோணும். அவனுக்கு வயது இருவத்துநாலெண்டா நம்பவே மாட்டியள். ஆள் பூசினாப்போல உடம்பு ஒரு காலில்ல. அதில ஜெய்ப்பூர்கால்தான் பின்நேரத்தில அந்தக்காலோட அவன் வொலிபோல் அடிக்கயுக்க பாக்கோணுமே. காலுள்ளவன் அந்தத் துள்ளுத்துள்ளமாட்டான்.

அவன்ர குழப்படியள விட, இவன்ர திறமையள் அதிகம். ஆனா எங்கயும் ஒட்டாம இருந்தான். கொண்டே காட்டு பேசில போட்டிட்டாங்கள்“. என்னடா ஆளைக் காணேல்ல யெண்டு தேடினா ஒருநாள் வேற ஏதோ அலுவலா உயிலங்குளம் காட்டு முகாமுக்கு போனா ஆள் அங்க நிக்கிறான். “என்னடா பணிஸ்மென்டா“ எண்டு கேட்டா “பணிஸ்மென்டா? எனக்கா?அப்பிடி எனக்கு பணிஸ்மென்ற் போடுற அளவில் ஆர் இருக்கினம்.“ எண்டான். பிறகொரு நாள்.அவனை நிதித்துறை முகாமில கண்டன். அந்த நேரம் நான் தமிழீழ தொலைக்காட்சியில அம்பலம் எண்டொரு நிகழ்ச்சி செய்துகொண்டிருந்தன். அதில என்ன நடிக்க ஒராளத் தேட அங்க உள்ள போராளி ஒருத்தன்தான் சொன்னான் “ஏனன்ரீ உங்கட மகனக் கேட்டிருக்கலாமே திறமாச் செய்வான்.“ அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெளியே வந்த ரங்கன்,

“என்ன என்ன எனக்கும் சொல்லுங்க“ எண்டான். நானும் அவனிட்ட இப்பிடி இப்பிடி ஒரு நிகழ்ச்சி... அதில கதைக்கிற பாத்திரமொண்டு செய்வியா எண்டு கேட்டன். உடன ஓமெண்டிட்டான்“.இவன் முதலும் என்ர குயிலோசை நிகழ்ச்சியில அம்பாப்பாட்டொன்று பாடினவன்தான். நானும் இடக்கரடக்கலா,

“தம்பீ உனக்கொரு பிச்சைக்காரன்ர பாத்திரத்தை தந்தா நீ என்ன செய்வாய்?“ எண்டன்

“என்ன கொண்டு திரிஞ்சு பிச்சையெடுப்பன்“ எண்டானே பாக்கலாம். சுத்தி நிண்டவங்கள் எல்லாம் குபீரெண்டு சிரிச்சிட்டாங்கள். நான் அதத்தானே எதிர்பாத்தன்.

“ சரி நாளைக்கு படப்பிடிப்பு சரியா பின்நேரம் மூண்டு மணிக்கு வீட்டடிக்கு வா குளத்துக்கதான் லொக்கேசன்“ எண்டன். (வந்தானா?)

தொடர்ச்சி

# நுண் நீர்ப்பாசன முறைமை விவசாயிகளுக்கு அறிமுகம்!

விவசாய ஊக்குவிப்புச் செயற்றிட்டத்தின் கீழ் நிந்தவூர்ப் பிரதேச விவசாயிகளுக்கு நுண் நீர்ப்பாசன முறைமை ( Micro Irrigation Method) தொடர்பாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர் விரயத்தைக் கட்டுப்படுத்தி வினைத்திறனுடனான நீர்ப்பாசனத்தை



முன்னெடுத்தல் இப்புதிய பொறிமுறையின் நோக்கமாகும்.

இந் நிகழ்வு நிந்தவூர்ப்பிரதேசத்துக்குட்பட்ட அட்டப்பள்ளம் கிராமத்தில் நிந்தவூர்ப்பிரதேச விவசாயப்போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன்



தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக விவசாய உதவிப்பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் கலந்துகொண்டார்.

திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயப்பிரதிநிதிகள் பங்கேற்று இப்புதிய திட்டம் தொடர்பில் செய்முறைப்பயிற்சியும் வழங்கப்பட்டது.

புதிய நுண் நீர்ப்பாசனத்திட்டத்தின்கீழ் பாசனம் செய்யப்பட்ட பயிர்ச்செய்கையினையும் அதிகாரிகள் பார்வையிட்டனர். இம்முறைமையில் அளவான தண்ணீர் போதுமானது. தண்ணீர் விரயமாவதில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

# பொதுவேட்பாளரை நிறுத்த மீண்டும் முயற்சி

ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்கு போர் முடிவடைந்த பரபரப்புக்கு மத்தியில் மிகவும் பிரபல்யமாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அன்னப்பட்சி சின்னத்தில் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்ட போதிலும் இறுதியில் தோழ்வியே தழுவியிருந்தார்.

எனினும் 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொது செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து மீண்டும் அன்னப்பட்சி சின்னத்திலேயே பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டு வெற்றிக்கண்டார்.

ஐக்கிய தேசிய கட்சி, ஜாதிக ஹலஉறுமய, தேசிய ஐக்கிய முன்னணி, நவசமசமாஜ கட்சி, ஜே.வி. பி, தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளிட்ட 8 கட்சிகள் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொது வேட்பாளராக நிறுத்தியதோடு, ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் அரசியல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிலையில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் முன்னால் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்னிலங்கையின் பௌத்த சிங்கள மக்கள், மகாநாயக்க தேரர்களும் இதற்கு பச்சை கொடியை மறைமுகமாக காண்பித்திருக்கின்ற நிலையில் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களின் வாக்குகளை ஈர்த்துக் கொள்கின்ற ஒருவரை நியமிப்பது பற்றி ஐக்கிய தேசிய முன்னணி கவனம் செலுத்தி வருகின்றது.

அந்தவகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையோ அல்லது பெருவாரியான மக்களின் வாக்குகளை வெல்லுகின்ற சவால்மிக்க ஒருவரையோ பொது வேட்பாளராக நியமிப்பதற்கு வாய்ப்பு இருப்பதாக கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

# ஆதி தமிழர்கள் வாழ்ந்த குசலான் மலை

## குகைகளில் 07 தமிழ் பிராமி கல்வெட்டுக்கள்

இலங்கையில் ஆதி தமிழர்கள் வாழ்ந்த மலையொன்று இன்றும் மட்டக்களப்பு கரடியனாற்றுக்கு அருகே உள்ளது. குசலான் மலை என்று அதற்குப் பெயர்.

இம்மலை தாந்தாமலை பிள்ளையார் ஆலயத்தையும் உகந்தமலை வள்ளி அம்மனாலயத்தையும் நினைவுபடுத்துகின்றது.

உகந்தமலையைப் போல குசலான்மலை சுமார் 250அடி உயரமுடைய தட்டையான அமைப்புடைய குன்றாகும். 200அடி நீளமும் 100அடி அகலமும் உடைய இக்குன்றில் சுனைகள் மற்றும் பத்துக்கும் மேற்பட்ட குகைகள் காணப்படுகின்றன. படிக்கற்கள் காணப்படுகின்றன.

அவற்றில் பண்டைய தமிழர் வாழ்ந்த எச்சங்கள் காணப்படுகின்றன. அங்கு 07 ஆதித்தமிழரின் தமிழ்ப் பிராமி கல்வெட்டுக்கள் உள்ளதாக பிரபல தொல்லியலாளர் என்.கே.எஸ். திருச்செல்வம் குறிப்பிடுகின்றார்.

புராதன கட்டடமொன்று காணப்பட்டதற்கான பழைய செங்கற்கள் அங்கு காணப்படுகின்றன. இங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த



புதையல்கள் மற்றும் திரவியங்கள் புதையல் கொள்ளையர்களால் அபகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



திசன், பெருமகன் தேவகுத்தன், அபயன் நாகன், சுதசனன், குத்தன், சுதினன், சமனன் கஹபதி போன்ற ஆதித் தமிழ்ப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இங்கு ஆதி தமிழர்கள் வணங்கிய குலதெய்வம் வாழ்ந்த குகைகளை ஒரு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் சக பௌத்தர்களிடம் வழங்கியதாக பிராமி எழுத்துக்களில் கல்வெட்டுக்களில் பொறித்துள்ளனர்.

### குசலான் எங்கே அமைந்துள்ளது?

மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை செல்லும் பிராதனவீதியில் 14கிலோமீற்றர் தொலைவில் செங்கலடி எனுமிடமுள்ளது. அங்குள்ள பிரதான சந்தி கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்தது.

அந்தச் சந்தியிலிருந்து மேற்காக கறுத்தபாலமூடாக மகாஓயா செல்லும் வீதியில் 13 கி.மீற்றர் தொலைவில் கரடியனாறு எனும் பழந்தமிழ்க்கிராமம் உள்ளது. இக்கிராமத்தின் வடமேற்குத்திசையில் 3கி.மீற்றர் தூரத்தில் குசலான்மலை அமைந்துள்ளது.

இம்மலை உச்சியில் பண்டைய காலத்து வேல் தாங்கிய சிறுகோயில் இருந்தது.

இந்தக்குசலான் மலைக்கும் அருகிலுள்ள 7 சிறுகுன்றுகளுக்கும் மத்தியில்தான் கரடியனாறுக்குளம் இயற்கையாக அமைந்துள்ளது. முந்தெனி ஆற்றால் இக் கரடியனாறுக்குளம் இயற்கையாக உருவாகியதென்பது தெரிந்த விடயமே.

1948இல் இக்குளத்தின் அருகில் அணைக்கட்டுக்கள் கட்டி நீர்த்தேக்கமாகியது.

### குசலான் மலையில் வேல் நாக வழிபாடு!

2000 வருடங்களுக்கு முன் இங்கு வாழ்ந்த தமிழர்களின் வேல் வழிபாடும் நாக வழிபாடும் இங்கு இருந்ததற்கான தடயங்கள் ஆதாரங்கள் நிறையவே உள்ளன. அங்கு நாகநாதருக்கு பூஜைசெய்த இடங்களை இன்றும் காணலாம். மலையடியில் கொத்துப்பந்தல் அமைத்து பொங்கலிட்டு இவ்வழிபாட்டைச் செய்துள்ளனர்.

இன்றும் பாம்புப்புற்றைக்காணலாம்.


அன்று கரடியனாற்றில் விவசாயம் செய்துவந்த தமிழ்மக்கள் வேல் வழிபாட்டையும் நாகவழிபாட்டையும் தொடர்ந்து செய்துவந்தனர்.

அங்கு மலையில் தற்போதுள்ள ஆலயம் 4 சிறு மண்டபங்களைக்கொண்டு காணப்படுகின்றது. இருபக்கங்களிலும்

விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா



4தூண்கள் வீதம் 8தூண்கள் காணப்படுகின்றன. கருவறையில் முருகப்பெருமான் வைக்கப்பட்டுள்ளார். கூடவே விநாயகரும் கற்சிலையாக வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் முருகனின் 3 வேலாயுதங்களும் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில்



முருகப்பெருமானுக்கு திருவிழா எடுக்கப்படுகின்றது.

# விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

விளாவூர் யுத்தம் எனப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று இந்த ஆண்டுக்கான சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளாவட்டவான் ராஜா விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடாத்தும் விளாவூர் யுத்தம் உதைபந்தாட்ட போட்டியானது இம்முறையும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

விளாவட்டவான் ராஜா விளையாட்டுக்கழகம் தனது 48வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு இம்முறை நடாத்திய இந்த சுற்றுப்போட்டியில் கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் இருந்து 40 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றியிருந்தன. கடந்த 05ஆம் திகதி இந்த சுற்றுப்போட்டிக்கான போட்டிகள் ஆரம்பமாகி நடைபெற்றுவந்த



நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை இறுதிச்சுற்றுப்போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த இறுதிச்சுற்றுப்போட்டியில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டுகழகமும் மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த சுற்றுப்போட்டியல் 03-0 என்ற கணக்கில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

இந்த சுற்றுப்போட்டியின் இறுதி பரிசளிப்பு நிகழ்வு விளாவட்டவான்ராஜா



விளையாட்டுக்கழகத்தின் தலைவர் த.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபையின் தவிசாளர் செ.சண்முகராஜாவும் சிறப்பு அதிதிகளாக வைத்தியகலாநிதி கே.முரளிதரன், நாவற்காடு நாமகள் வித்தியாலய அதிபர் த.கோபாலபிள்ளை, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசசபையின் உறுப்பினர்களான ச.மோகன்,

அ.முத்துலிங்கம்,இ.நாகலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தினை மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டதுடன் மூன்றாம் இடத்தினை கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா விளையாட்டுக்கழகமும் நான்காம் இடத்தினை நாவற்காடு பாரத் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டது.

தொடரின் சிறந்த வீரராக முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக்கழகத்தினை சேர்ந்த எஸ்.மதுசாந்த் தெரிவுசெய்யப்பட்டதுடன் சிறந்த கோல் காப்பாளராக மகிழடித்தீவு மகிழை இளைஞர் விளையாட்டுக்கழக கோல்காப்பாளர் வி.பவிதன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த சுற்றுப் போட்டியில் சிறந்த கழகமாக திருகோணமலை விக்புட் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டது.



# சாமத்தியச் சடங்கும் அதனது சமூகத்தளமும் (இறுதிப் பகுதி)

"மாதவிலக்கு" என்கின்ற சொல்லுக்கான பொருளினையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மாதமொருமுறை பெண்ணுக்கு ஏற்படுகின்ற



கருமுட்டை வெளியேறுகின்ற உடலியல் செயற்பாட்டுக்கும் "மாதவிலக்கு" என்கின்ற சொல்லிற்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா? தொடர்பு இல்லையென்றால் தமிழ் பண்பாடும்

அதனது மொழியும் இவ் உடலியல் செயற்பாட்டினை விளக்குவதற்கான ஒரு சொல்லினை உருவாக்கமுடியாத வளமற்ற ஒரு மொழிக்குடும்பத்தைச் சார்ந்ததா என்பது எம் முன்னுள்ள கேள்வியாகும்.

நிச்சயமாக தமிழ் மொழி ஒரு வளமற்ற மொழி என எவரும் குறிப்பிடமாட்டார்கள். ஆகையினால் "மாதவிலக்கு" என்கின்ற சொல்லிற்கும் பெண்ணினுடைய உடலியல் செயற்பாட்டுக்கும் ஒரு இன்றியமையாத் தொடர்பு காணப்படுகின்றது. மாதவிலக்கு என்கின்ற சொல்லினை நாம் பிரிது நோக்குகின்றபோது மாதம் விலக்கு என்று வரும். மாதம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தினைக் குறிப்பதாக இருக்கின்ற அதேவேளை "விலக்கு" என்பது ஏதோ ஒன்றை தவிர்த்துக் கொள் என கட்டளையிடுவதாக இருக்கின்றது. இந்த இடத்தில் விலக்க வேண்டிய அந்த ஏதோ ஒன்று என்ன என்ற கேள்வி எழுகின்றது. பாலூட்டி விலங்குகளில் மனிதனைத் தவிர மற்ற எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே உடலுறவில் ஈடுபடுவதாக இருக்கும். மாட்டை எடுத்துக்கொண்டால் வருடத்துக்கு ஒரு முறையும் ஆடு வருடத்துக்கு இரண்டு முறையும் உடலுறவில் ஈடுபட்டு இனவிருத்தி செய்கின்றன. இடைப்பட்ட காலத்தில் அவை விலகியே இருக்கின்றன. ஆனால் மனிதன் இதற்கு எதிர்மாறாக மாதத்தில் பெருமளவு நாட்கள் உடலுறவில் ஈடுபட்டு சில நாட்கள் மாத்திரம் விலகியிருக்க வேண்டிய ஒரு சமநிலையை இயற்கை ஏற்படுத்தியுள்ளது. மாதம் ஒரு முறை

பெண்ணுக்கு ஏற்படும் உடலுபாதைகள் அவளது உடலுறவு ஊக்கத்தை குறைப்பதாகவும் உடல்வேதனையுடன் உடலுறவில் ஈடுபட முடியாமல் இருப்பதாலும் அவள் அக்குறிப்பிட்ட காலத்தில் தன்னை விலக்கிக் கொள்ளுமாறு ஆண்களுக்கு கட்டளையிடுகின்றாள். அதுவே இந்த "விலக்கு" என்பதாகும். இந்தக் கட்டளையானது சில சைகைகள், குறியீடுகள், பழக்கவழக்கங்கள் மூலம் உணர்த்தப்படுகின்றன. அவற்றை உணர்ந்து கொண்ட ஆண்களும் அந்த நாட்களில் அவளுடனான உடலுறவை விலக்கி இருக்கின்றார்கள். இந்த பழக்கவழக்கங்கள் தற்போதைய தனிக்குடும்பம் அல்லது கூட்டுக்குடும்பம் என்னும் குடும்ப அமைப்பு தோன்றுவதற்கு முன்னுள்ள நிலையாக இருக்க வேண்டும்.

எனவே இந்த "மாதவிலக்கு" எனும் சொல் புராதன பெண்ணின் வாழ்வியலில் அவளது உடல் நலத்தினையும் அவளுடைய விருப்பத்தினையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ் பண்பாட்டில் எழுந்த ஒரு அழகான பெண்ணியச் சொல்லாக இருக்கின்றது.

தந்தை வழிமுறைச் சமுதாயத்தில் மதநிர்வாகத்தினைப் பெண்கள் இழந்துவிட்டதனால், அவளது பாலினப் பண்புகள் அசுத்தமானவை என்று கருதப்பட்டன. அவளது பெண் தன்மையே கண்டனத்துக்காளாயிற்று. அவள் எல்லாப் பாவங்களுக்கும் காரணமாகிறாள். ஒரு ஏவாளாக, சூனியக்காரியாகக் கருதப்படுகிறாள்." (மேலது, பக். 396) தந்தைவழிச் சமுதாயத்துடன் இணைந்து அதனை மேலும் வளர்த்தெடுப்பதாக சமஸ்கிருதமயமாக்கம் இடம்பெறலாயிற்று. இதனால் பெண்ணுடல்சார்ந்த இந்த விடயத்தினை தீட்டாக, பெண் ஒதுக்கப்பட வேண்டியவளாக கட்டமைத்தது.

நன்றிமறவாமையும் விருந்தோம்பலும் தமிழர் பண்பாட்டில் மிக முக்கியமான பண்பாட்டு விழுமியங்களாக இருந்து வந்துள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். "என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்



மாதவிலக்கு என்பது பெண்ணியச் சொல்லே!

உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு" என திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். இது போலவே "சிலப்பதிகாரக் காப்பியத் தலைவி கண்ணகி தன் கணவனைப் பிரிந்ததால் வருந்தியதை

விட, அறவோரையும், அந்தணரையும் விருந்தினால் சிறப்பிக்க முடியாததற்காகவே அதிகம் வருந்தியதாகக் கூறப்படுகின்றது.

"அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்க் கோடலும் இழந்த என்னை" என்ற கண்ணகியின் கூற்று விருந்து ஒரு அறச் செயலாகத் தமிழ்ச் சமூகத்தில் மதிக்கப்பட்டது என்பதைப் புலப்படுத்துகின்றது." (முத்தையா.இ, 2013,பக். 54)
தமிழர்களிடத்தில் காணப்பட்ட இந்த

சிவரட்ணம் சுந்தரப்பிள்ளை

நன்றியுணர்வும் விருந்தோம்பலுமே சாமத்தியச் சடங்கின் இறுதி வைபவமான கொண்டாட்டமாக முடிகின்றது. அதாவது ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பிள்ளையின் பருவமடைதலுக்கு பத்தியம் பார்க்க வந்தவர்களுக்கும் நல்லெண்ணெய், முட்டை கொண்டு வந்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றியுணர்வுடன் அவர்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுத்து, வீட்டில் விருந்தோம்பல் செய்வதாக இருந்தது. ஆரம்பகால சமூகப் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப இவ்வைபவங்கள் அமைந்திருந்தன. ஆனால் இன்றைய சமூகப் பொருளாதார நிலைமைகளின் மாற்றம் காரணமாக வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுக்கும் நிலை மாறி கார்ட் அச்சிட்டு அழைப்பு விடுக்கும் முறையும் வீட்டில் இவ் வைபவத்தினை நடாத்த முடியாத நிலையிலுள்ளோர் மண்டபங்களில் நடாத்துவதாகவும் மாறியிருக்கின்றது. இந்த மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவைகளாக இருந்தபோதும் எமது பண்பாட்டுக்கு மாறான உணவுகளை பரிமாறுவதும் விருந்தாளியை கேவலப்படுத்தவதான நடவடிக்கைகளும் ஆடம்பரமான செலவுகளும் தவிர்க்கப்படவேண்டியவைகளாகும்.

கண்டதண்ணிவார்த்தலுடன் ஆரம்பிக்கும் இந்தச் சாமத்தியச் சடங்கு 30 நாட்களாக அந்தச் சமூகத்தில் பல சமூக ஒருங்கிணைப்பினையும் சமூகமயமாக்கத்தினையும் மேற்கொள்கின்றது. உற்றார் உறவினர்கள் தங்களுக்குள் இருந்த மனக்கசப்புகளை மறந்து ஒன்று கூடி மகிழ்வதும் பெரியவர்களை கனம்பண்ணி மரியாதை செலுத்துவதும் வீட்டுக்கு வந்தோரை விருப்புடன் விருந்தோம்பல் செய்வதுமான சமூகநடைமுறைகள் ஒரு சமூக உயிரிக்கு அடிப்படையான விடயங்களாகும். இந்த அடிப்படைகளைப் பயிற்றுவிக்கும் மையங்களாக இவ்வாறான சடங்குகள் காணப்படுகின்றன.

தற்போதைய ஊடக உலகும் வெகுஜனப் பண்பாடும் சமஸ்கிருதமயமாதலும் புதிய கோட்பாடுகளும் இவற்றை மூடநம்பிக்கைகளாகவும் அநாகரிகமான செயற்பாடுகளாகவும் கட்டமைத்து

தாக்குகின்றன. மற்றவர்களுடைய மூடநம்பிக்கை பற்றியும் அநாகரிகம் பற்றியும் பேசுவோர்கள் தாங்கள் எவ்வாறான நம்பிக்கைகளால் கட்டுண்டு கிடக்கிறோம் என்பது பற்றியோ அல்லது தங்களுடைய நடவடிக்கைகளில் காணப்படும் அநாகரிகத்தன்மை பற்றியோ எவ்வித பகுத்தறிவுத் தனமான சிந்தனைகளுமின்றி பேசுகின்றனர். ஒருவருடைய நம்பிக்கைகள், பழக்கவழக்கள் தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கும் விமர்சிப்பதற்கும் மற்றவர்களுக்கு என்ன தகுதி உண்டு என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

ஒருவருக்கு நாகரிகமாகத் தெரியும் ஒன்று இன்னொருவருக்கு அநாகரிகமாகத் தெரியும். எனவே நாகரீகம் அநாகரீகம் என்பனவெல்லாம் நாம் நாம் சார்ந்திருக்கின்ற கருத்தியல் தளம் சார்ந்த சார்புநிலைத்தன்மை வாய்ந்தவை என்பதை இச் சடங்குகளை விமர்சிப்பவர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் இவர்களது அரசியலையும் நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் "காலனியம் நம்மைத் திருத்தப்படவேண்டிய கீழைத்தேயமாகவும் கட்டமைத்து உருவாக்கிய கதையாடல்களை நாமறிவோம். இதன் பொருள் நம்முடைய மற்றமையை அங்கீகரிப்பது அல்ல நமது மற்றமையைக் கீழானதாக, திருத்தப்பட வேண்டிய ஒன்றாக, இயல்பிலிருந்து விலகியதாகச் சித்தரிப்பதே"(மாக்ஸ்.அ. 1997, பக்.16) அதே வேளை இவர்கள் புராதன பண்பாட்டுக் கலை நடவடிக்கைகள் தங்களுடைய இருப்புக்கும், மேலாண்மைக்கும் தேவையாக இருப்பின் அவற்றை முன்னின்று பாதுகாப்பவர்களர்களாக காட்டிக்கொள்வதோடு அதற்காக பல நியாயப்பாடுகளையும் முன்வைப்பார்கள்.

"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால உழைப்பும் சிந்தனையும் நம்மிடம் கொண்டு வந்து சேர்த்த சிந்தனைக் களஞ்சியத்தில் என்றும் அழியாத மதிப்புடைய அம்சங்களும் உள்ளன. அவை ஒருபோதும் அழியா, அவற்றை நாம் அழியவிடவும் கூடாது. அவற்றின் மதிப்பு பற்றிய உணர்வு இல்லாமல் போனதுதான் பூர்ஷ்வா ஆட்சி ஏற்படுத்திய சீரழிவின் முக்கிய அறிகுறியாகும். பூர்ஷ்வாக்களுக்கு அனைத்துமே வர்த்தகப்பொருளும் போர்க் கருவியும்தான் சமுதாயத்தில் அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் வென்றெடுத்த பிறகு அழிக்கப்பட்ட ஆன்மீகச் செல்வங்களைத்தானும் மனித குலம் திரும்பப் பெறுவதற்கான போராட்டக் கடமையை மேற்கொள்ள வேண்டும்" (ராஜதுரை.எஸ்.வி. ..............பக். 78-79)

எனவே புராதன விடயங்களை அணுகும் போது அவற்றின் பொருளாதார வரலாற்றுச் சமூகச் சூழமைவுகளின் பின்னணியினையும் அவை பெற்றிருந்த முக்கியத்துவத்தினையும் நாம் காணத்தவறக் கூடாது என்பதுடன் நவீன விடயங்களின் உள்வாங்கலையும் யாத்திரிகத்தனமாக இல்லாமல் சமூகப் புரிதலுடன் உள்வாங்கவும் வேண்டும். அப்போதுதான் எமது நடவடிக்கைகள் சமூகப்பயன் பாடுடையதாகவும் அர்த்தமுடையதாகவும் இருக்க முடியும்.

**ஒருவருடைய நம்பிக்கைகள், பழக்கவழக்கள் தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கும் விமர்சிப்பதற்கும் மற்றவர்களுக்கு என்ன தகுதி உண்டு என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.**

# மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

## அரசியல்வாதியாக மாறும் வாய்ப்பை தவறவிட்ட இலக்கியவாதி மருதூர்க்கொத்தன்

பல படைப்பாளிகள் தமது இலக்கியப்பிரதிகளை எழுதும்பொழுது இயற்பெயரை விடுத்து புனைபெயர்களில் அறிமுகமாவார்கள். பலர் தமது பிறந்த ஊருக்குப்பெருமை சேர்க்கும் வகையில் தமக்குத்தாமே ஊருடன் இணைந்த புனைபெயர்களை சூட்டிக்கொள்வார்கள். பின்னாளில் அவர்களின் இயற்பெயரை பிறப்புச்சான்றிதழ் - பதிவுத்திருமண சான்றிதழ் - மரணச்சான்றிதழ்களில்தான் காணமுடியும். இலக்கிய வட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் புனைபெயரே நிலைத்துவிடும்.


மருதூர்க்கொத்தன்

கிழக்கு மாகாணத்தில் இஸ்மாயில் என்ற பெயரில் ஒரு எழுத்தாளர்ருந்தார் எனச்சொன்னால் எவருக்கும் தெரியாது. மருதூர்க்கொத்தனையா சொல்கிறீர்கள்? என்று அவருக்கு மிகவும் நெருக்கமான சிலரே குறிப்பிடுவார்கள். கிழக்கு மாகாணத்தில் கல்முனைக்கு அருகாமையில் பெரிய நகரமும் அல்லாமல் சிறிய கிராமமாகவும் காட்சியளிக்காத கடலோர சிற்றூர் மருதமுனை.

இந்த ஊரில் மருதூர் ஏ. மஜீத்- மருதூர்க்கனி - மருதூர் வாணன் என்ற பெயர்களில் எழுதியவர்களின் வரிசையில் முன்னோடியாக இருந்தவர் மருதூர்க்கொத்தன். 1935 ஜூன் மாதம் 6 ஆம் திகதி அநுராதபுரத்தில் பிறந்த இஸ்மாயில் என்ற மருதூர்க்கொத்தன் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி மறைந்தார்.

மருதமுனையில்தான் வாழ்க்கைத்துணையை பெற்றார். மருதமுனையில் முன்னர் அரசினர் தமிழ் ஆண்கள் பாடசாலையாக விளங்கிய இன்றைய பிரபல்யமான அல் - மனார் மத்திய கல்லூரியில் பயின்ற காலத்தில் புலவர்மணி ஆ.மு. ஷரிப்புத்தீன் மற்றும் வைரமுத்து ஆகியோரின் மாணக்கராகவிருந்து அட்டாளைச்சேனை மற்றும் பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிருந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக கல்விப்பணிக்கு வந்தார். மனிதர்களின் வாழ்வை பெற்றவர்களும் ஆசிரியர்களும் நண்பர்களும்தான் தீர்மானிக்கிறார்கள் எனச்சொல்வார்கள். தான் பெண்ணெடுத்த மருதமுனை ஊரின் பெயரையே முதன்மைப்படுத்தி கல்விப்பணியையும் இலக்கியப்பணியையும் தொடர்ந்த மருதூர்க்கொத்தன் எனக்கு அறிமுகமானது 1975 ஆம் ஆண்டிற்குப்பின்னர்தான்.

மருதூர்க்கொத்தனும் அவரது நெருங்கிய உறவினரான மருதூர்க்கனியும் ( ஹனிபா) எமது இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிழக்கிலங்கையின் தூண்களாக விளங்கியவர்கள். கிழக்கில் கல்முனை - மருதமுனை - பாண்டிருப்பு - நீலாவணை முதலான கடலை அண்டிய ஊர்கள் ஈழத்து இலக்கிய உலகிற்கு ஆளுமையுள்ள பல படைப்பாளிகளைத் தந்திருக்கின்றன. அவர்களின் பெயர் விபரம் எழுதினால் ஒரு பட்டியலாகவே விரியும்.

அந்தப்பிரதேசங்களில் தடுக்கிவிழுந்தாலும் ஒரு கவிஞரின் வீட்டு வாசலில்தான் விழுவீர்கள் என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

மருதூர்க்கொத்தன் கதைகள் என்ற தொகுதி 1985 ஆம் ஆண்டு எனக்கு கிடைத்தது. அப்பொழுது இலங்கை வானொலியில் கலைக்கோலம் நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருந்தேன். தொகுதி கிடைத்தவுடனே படித்துவிட்டு நண்பர் ராஜஶ்ரீகாந்தனிடம் கொடுத்தேன். அவர் அதனைப் படித்துவிட்டு விமர்சனம் எழுதிக்கொண்டு இலங்கை வானொலி கலையகத்திற்கு வந்தார்.

அவரும் சிறந்த விமர்சன உரையை வானொலியில் பதிவுசெய்தார். அதனை மருதமுனையிலிருந்து செவிமடுத்த மருதூர்க்கொத்தன் நன்றி தெரிவித்து எனக்கு கடிதமும் எழுதினார்.

மருதூர்க்கொத்தனின் பாத்திரங்கள் சாதாரண மனிதர்கள். அவர்கள் கடின உழைப்பாளிகளாக சித்திரிக்கப்படுவார்கள். உழைக்கும் வர்க்கத்தினருக்காகவே அவர் தொடர்ந்து எழுதினார். யதார்த்த இலக்கியப்படைப்புகளை பிரதேச மொழிவழக்குடன் பதிவுசெய்த முக்கியமான படைப்பாளி அவர்.

ஈழத்து ஆக்க இலக்கியங்களில் பிரதேச மொழிவழக்குகள் தொடர்பாக ஆராயப்புகும் விமர்சகர்கள் - பல்கலைக்கழக மாணவர்கள் மருதூர்க்கொத்தனை தவிர்த்து எழுதமுடியாது. 1980 களில் கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகள் வெடித்து அமைதியின்மை ஏற்படுவது வழக்கமாகியிருந்தது. உணர்ச்சியின் உந்துதலில் ஆட்கடத்தல் - கொலை - தாக்குதல் - தீவைப்பு என்று நிலைமைகள் அடிக்கடி மோசமாகிக்கொண்டிருந்தன.






அவ்வேளையில் கொழும்பில் பம்பலப்பிட்டி தொடர்மாடிக்குடியிருப்பில் வசித்த இலக்கிய ஆர்வலரும் கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் முன்னாள் அதிபருமான மாணிக்கவாசகரின் இல்லத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டம் நடந்தது. அச்சமயம் கொழும்புக்கு வந்திருந்த மருதூர்க்கொத்தனும் அன்றைய கூட்டத்தில் கலந்துகொண்டார். சங்கத்தின் பணிகள் தொடர்பாக உரையாடுவதை தவிர்த்துக்கொண்டு கிழக்கின் நிலைமை பற்றியே அவரிடம் கேட்டுத்தெரிந்துகொள்வதில் அக்கறை காண்பித்தோம். வதந்திகள் பெருகி - யாரை யார் குற்றம் சுமத்துவது எனத்தெரியாமல் மனம்குழம்பியிருந்த எமக்கு மருதூர்க்கொத்தன் தெளியவைத்தந்தார்.

அவர் ஒரு முஸ்லிமாகவிருந்தபோதிலும் அந்தச் சமூகத்தினைச்சார்ந்து பேசாமல் நடுநிலைமையுடன் பல உண்மைகளை விளக்கினார். மனிதநேயமே அவரது குரலாகத்தென்பட்டது. மருதூர்க்கொத்தன் மிகவும் மனம்கலங்கியிருந்த காலப்பகுதி. மருதூர்க்கொத்தனிடம் குடியிருந்த இன - மத நல்லிணக்க இயல்புகள்தான் அவரை தெளிவுடன் பிரச்சினைகளை

**முருகபூபதி அவுஸ்திரேலியா**

அணுகச்செய்திருக்கும் என நம்புகின்றேன். மருதமுனையின் வரலாறு என்ற பதிவில் அவரைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மருதமுனை மண்ணை - எளியோரை - ஒடுக்கப்பட்டோரை ஜீவத்துடிப்புடன் தன் கதைகளில் பிரதிபலித்த கொத்தன் இன நல்லுறவுச்செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டார். தன் கதைகளிலும் சரி - தன் பேச்சிலும் சரி தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவைப்பேணியவர் இவர். கல்முனை சமாதான அமைப்பினருடன் இணைந்து இன நல்லுறவைப்பேணும் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். ஓர் அறிஞன் என்ற வகையில் இனப்பிரச்சினைக்காலங்களில் சமய நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தமிழ் - முஸ்லிம் இன உறவை வலுப்படுத்தினார்.

மருதூர்க்கொத்தனின் இந்த இயல்புகளை அவதானித்த ஒரு தமிழ் இன விடுதலை இயக்கம் - பின்னாளில் அவரையும் ஒரு அரசியல்வாதியாக்கப் பார்த்தது என்ற தகவல் எனக்கு தாமதமாகவே கிடைத்தது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை - மட்டக்களப்பு - அம்பாறை முதலான மாவட்டங்களில் முன்னர் ஆசிரியர்களாகவும் இலக்கியவாதிகளாகவும் ஊடகவியலாளர்களாகவும் சட்டத்தரணிகளாகவும் பணியாற்றிய சிலரை அரசியல் உள்ளிழுத்திருக்கிறது. செ.இராசதுரை - செழியன் பேரின்பநாயகம் , அஷ்ரப், மருதூர்க்கனி , செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன், "தராக்கி" சிவராம், திருமலை நவம், மட்டக்களப்பு நிருபர் நித்தியானந்தன் முதலானோர் இதுவிடயத்தில் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

இவர்களில் சிலர் அரசியல் படுகொலை செய்யப்பட்டனர். மருதூர்க்கொத்தனை அரசியலுக்கு இழுத்து அவரை ஒரு தேர்தலில் நிற்கவைப்பதற்கு அந்தத் தமிழ் இயக்கம் முனைந்தமைக்கு அவரிடமிருந்த நல்லிணக்க இயல்புகள்தான் அடிப்படை. ஆனால், மருதூர்க்கொத்தன் அந்த இயக்கத்தினரை சாதுரியமாக சமாளித்து இன்முகத்துடன் அனுப்பிவைத்தார்.

ஆயுதம் ஏந்திய சில தாக்குதல் சம்பவங்களுக்கு காரணமாகவிருந்த அவ்வியக்கம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் தேர்தல் சதுரங்க ஆட்டத்தில் கலந்துகொண்டு பின்னர் ஒதுங்கிவிட்டது.

மருதூர்க்கொத்தன் தீர்க்கதரிசனமானவர் என்பதற்கு அவரது அன்றைய அரசியல் புறக்கணிப்பும் சிறந்த முன்னுதாரணம். 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையில் நாடளாவிய ரீதியில் நடத்திய பாரதி நூற்றாண்டு விழாவின் கிழக்கு மாகாணத்தின் அமைப்புக்குழுவில் இயங்கியவர்களில் மருதூர்க்கொத்தனும் மருதூர்க்கனியும் அன்புமணியும் மிகவும் முக்கியமானவர்கள். சுறுசுறுப்பாக செயற்பட்ட இவர்கள் மூவரும் பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதில் உழைத்தார்கள். மட்டக்களப்பு பொதுநூலகத்தில் இலக்கிய சந்திப்புக்கும் ஒழுங்கு செய்தார்கள்.



இச்சந்திப்பில் நான் சந்தித்தவர்தான் சிவராம். அவர் பின்னாளில் இயக்க அரசியலுக்குச் சென்று, தராக்கியாக அறிமுகமாகி, அரசியல் ஆய்வு ஊடகவியலாளரானார். தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு.சி ரகுநாதன் மூத்த எழுத்தாளர் இளங்கீரன் ஆகியோருடன் கிழக்கிலங்கை பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளுக்காக உடன் பயணித்தேன். அந்தப்பயணத்தை மறக்கவே முடியாது. கடந்துசென்ற வசந்தகாலங்கள் அவை.

ரகுநாதன் - இளங்கீரன் - மருதூர்க்கொத்தன் - மருதூர்க்கனி -அஷ்ரப் - பாலகிட்ணர் - தராக்கி சிவராம் - சண்முகம் சிவலிங்கம் -அன்புமணி அனைவரும் விடைபெற்றுச்சென்றுவிட்டனர். அந்த நிகழ்ச்சிகளுக்கு நேரடி சாட்சியாக என்னுடன் இருக்கும் மற்றுமொருவர் இங்கிலாந்திலிருக்கும் எழுத்தாளர் அரசியல் ஆய்வாளர் பஷீர்.

மருதூர்க்கொத்தனின் நாற்பது சிறுகதைகளை தேடி எடுத்து மீண்டும் ஒரு மருதூர்க்கொத்தன் கதைத்தொகுதியை அவரது பிள்ளைகள் 2007 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளனர். அதனை அவுஸ்திரேலியா சிட்னியில் வதியும் கொத்தனின் புதல்வர் ஆரீ∴ப் எனக்குத் தந்தார்.

மருதூர்கொத்தனின் மாணவரான அட்டாளைச்சேனை தேசிய கல்விக்கல்லூரி விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அன்ஸார் பழீல் மௌலானா இந்நூலிற்கான முன்னுரையை வழங்கியிருக்கிறார்.

அந்த நூலை கையில் எடுத்து பிரித்துப்பார்த்தபொழுது பிள்ளைகளும் மாணவரும் அமைவதும் வரம்தானோ என்று யோசிக்கவைத்தது.


மருதூர்க்கொத்தனின் புதல்வர் ஆரீ∴ப் இஸ்மாயில் அவுஸ்திரேலியா சிட்டனியில் வசிக்கிறார். எமது அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய சங்கத்திலும் அவர் அங்கம் வகிக்கின்றார்.

(பயணங்கள் தொடரும்)



# குறுக்கெழுத்துப்போட்டி இல:–04

**அரங்கம் இரா. தவராஜா.**




### இடமிருந்து வலம்:

01. விலைமதிப்பள்ள உலோகம்.
03. வெற்றி அல்லது மரம்.
05. கறுப்புப் பறவை மல்லாக்கப் பறக்கிறது.
06. இசைத்தமிழ் சாதனை புரிந்த சிவாஜியின் திரைப்படம்.
08. மன்மதனின் மனைவி.
09. இரக்கப்படுவது குழம்பிக் கிடக்கிறது.
10. ஒத்துப்போவது குழம்பியிருக்கிறது.
13. கிழமைகளில் ஒரு நாள் இறுதியெழுத்தை இழந்து விட்டது.
14. தந்தை கடையெழுத்தைக் காணவில்லை.
15. மலர்.
16. பெண்களில் பலர் அணிய ஆசைப்படுவது. (வலமிருந்து இடம்)
17. வீரமிருகம் திரும்பிப் பாய்கிறது.

### மேலிருந்து கீழ்:

01. நரி இதனால் பேர் பெற்றது.
02. அழியாச் செல்வம்.
03. வைத்திய சாஸ்திரம்.
04. இதைத்தான் காக்கா வலிப்பு என்கிறார்கள்.
05. சுவையாக உண்ணும் திரவம் குழம்பிக் கிடக்கிறது.
07. குடும்பப் பெண் ஒழுங்காயில்லை.
11. இளைய சகோதரி.
12. விரலில் வளர்வது. (தலைகீழ்)
14. பேடி.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 31.05.2018க்கு முன்னர் அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) தொடர்ச்சி

தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயம் வரை தற்போதைய கல்முனைத் தொகுதியில் உள்ளடங்கியுள்ள பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை போன்ற கிராமங்களையும் உள்ளடக்கியிருந்தது. அதாவது அப்போதைய பட்டிருப்புத் தொகுதி (1974-1959) யின் தெற்கு எல்லை, கல்முனை, தாளவெட்டுவான் சந்திவரை வியாபித்திருந்தது. அதேபோல் தற்போது (1976ல் நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் பின்பு) சம்மாந்துறைத் தொகுதியின் கீழ் இருப்பதும் 1959 இலிருந்து 1976 வரை பழைய பொத்துவில் தொகுதியின் கீழ் இருந்ததுமான சவளக்கடை, சொறிக்கல்முனை, அன்னமலை, நாவிதன்வெளி, 6ம் கொலனி போன்ற தமிழ்க் கிராமங்களும் 1974 இலிருந்து 1959 வரை பழைய பட்டிருப்புத் தொகுதியிலேயே அடங்கியிருந்தன. 1959 வரை பட்டிருப்புத் தொகுதி என அழைக்கப்பெற்ற தேர்தல் தொகுதியின் எல்லை கல்முனை தானவெட்டுவான் சந்தியிலிருந்து கிட்டங்கித்துறையில் ஊடறுத்து அம்பாறைக்குச் செல்லும் பிரதான வீதிவரை பரந்திருக்கும்.

எனவே அம்பாறைமாவட்டத்தமிழர்கள் என்று இன்று குறிக்கப்படுவோர் அன்று அதாவது 1947 இலிருந்து 1959 வரை மட்டக்ளப்பு மாவட்டத்தில் அமுலிலிருந்த பட்டிருப்புத் தொகுதியின் தெற்கு எல்லைகளிலும் மற்றும் கல்முனை, பொத்துவில் தொகுதிகளிலும் வாழ்ந்தவர்கள். 1962 இல் அம்பாறை மாவட்ட உருவாக்கத்தின் பின்பு அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்படும் இவர்கள் இன்று அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் தொகுதிகளில் வடக்கே பெரிய நீலாவணையிலிருந்து தெற்கே குமுக்கன் ஆறு வரை (உகந்தை வரை) பிரதான முஸ்லிம்களுடன் கலந்தும் செறிந்தும் அம்பாறைத் தேர்தல் தொகுதியிலே சிங்களவர்களிடையே மிகமிக ஐதாகவும் வாழ்ந்து வருகின்றனர்.



1947,1952,1956ஆம் ஆண்டின் பாராளுமன்றப் பொதுத்தேர்தல்கள் 1946 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் தொகுதி எல்லைகள் மீழ் நிர்ணயத்தின் படி உருவாக்கப்பெற்ற தேர்தல் தொகுதியின் அடிப்படையிலேயே நடைபெற்றன. அதன்படி இன்று அம்பாறை மாவட்டத் தமிழர்கள் என அடையாளப்படுத்தப்பெறுவோர் அன்று கூடுதலாக வாழ்ந்த அன்றைய(1947-1959) கல்முனை, பொத்துவில் ஆகிய இரு தொகுதியும் பாராளுமன்றத்தில் முஸ்லிம் உறுப்பினர்களே பிரதிநிதித்துவப்படுத்தினர்.

குடித்தொகை – அப்போதைய மட்டக்களப்பு மாவட்டம்.

| ஆண்டு | மொத்த சனத்தொகை | தமிழர்கள் | முஸ்லிம்கள் | சிங்களவர்கள் | ஏனையவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1946 | 203,186 | 102,264<br>50.33% | 25,805<br>42.22% | 11,850<br>5.83% | 3,267<br>1.62% |
| 1953 | 270,493 | 130,381<br>48.20% | 106,700<br>39.44% | 31,174<br>11.52% | 2,238<br>0.84% |

அப்போதைய மட்டக்களப்பு மாவட்டத்தில் 1946 இல 5.83வீதம் ஆக இருந்த சிங்களவர்களின் விகிதாசாரம் 1953 இல் 11.52வீதம் ஆக அதிகரிக்கக் காரணமாயிருந்தது, இக்கல்லோயாக் குடியேற்றத்திட்டமே.

இத்திட்டத்தின் முழு நிதியும் இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்தே ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொழில்நுட்ப உதவிகளையும் உபகரணங்களையும் அமேரிக்க அரசாங்கமே வழங்கியிருந்தது. கல்லோயா அபிவிருத்தித்திட்ட எல்லையானது அக்கரைப்பற்றிற்கு தெற்கே சங்கமன்கண்டி வரை பரந்திருந்தது. அப்படியிருந்த போதிலும் அக்கரைப்பற்றுக்கு தெற்கே அமைந்திருந்த பிரதேசம் தமிழர் வாழ் பகுதி என்பதால் இப்பிரதேசத்தில் இத்திட்டமானது அரைகுறையாகவே வேண்டா வெறுப்புடன் ஒப்புக்காகவே அமுல்செய்யப்பட்டது. உதாரணமாக "கஞ்சிக்குடிச்ச ஆற்றுக்குளம்" அதன் நீரேந்து பரப்புடன் ஒப்பிடுகையில்(ஊயவஉாஅநவெ யுசநய) அளவில் சிறியதாகக் கட்டப்பட்டதுடன் இக்குளத்தின் கீழே வருகின்ற காணிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கும் வகையில் முறையான மதகுகளோ வாய்க்கால்களோ அணைக்கட்டுக்களோ அமைக்கப்பெறவில்லை. இதற்குக் காரணம் இப்பிரதேசத்தை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய முஸ்லிம் அரசியல்வாதிகளும் இத்திட்டத்தில் முக்கிய பணியாற்றிய இப்பிரதேச அரசியல் செல்வாக்குடைய முஸ்லிம் பொறியியலாளர் ஒருவரும் நில அளவையாளர் ஒருவரும் அக்கரைப்பற்றுக்குத் தெற்கே இத்திட்டத்தை முழுமையாக அமுல்செய்வதில் அக்கறையற்றிருந்ததேயாகும். மேலும் இத்திட்டத்தில் பணியாற்றிய அதிகாரிகள் மட்டத்திலிருந்த தமிழர்களும் பெரும்பாலும் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததால் அவர்கள் தாம் உண்டு, தம் தலையுண்டு, தம் குடும்பம் உண்டு என்ற மனப்பாங்குடன் பணிபுரிந்தார்களே தவிர, அவர்களுக்குக் கிழக்குமாகாணத் தமிழர்கள் மீது ஆத்மார்த்தமான அக்கறை இருக்கவில்லை.

அத்துடன் தமிழரசுக்கட்சியும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அரசியல் அரங்கிலே கோரிக்கையாகவும் கோஷங்களாகவும் முன்வைத்தவர்களே தவிர இக்குடியேற்றத்திட்டத்தின் கீழ் தமிழர்களைக் குடியேற்றுவதற்கான அல்லது இத்திட்டத்தின் கூறுகளைத் தமிழ்ப்பிரதேசங்களில் முழுமையாக அமுல் செய்வதற்கான அரசியல் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான கள வேலைகளை முன்னெடுக்கவில்லை. இதற்குக் காரணம் அக்கட்சி கொண்டிருந்த தேர்தல்மைய அரசியல் குணாம்சமும் யாழ் மேலாதிக்க சிந்தனைகளின் செல்வாக்குமே ஆகும். தமிழரசுக்கட்சியானது இன்றுவரை அதன் தேர்தல் மைய அரசியல் செயற்பாடுகளுக்கு அப்பால் கிழக்கு மாகாணத்தமிழர்களைச் சமூக பொருளாதார ரீதியாகக் கைதூக்கிவிடுவதில் அக்கறை செலுத்துவதாயில்லை. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது தமிழரசுக்கட்சியின் ஏட்டுச்சுரக்காய் அரசியலும் தமிழர்களுக்கு உதவாது.

மேலே கூறப்பெற்ற "கஞ்சிகுடிச்ச ஆற்றுக்குளம்" ஆனது முடிவுறாது அரைகுறையாக நிர்மாணம் செய்யப்பெற்று 1970 களில் கல்முனை நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபையினால் பாரம் கொடுக்கப்பட்டது. பின்னாளில் 1977 இல் பொத்துவில் இரட்டை அங்கத்தவர் தொகுதியின் இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலஞ்சென்ற எம். கனகரட்ணம் காலத்தில்தான் கஞ்சிகுடிச்ச ஆற்றுக்குளம் மேலும் ஆறு அடி உயரப்பெற்று, பெருப்பிக்கப் பெற்று முறையான மதகுகளும் வாய்க்கால்களும் அவசியமான அணைக்கட்டுக்களும் அமைக்கப்பெற்று இக்குளத்தின் கீழ் வருகின்ற காணிகளுக்கு முறையான நீர்ப்பாசன வசதி அளிக்கப்பெற்றது.

(தொடரும்)


HOTEL
NIRUTHA
Hotel Nirutha, in the historic town of Chenkalady, Batticaloa – in the East of Sri Lanka, is so conveniently accessed – being so near to the junction of two national roads – the A 5 / A 15. It is only minutes to the long, pure, golden stretches of sands of world renown – PASI-KUDAH beach, the Indian Ocean lapping on in eternal rhythm .



Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
Hotline: +94779990910 UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelniruthа.com

- Luxurious, air conditioned rooms with attached bath & mini bars in the room
- A well-equipped conference hall
- Banqueting hall suitable for a variety of events
- Secure parking
- Free WI-FI access from all areas of the premises
- Cable TV
- High quality massage equipment
- Karaoke facilities
- Front desk staffed 24 / 7


Hotel Nirutha's dining variety includes intercontinental food, local food, and south Indian foods prepared with the best quality local and international ingredients by the highly experienced international chefs of Hotel Nirutha. The in-house bar contains a wide selection of wine & spirits.




Ladies: Sarees, Salwar,Choli, Kurthis,Jewelry,ect... Mens: Kurthas, Suits, Shirts, Trousers, Shoes,ect... Kid's: Kurthas, Suits,Shirts,Salwar,Choli, Trousers,ect...
181, Galle Road, Colombo 06. 22/1, W.A.Silva Mawatha, Colombo 06.
+94 11 236 2334 + 94 11 236 2335 info@kamsinsfasion.com www.kamsinsfashion.com

PUSHPA CONSTRUCTION
Home Design & Builders
No 23, Pumping Station Road , Palameenmadu, Batticaloa
077 990 1403





FCC வழங்கும் இவ்வார சிந்தனை!

"தீதும் நன்று பிறர் தர வாரார்" என்கிறது சங்க இலக்கியம்
நம் வாழ்வில் நாம் அனுபவிக்கின்ற அனைத்திற்கும் நாமே பொறுப்பு

FCC SUPER MALL
4 Wings for Uplift Your life
உங்களின் வாழ்வை மேம்படுத்த நான்கு இறக்கைகள்...
PHARMACY — TIP-TOP HEALTH CARE SINCE 1937
SUPER MARKET — FOURAMS CITY CENTRE
BUDGET SHOP — FOURAMS CASH & CARRY
CAFETERIA — FCC Cafe & Bakers
வாங்குங்கள் சேமியுங்கள் கொண்டாடுங்கள்
ஒரே கூரையின் கீழ் வாழ்வின் அத்தியவசிய பொருட்தேவையை பூர்த்தி செய்ய அன்புடன் வரவேற்கின்றோம்
இல.16, மத்திய வீதி, மட்டக்களப்பு.
Tel: 065 22 22 722, Hot Line: 077 20 72 722 e-Mail: tiptopph @gmail.com